தமிழர் நேசன்.

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை.)

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."—திருக்குறள்.

தொகுதி 1. } சாளயுக்தஹு ஆனிமீ { பகுதி 6.

நான்கு வர்ணங்கள்.

[சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ T. R. வேங்கடராம சாஸ்திரியாரவர்கள், B. A; B. L; எழுதியது.]

ஹிந்துக்களைத் தொன்று தொட்டு பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வகுப்புக்களாகப் பிரிப்பது யாவரும் அறிந்த விஷயமே. அந்நான்கு வகுப்புக்களும் தனித்தனியே உற்பத்தியானவையா? அவைகளின் பரஸ்பர சம்பந்தம் யாது? ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பில் புகுவது உண்டா? என்ற விஷயத்தை இங்கு விசாரிக்கப் போகிறோம்.

முகவுரை.

2. வர்ணங்களைப்பற்றி நமது வேதம், சாஸ்திரம், புராணம் இதிஹாஸம் இவைகளில் பல இடங்களில் சொல்லியிருக்கிறது. புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் வர்ணங்களின் உற்பத்தியையும், பிந்திய வரலாற்றையும், விவரமாகப் பரியாலோசனை செய்து வரைந்திருக்கிறார்கள். இந்தக் கிரந்தங்களில் கூறியிருக்கும் அபிப்பிராயங்களை மாத்திரமே ஆதாரமாகக் கூறுவோம். கேவலம் நமது யுக்தி மூலமான வாதங்கள் செய்கிறதில்லை, வாக்கியங்களின் உண்மையான அர்த்தங்களை அறியவும், பரஸ்பர விரோதம் போல் தோற்றும் வாக்கியங்களை ஸமரஸப்படுத்தவும், எவ்வளவு நியாயம் வேண்டுமோ அவ்வளவு நியாயம் உபயோகியாத தீராது.

சரிதமெழுதுபவர் உண்மையை விளக்க வேண்டுமே தவிர, குறிப்பிட்ட கொள்கையை எவ்வாருவது நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் எழுதுவது உசிதம் இல்லை என்று யாவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆனால் எவ்வளவு நடுநிலைச் சுவபாவமுள்ளவருக்கும் ஒரு பக்கம் சார்வு அவர்களறியாமலே இருக்கக்கூடும். ஆயினும் நமது கிரந்தங்களால் உண்மை என விளங்கும் அபிப்பிராயத்தை நம்மாலியன்றவரை பக்ஷபாதமின்றி உரைப்போம்.

நம்முடைய தேசத்தில் இப்போது வழங்கி வரும் ஜாதிப்பிரிவினைகளையும், அவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் நியமங்களையும், சீர்திருத்துவதற்காக இவ்வியாசம் எழுதவில்லை. சீர்திருத்த வேண்டிய விஷயத்தில் ஆலோசிக்க வேண்டிய அம்சங்கள் பல. ஜாதி வித்தியாசங்களிருக்கவேண்டுமா? எவ்வாறிருக்கவேண்டும்? இப்போது இருக்கும் நிலைமையை மாற்றி அமைக்கவேண்டுமா? மாற்றி அமைப்பது சாத்தியமா? எம்மாத்திரம் சாத்தியமாகும்? எனப் பல கேள்விகள் உதிக்கின்றன. ஜாதி வித்தியாசத்தாலேயே தேசம் கெட்ட கேடு, என்பர் சிலர். ஜாதி வித்தியாசம் அமைத்தோமோ, எகிப்து முதலிய தேசத்து நாகரிகம் போல் நசிக்காது நம் நாகரிகம் இன்னும் பிழைத்திருக்கிறதோ, என்பர் சிலர். ஜாதி வித்தியாசங்களை வேரில்லாது களைந்து எறிய வேண்டுமென்பர் சிலர். ஜாதி வித்தியாசங்களைச் சீர்திருத்தி, மறுபடி ஊன்றி, நன்கு நடத்தினால், ஹிந்துக்களின் பழைய பெருமையை இன்னும் அடையலாம் என்பர் சிலர். இவ்வாறு ஒவ்வொரு விஷயத்திலும் வெவ்வேறான அபிப்பிராயங்களும் கொள்கைகளும் பிரசாரத்திலிருக்கின்றன. இவ்விஷயங்களை ஒன்றும் இங்கு நாம் விசாரிக்கப் போகிறதில்லை. மேல் சொல்லிய கேள்விகளுக்கு எம்மாதிரியான பதிலளிப்பவருக்கும் இங்கு நாம் விசாரிக்கும் விஷயங்களில் அபிப்பிராய மாறுபாடு இருக்கவேண்டாம்.

3. "வர்ணம்" என்பது இப்போது ஜாதி என்றழைக்கப்படும் பிரிவினைகளுக்குப் பழைய காலத்துப் பெயர். "வர்ணம்" என்பது முக்கியமான நான்கு பிரிவினைகளுக்குப் பெயரே அல்லாது, ஒவ்வொரு பிரிவினையிலுமுள்ள உள் பிரிவுகளுக்குப் பெயர் அல்ல. 'வர்ணம்' என்ற பதத்துக்கு முக்கியமான அர்த்தம், உருவத்துடன் தோற்றும் வெண்மை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு முதலிய நிறங்கள். நான்கு வர்ணத்தவரும் இந்நான்கு நிறங்களுடன் கூடிய உருவத்தவர் என்பது

பற்றியே பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனப் பகுக்கப் பெற்றார்கள் என்பது நமது முன்னோர்களின் கொள்கை. *

ஜாதி.

4. ஜாதி என்ற பதத்துக்கு "பிறப்பு" என்று அர்த்தம். முற்காலங்களில் ஒருவன் ஜனித்த குலம் என்று அர்த்தமுண்டு; பிறந்த கோத்திரம் என்று அர்த்தம் உண்டு; பிறந்த குலத்தவரின் வேதத்தின் சாகை அல்லது சாணம் என்று அர்த்தமுண்டு. இக்காலத்தில் அந்த அர்த்தங்களில் 'ஜாதி' என்ற பதத்தை உபயோகிக்கிறது வழக்கமில்லை. ஜாதி என்றால் முக்கியமான நான்கு பிரிவுகளையும், சில சமயங்களில் இப்பிரிவினைகளின் உட்பிரிவினைகளையுமே குறிப்பிடுவது வழக்கம்.

5. நான்கு பிரிவினைகளையும் நான்கு ஜாதிகள் என்று அழைப்பதாலேயே சில விஷயங்கள் தோன்றுகின்றன.

(a) ஜாதி என்பது பிறவியால் தீர்மானிக்கப்படும் விஷயம்.

(b) பிறவியால் ஒரு ஜாதியோன் பின்பு எக்காலத்திலும், எக்காரணத்தாலும், மற்றொரு ஜாதியோனாக முடியாது.

(c) பிறவியால் தீர்மானிப்பதென்றால் தாய்தந்தையர் எவ்வகுப்பினரோ அவ்வகுப்பினராகவே மக்கள் ஆதல் வேண்டும்.

(d) இது காரணத்தாலேயே தாய்தந்தையரிருவரும் ஒரே வகுப்பினராய் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு ஜாதி என்ற பதத்தின் அர்த்தத்தாலேயே தோற்றும் நியமங்கள் இப்போது வழங்கிவரும் நீதிக்கு ஒத்திருக்கின்றன. எப்போதும் இவ்வாறே வழங்கி வந்திருக்கின்றதா? அல்லது முற்கால முறை வேறா? என்று விசாரிப்போம்.

தனி உற்பத்தி ஆதாரங்கள்.

6 மேல் சொல்லியவாறு எப்போதும் நடந்து வந்திருக்குமேயாகில், இப்போது பிராம்மணர்களா யிருப்பவருடைய முன்னோர்கள் எவ்வளவு காலம் முந்திச் சென்றாலும் பிராம்மணர்களாகவே இருந்திருக்கவேண்டும். இந்தக் கொள்கைப்படி ஈசுவரன் சிருஷ்டியிலேயே நான்கு வர்ணத்தவர்களுக்கும் முன்னோர்களைத் தனித்தனியே படைத்திருக்க வேண்டும் என்று முடியும். மேல்கண்டபடி நான்கு வர்ணத்

* (மஹாபாரதம் சாந்திபர்வம் 186-வது அத்தியாயம் 5-வது சுலோகம்)

த்வர்களுக்கும் தனித்தனியே உற்பத்திதான் உண்மை என்பது பல ரபிப்பிராயம். இதற்கு ஆதாரமாக (1) புருஷஸூக்தம் (2) பகவத்கீதை (3) இவைகளை ஒத்துப் புராணங்களிலும் ஸ்மிருதிகளிலும் உள்ள வாக்கியங்கள், இவைகளை ஆதாரமாகக் கூறுவது வழக்கம்.

(a) புருஷ ஸூக்தம் சொல்லுகிறது.

"ब्राह्मणोऽस्य मुखमासीत् ।
बाहूराजन्यः कृतः ।
ऊरूतदस्ययद्वैश्यः ।
पद्भ्यां शूद्रो अजायत"

"பிராம்மணன் இவனது முகமாயினன். கைகளாக க்ஷத்திரியன் செய்யப் பெற்றான். இவன் துடைகளாயினன் வைசியன் என்போன். கால்களிலிருந்து சூத்திரன் உண்டாயினான்."

புருஷனைப் பசுவாக வைத்துத் தேவர்கள் யாகம் செய்தவுடன் அவன் சரீரத்திலிருந்து உலகம் படைத்ததை விளக்கும் போது நான்கு ஜாதிகளும் உண்டானதைச் சொல்லுவதால் சிருஷ்டியிலேயே உதித்த பிரிவினையாதல் வேண்டும் என்று தெரிகிறது.

(b) பகவத்கீதா வாக்கியம்.

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः

"நான்கு வர்ணப் பிரிவினை என்னால் செய்யப்பட்டது, குணம் கர்மா இவைகளின் பிரிவினைப்படி". "சிருஷ்டம்" என்ற பதமே சிருஷ்டியிலேயே உற்பத்தி என்று காட்டுகிறது.

(c) அனேக புராணங்களில் சிருஷ்டியிலேயே நான்கு ஜாதிகளும் படைக்கப் பெற்றதாகக் காட்டும் வாக்கியங்கள் உண்டு. எல்லாவற்றையும் திரட்டி வரைந்தால் விரியும். தனி உற்பத்தியைத் தெளிவாய்க் காட்டும் வாக்கியங்களில் சிலவற்றை மாத்திரம் உதாரணமாகக் கீழே வரைகிறோம்.

வாயு புராணம் 8-வது அத்தியாயத்தில்:—

मिथुनानां सहस्रंतु सोऽसृजद्वै मुखात्तदा ।
जनास्ते ह्युपपद्यन्ते सत्वोद्रिक्ताः सुचेतसः ॥

सहस्रमन्यद्वक्षस्तो मिथुनानाँ ससर्जह ।
ते सर्वे रजसोद्रिक्ताः शुष्मिणश्चाप्यशुष्मिणः ।
सृष्ट्वासहस्रमन्यत्तु द्वंद्वानामूरुतः पुनः
रजस्तमोभ्यामुद्रिक्ताः ईहाशीलास्तुतेस्मृताः
पद्भ्यां सहस्रमन्यत्तु मिथुनानां ससर्जह ।
उद्रिक्तास्तमसासर्वे निःश्रीकाह्यल्पतेजसः ॥

"அப்போது முகத்திலிருந்து ஆயிரம் ஸ்திரீ புருஷர்களை உண்டு பண்ணினர். அவர்கள் சத்துவ குணம் மேலாடினவர்களாகவும் நல்ல மனதுள்ளவர்களாகவும் இருந்தார்கள். (36)

"இன்னொரு ஆயிரம் ஸ்திரீ புருஷர்களை மார்பிலிருந்து படைத்தார்; அவர்கள் ரஜோ குணமிகுந்து பலவான்களாகவும் பலமற்றவர்களாகவுமிருந்தார்கள். (37)

"மற்றோராயிரம் துடையிலிருந்து படைத்தார். ரஜோ குணம் தமோகுண மிரண்டும் மிகுந்து ஆசை யதிகரித்தவர்களாக இருந்தார்கள். (38)

"இன்னொரு ஆயிரம் ஸ்திரீ புருஷர்களைக் காலிலிருந்து படைத்தார். தமோ குணமிகுந்து அலக்ஷ்மீகர்களாகவும் அற்பதேஜஸ் உள்ளவர்களாகவுமிருந்தார்கள்." (39)

இவ்வாக்கியங்களுக்குப் புருஷ ஸூக்தமே மூலம் என்பது முதல் நோக்கத்திலேயே விளங்குகிறது. வாக்கியங்களின் அமைப்பினால் தனித்தனி உற்பத்தி நான்கு ஜாதிகளுக்கும் கூறுகிறது என்பதில் சந்தேகமில்லை.

இம்மாதிரியே மநுஸ்மிருதியிலும் கூறியிருக்கிறது.

लोकानांविवृद्ध्यर्थं मुखबाहूरुपादतः ।
ब्राह्मणं क्षत्रियं वैश्यं शूद्रंचनिरवर्तयत् ॥

"உலகவிருத்திக்காக முகம், கை, துடை, பாதம் இவைகளிலிருந்து பிராம்மணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர்களைப் படைத்தார்."

ஆகவே இவ்வாதாரங்களால் சிருஷ்டியிலேயே நான்கு வர்ணங்களும் தனித்தனியே உற்பத்தியாயின என்று தெளிவாய் விளங்குகிறது, என்று வாதிக்கிறார்கள்.

உண்மையான அர்த்தம்:—

7. இதற்கு விரோதமாக ஒரே உற்பத்தியும், வெகு காலம் கடந்து நான்கு வகுப்பாகப் பிரிவினையும், காட்டுகின்ற வாக்கியங்களும் அபிப்பிராயங்களும் கீழே எழுதுகிறோம். அவ்வாக்கியங்களை வரையு முன் இந்நான்கு ஆதாரங்களின் உண்மையான முடிவை விசாரிப் போம்.

புருஷ ஸூக்தத்தை ஊன்றிப் பார்த்தால், தனி சிருஷ்டியில் தாற்பரியம் பொருந்தாது. ஒருக்கால் பொருந்து மென்றாலும் சந் தேகமற அவ்வாறே கருத்து என்று கூறமுடியாது. புருஷ ஸூக்த அநுவாகத்துக்குப் பத உரைப்படி அர்த்தம் கொள்ளுவது பிசகென மீமாம்ஸகர்களின் கொள்கை. தேவர்கள் யாகம் செய்தார்கள் என் பது கதை மாத்திரமே. புருஷனைப் பலி கொடுத்தார்கள் என்பதும் கதையே. யாகம் தேவர்களை உத்தேசித்துச் செய்யும் கர்மா வாகை யால் தேவர்களே யாகம் செய்தார்கள் என்பதற்குப் பத உரைப்படி அர்த்தம் செய்வது சரியல்ல. உலகம் முழுவதும் புருஷனாகவும், உலகத்தில் காணும் பதார்த்தங்களைப் புருஷனது அங்கங்களாகவும் பாவனை செய்யும்படி உபதேசமாகவே கிரஹிக்க வேண்டியதாகும். மேலும் ஏககாலத்தில் அனைத்தும் படைத்ததாகத் தாற்பரியமில்லை என்பதற்கு அதிலேயே வாக்கியமிருக்கிறது. முன் வாக்கியத்தில்

" पुरुषएवेदँसर्वम् । यद्भूतंयच्चभव्यम् "

"புருஷனே இது எல்லாம் (கண் முன் காணும் உலகெல்லாம்). உண் டாயிருப்பதும் உண்டாகப் போவதும் (அதுவே)" என்றிருக்கிறது.

இவ்வாக்கியத்தால் வர்ணப் பிரிவினை சிருஷ்டிக்கு வெகு காலம் பிந்தி ஏற்பட்டாலும் புருஷஸூக்தத்தின் பாஷை பொருந்து மெனக் காட்டுகிறது.

(b) பகவத்கீதாவாக்கியத்தில் "சிருஷ்டம்" என்ற வார்த்தை யால் தனி உற்பத்தி கூறியதாக எண்ணுவது சரியென்று தோற்ற வில்லை. நான்கு வர்ண சிருஷ்டி என்றால் நான்கு வர்ணத்தவரின் தனி சிருஷ்டி என்று அர்த்தம் செய்வது சரியல்ல. இம்மாதிரிவாக்கி யங்களுக்குச் சிருஷ்டியின் ஆதியிலேயே உற்பத்தி சொல்வதில் தாற் பரியம் என்றால், அனேக இடங்களில் விபரீதமான அர்த்தம் ஆகும். உதாரணமாக, ஜனங்களைப் பரிபாலனம் செய்வதற்கு அரசர்கள்

சிருஷ்டி செய்யப்பெற்றார்கள் என்றால் அரசாக்ஷி அமைக்கப் பெற்றது என்று மாத்திரமே யல்லாது, தனியாக அரசர்கள் என்று புது பிரம்ம சிருஷ்டி என எவரும் உரையார்கள். மேலும் குணம் கர்மாக்களுக்குத் தக்கபடி என்ற வார்த்தைகளோடு அமைந்த "சிருஷ்டம்" என்ற பதத்துக்குப் பிரிக்கப்பட்டது என்ற அர்த்தமே ஒவ்வும். இதில் சந்தேகமிருக்குமாயின் கீழ்வரும் வாக்கியங்கள் அதை அகற்றும்.

(c) புராண வாக்கியங்கள் தனிச் சிருஷ்டி செய்தது போல் தொனித்தாலும் அப்புராணத்திலேயே அடுத்து வரும் வாக்கியங்கள் குறித்துக் காட்டி இருக்கும் அபிப்பிராயத்தினால் தனிச் சிருஷ்டியில் எண்ணமிருக்க முடியாதெனத் தோன்றுகிறது. இது கீழே காணலாம்

(d) மநுஸ்மிருதிக்கும் புருஷஸூக்தமே மூலம். இந்தச் சுலோகத்துக்கு வியாக்கியானம் செய்த மேதாதிதி என்ற ஆசிரியர் பதஉரை சொல்லிப் பிறகு எழுதுகிறார்.

परमार्थतः स्तुतिरेषावर्णानां उत्कर्षापकर्षप्रदर्शनार्थं । सर्वेषांभूतानाँ प्रजापतिः श्रेष्ठः, तस्यापिसर्वेषामङ्गानां मुखं, ब्राह्मणोपि सर्वेषां वर्णानां प्रशस्यतमः, एतेनसामान्येन ब्रह्ममुखादुत्पन्नइत्युच्यते । मुखकर्माध्यापनाद्यतिशयाद्वामुखतइत्युच्यते ।

உண்மையில் இது வர்ணங்களுக்குப் புகழாக மாத்திரம் அவைகளின் உயர்வு தாழ்வைக் காட்டுவதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிலும் பிரஜாபதி உயர்ந்தவர். அவருடைய அங்கங்களிலும் முகம் உயர்ந்தது. எல்லா வர்ணங்களிலும் பிராம்மணன் உயர்ந்தவன். இந்த குணம் சமானமாயிருப்பதால் பிரம்மா முகத்திலிருந்து உற்பத்தியானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அல்லது முகத்தின் தொழிலாகிய படிப்பித்தல் முதலிய தொழில் விசேஷத்தால் முகத்திலிருந்தென்று சொல்லப்படுகிறது."

இந்த உரைக்காரர் அபிப்பிராயத்தில் புருஷஸூக்தத்துக்கு உண்மையான அர்த்தம், நான்கு உற்பத்தி ஸ்தானமாக வர்ணித்திருக்கும் அங்கங்களின் மேன்மைக்குத் தக்க மேன்மையும், காரியங்களும், உள்ளவர் என்பதேயாகும்.

மநுஸ்மிருதியும் அடுத்த நான்கு சுலோகங்களில் இந்த வாக்கியத்துக்கு நான்கு வர்ணங்களின் தனியுற்பத்தியில் தாற்பரியமில்லை எனக்காட்டுகிறது.

द्विधाकृत्वात्मनोदेहं अर्धेनपुरुषोभवत्
अर्धेननारीतस्यांसविराजमसृजत्प्रभुः ॥ ३२ ॥
तपस्तत्वासृजद्यंतु सस्वयं पुरुषोविराट्
तँमांवित्तास्यसर्वस्य स्रष्टारंद्विजसत्तमाः ॥ ३३ ॥
अहंपजाः सिसृक्षुस्तु तपस्तप्त्वासुदुश्चरं
पतीन् प्रजानामसृजंमहर्षीनादितोदश ॥ ३४ ॥

"தன் உடம்பை இரண்டாகச் செய்து, ஒரு பாதியால் புருஷனாயினான். ஒருபாதியை ஸ்திரீயாக்கி, அந்த ஸ்திரீயிடம் விராட்புருஷனை உண்டாக்கினான். தவம் செய்து அவ்விராட்புருஷன் எல்லாவற்றையும் படைத்த என்னை உற்பத்தி செய்தான் என்று அறியுங்கள். மகரிஷிகாள், நான் பிரஜைகளைப் படைப்பதற்காக கடும் தவம் செய்து பிரஜாபதிகளான பத்து மகரிஷிகளை முதலில் படைத்தேன்."

இதனால் 31-வது சுலோகத்தில் சொல்லியபடி பிரம்மா நான்கு வர்ணங்களையும் நேரில் படைக்கவில்லை. பிரம்மாவுக்கு விராட் பிள்ளை அவருக்கு மநு; அவரிடமிருந்தே எல்லோரும் உண்டானார்கள். எல்லோரையும் உண்டாக்க 10-மகரிஷிகள் மூல புருஷர்களாகப் படைக்கப் பெற்றார்கள் என்று முடிகிறது.

8. புராணங்களிலிருந்து எடுத்த வாக்கியங்களில் 1000 ஸ்திரீ புருஷர்கள் முதலில் ஒவ்வொரு ஜாதிக்கும் மூல புருஷர்களாகப் படைக்கப்பட்டார்கள்போல் எழுதியிருந்தபோதிலும் அடுத்து,வரும் வாக்கியங்களால் அவ்வாறு அர்த்தம் பொருந்தாதென மேலே சொன்னோம்.

மற்ற வாக்கியங்களுடன் சேர்த்துப் பார்த்தால், பத உரைப்படி அர்த்தம் கொள்ளுவது சரியல்ல எனக் காட்டுகிறது. வேண்டுமானால் சிருஷ்டியிலேயே விவித குணங்களுடன் ஜனங்கள் பிறந்தார்கள் என்று மட்டும் கொள்ளலாமேயல்லாது, குணங்களுக்குத் தக்கவாறு பகுத்து வர்ண பேதம் நிலை நிறுத்தியதாகக் கருத்துக் கொள்ள முடியாது.

ஒரே உற்பத்தி ஆதாரங்கள்.

(10) நான்கு ஜாதிகளுக்கும் தனிச் சிருஷ்டி சொல்லுவது பிசகு எனக் காட்டும் அம்சங்களாவன:—

எல்லோரும் மநுசந்ததி.

(a) மனிதன் என்ற அர்த்தத்தில் மநுஜ, மாநவ, மநுஷ்ய, மாநுஷ என்ற பதங்கள் உபயோகிக்கப்படுகின்றன. முதலிரண்டு பதங்கள் மநு என்ற பதத்தினின்றும், பின்னிரண்டு மநுஸ் என்ற பதத்தினின்றும் வருகின்றன. மநு, மநுஸ் என்ற பதங்கள் வைவஸ்வத மநுவின் பெயராக ரிக்வேதத்தில் காணலாம். மேல் சொல்லிய பதங்கள் நாலும் மனிதர்கள் மநுவின் சந்ததியார் என்ற கொள்கையைக் காட்டுகின்றன.

மேல் சொல்லிய மநுஸ்மிருதி சுலோகங்களும் மநு எல்லாருக்கும் முன் தந்தை என்ற அபிப்பிராயத்தையே காட்டுகின்றன. கோத்திரங்கள் பிரவரங்கள் ஆராயும் கிரந்தங்களிலும் இந்தக் கொள்கை முன்னிருந்ததாகக் காணுகிறது.

யாகம் செய்பவன், அக்நிபகவானை அழைப்பதற்கு, தன்குலம் கோத்திரம் முன்னோர்களாகிய ரிஷிகளிவர்களின் பெயர்களைச்சொல்லி அழைக்க வேண்டும். அப்போது யஜமானனது யோக்கியதையை அறிந்து அக்நிபகவான் யாகத்தில் வந்திருந்து, தேவர்களுக்கு ஹவிர் பாகத்தைச் சரியாய்க் கொடுத்து,யாகத்தைப் பயன் பெறச் செய்கிறார். தன்முன்னோர்களான ரிஷிகளைக் குறியாது வேறு ரிஷிகள்பேரால் அழைத்தால் யாகம் செய்த பயனை யஜமானன் அடையான். தாண்டிகள் என்ற ஸாமவேத சாகைக்காரர்கள் மதம் என்னவெனில்,

अपिहैके मानवेति मनुवदित्येकैकमार्षेयं सार्ववर्णिकंप्रवृणीते । कस्य हेतोरिति । मानव्योहिप्रजाइति [एकेशाखिनःतण्डिनःछन्दोगाः]

(காத்தியாயனர் ஸூத்திரம்.)

ஆனால் சிலர் நான் 'மநுசந்ததி' என்றும், 'மநுபோல்' நானு முன்னை அழைக்கிறேன் என்றும் ஒரு பிரவரமே சொல்லி எல்லா வர்ணத்தவரும் அழைத்தல் வேண்டும். ஏன்என்று கேட்டால் ஜனங்கள் மனுவை முன் தந்தையாகக் கொண்டவர்களாகையால் [சில சாகைக்காரர்கள் = தண்டிகள் ஸாமவேதிகள்].

இம்மாதிரியே மற்ற ஸூத்திரக்காரர்களும் ஒரு பிரவரமே போதுமானதென அபிப்பிராயமிருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

தாண்டியர்கள் மதத்தில் எல்லோரும் மநுவின் சந்ததி. மகாபாரதத்திலும், பிரளயத்திலிருந்து தப்பிய மநு சகல ஜனங்களையும் உற்பத்தி செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

मनुनाचप्रजाः सर्वाः सदेवासुरमानुषाः
स्रष्टव्याः सर्वलोकाश्च यच्चेङ्गयच्चनेङ्गति ॥

பாரதம் வநபர்வ 190§51.

"மநு எல்லா ஜந்துக்கள் தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள், எல்லா உலகங்கள், அசையும் பொருள்கள் அசையாப் பொருள்கள், இவையெல்லாம் படைத்தார்."

இந்த அபிப்பிராயம் சரி என்னில் எல்லோரும் ஒரு தந்தை வயிற்றில் பிறந்தவர்களே ஆவர்.

[ஆனால் இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்களில்லை. ஸூத்திரக்காரர்களில் காத்தியாயனரே ஒருபிரவரம் மாநவ என்று சொல்லுவது பிராம்மண க்ஷத்திரியர் தவிர மற்றவர்களுக்கே தகும் என்கிறார். புராணங்களிலும், மநுவும் ஏழு ரிஷிகளும் சேர்ந்தே மனிதர்களின் முன்னோர்கள், மநுமட்டும் இல்லை, என்று காட்டக்கூடிய வாக்கியங்களுமுண்டு. கீதா பாஷ்யத்தில் பாஷ்யக்காரரும் வியாக்கியானக்காரர்களும் மநுக்களும் ரிஷிகளுமே எல்லா ஜனங்களையும் படைத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்.]

வேறு பக்ஷமும் அதன் முடிவும்:—

(b) மநுவும் ஏழுரிஷிகளில் சிலருமே நான்கு ஜாதிகளுக்கும் மூலபுருஷர்கள் என்றாலும் தனித்தனி உற்பத்தி சாதிக்கமுடியாமல் போய்விடும். ஏழுரிஷிகளும் பிராம்மணர்கள் புராணப்படி மநுவின் பாட்டனாரும் அந்த ரிஷிகளில் ஒருவரே.

மநுவுக்குப் பெரும்பான்மையான புராணங்களின்படி பத்துப் பிள்ளைகள். மநுவை க்ஷத்திரியன் என்றும் முதலரசன் என்றும் சொல்லுவார்கள். அவர் பிள்ளைகளில் சிலர் பிராம்மணர்களாயினர். சிலர் தகப்பனைப்போல் க்ஷத்திரியர்களாகவே இருந்தார்கள். சிலர் வைசியராகவும், சிலர் சூத்திரராகவுமானார்கள். இதைக் கீழே விவரிக்கிறோம்.

வர்ணங்களின் பிரிவினை:—

(c) பிருகு குலத்தில் தோன்றின சௌனகமுனிவரும், பார்க பூமி என்பவரும், நான்கு வர்ண ஸந்ததிகளையும் பெற்றதாகச் சில புராணங்களில் சொல்லியிருக்கிறது. சில புராணங்களின் வார்த்தைக ளால் நான்கு வர்ணங்களை அமைத்தவர்கள் என்றும், நான்கு வர்ணத் தின் தர்மத்தை நிலைநாட்டியவர்கள் என்றும் கொள்ளலாம். எவ் வாறு அர்த்தம் கொண்டபோதிலும் முதலில் நான்கு வர்ணங்கள் இல்லை என்றும், முன் வர்ணங்களாகப் பிரிக்கப்படாதவர்களின் சந்த தியாரே வெவ்வேறு வர்ணங்களாகப் பகுக்கப்பட்டார்கள் என்றும் முடிகிறது.

गृत्समदस्यशौनकः चातुर्वर्ण्यप्रवर्तयिताभूत्

"கிருத்ஸமதருக்கு சௌனகர் (பிள்ளை) நான்கு வர்ணங்களை யும் பிரவர்த்திக்கச் செய்தவர்." விஷ்ணு புராணம் 4-வது அம்சம் 8-வது அத்தியாயம்.

भार्गस्यभार्गभूमिरतश्चातुर्वर्ण्यप्रवृत्तिः ।

பார்கருக்கு பார்கபூமி (பிள்ளை) அவரிடமிருந்து சாதுர்வர்ண்யப் பிரவிருத்தி ஏற்பட்டது.

விஷ்ணு—அதே அத்தியாயம்.

पुत्रोगृत्समदस्यापिशुनकोयस्यशौनकाः ।
ब्राह्मणाः क्षत्रियाश्चैव वैश्याः शूद्रास्तथैवच ॥

ஹரிவம்சம் 29§67,

तथागृत्समतेः पुत्राः ब्राह्मणाः क्षत्रिया विशः

அதே, 32§20.

वत्सस्यवत्सभूमिस्तु भार्गभूमिस्तु भार्गवात्
एतेत्वङ्गिरसः पुत्राजातावंशेथभार्गवे ।
ब्राह्मणाः क्षत्रियावैश्याः शूद्राश्च भरतर्षभ

அதே 32§39,40.

"கிருத்ஸமதருக்கு சுனகர்பிள்ளை; அவரிடமிருந்து பிறந்த சௌனகர்கள் பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர ஜாதியர்கள்,

"கிருத்ஸமதியின் பிள்ளைகள் பிராம்மணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்களாயிருந்தார்கள்.

"வத்ஸருக்கு வத்ஸபூமி (பிள்ளை). பார்கவரிடமிருந்து பார்கபூமி (பிறந்தார்). இவர்கள் அங்கிரஸ் புத்திரர்கள். மறுபடி பார்கவ வம்சத்தில் சேர்ந்தார்கள். அவர்கள் பிராம்மணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் சூத்திரர்களாக இருந்தனர்."

(d) மகாபாரதம் சொல்லுகிறது:—

नविशेषोस्ति वर्णानां सर्वं ब्राह्ममिदं जगत् ।
ब्राह्मणाः पूर्वसृष्टाहि कर्मभिर्वर्णतांगताः ॥
काममाभोगप्रियास्तीक्ष्णाः क्रोधनाः प्रियसाहसाः
त्यक्तस्वधर्मारक्तांङ्गाः द्विजाः क्षत्रतांगताः ॥
गोषुवृत्तिंसमाधायपीताः कृष्युपजीविनः ।
स्वधर्मान्नानुतिष्ठन्ति तेद्विजावैश्यतांगताः ॥
हिंसानृतप्रियाल्लुब्धाः सर्वकर्मोपजीविनः ।
कृष्णाः शौचपरिभ्रष्टाः तेद्विजाः शूद्रतांगताः ॥
इत्येतैः कर्मभिर्व्यस्ताः द्विजावर्णांतरंगताः ।
धर्मोयज्ञक्रियाचैषां नित्यंनप्रतिषिध्यति ॥
इन्येतेचतुरोवर्णाः येषांब्राह्मीसरस्वती
विहिताब्रह्मणापूर्वं लोभात्त्वज्ञानतांगताः ॥

சாந்திபர்வம் 186-10-15.

"வர்ணங்களில் வித்தியாசமில்லை. உலகெல்லாம் பிராம்மமே. பிராம்மணர்களே முன் உதித்தவர்கள். கர்மாவினாலே வர்ண (வித்தியாஸ)த்தை அடைந்தார்கள். அதிகமாகப் போகங்களில் பிரியமும், கொடுமையும் கோபமும் ஸாகஸங்களிலாசையுமுள்ள பிராம்மணர்கள், தம் தர்மத்திலிருந்து அகன்று, சிவந்த வர்ணமடைந்து க்ஷத்திரியர்களானார்கள். பசுக்கள் மூலமாய் ஜீவனம் செய்து, கிருஷியைக் கைக்கொண்டு, சுய தர்மம் விடுத்து, மஞ்சள் வர்ணம் அடைந்த பிராம்மணர்கள் வைசியர்களானார்கள். ஹிம்ஸா, அசத்தியம், இவைகளில் பிரியமுள்ள பிராம்மணர்கள் எல்லாத் தொழில்களிலும்சென்று,

சௌசாசாரங்கள் களைந்து, கறுத்து, சூத்திரத்தன்மை யடைந்தார்கள். இம்மாதிரி கர்மாக்களால் பிரிக்கப்பட்டு; பிராம்மணர்கள் இதர வர்ணங்களை அடைந்தார்கள். இவர்களுக்குத் தர்மமும், யாகக் கிரியையும் எப்போதும் நிஷேதிக்கப்படவில்லை. வேதரூபமான ஸரஸ்வதி பிரம்மாவால் இந்நான்கு வர்ணத்துக்குமே முன்பு ஏற்படுத்தப்பட்டது. பேராசையால் அறிவில்லாமை யடைந்தார்கள்."

(e) முதலில் நான்கு வர்ணங்களில்லை. கிருதயுகம் முடிந்தபிறகு வர்ணப்பிரிவு; சிருஷ்டிக்கு வெகுகாலத்துக்குப் பிறகுதான் நான்கு வர்ணங்களின் தர்மங்கள் ஏற்பட்டன. அதைப் பரிபாலிப்பதற்கே அரசர்களும் ஏற்படுத்தப்பட்டார்கள் என்று குறிப்பிட்டே சில இடங்களில் சொல்லியிருக்கிறது.

வாயு புராணம் 8-வது அத்தியாயத்தில்:—

धर्माधर्मौनतास्वास्तां कल्पस्यादौ कृतेयुगे ।
अप्रवृत्तिः कृतयुगे कर्मणोः शुभपापयोः ।
वर्णाश्रमव्यवस्थाश्च नतदासन्नसंकरः ॥
ग्राम्यारण्याः स्मृताह्येताः ओषध्यस्तु चतुर्दश ।
उत्पन्नाः प्रथमाह्येताः आदौत्रेतायुगस्यतु ॥ १४९ ॥
संसिद्धायांतुवार्तायां ततस्तासां स्वयंभुवः ।
मर्यादाः स्थापयामास यथारब्धः परस्परम् ॥ १५४ ॥
येवैपरिगृहीतारः तासामासन्विधात्मकाः ।
इतरेषांकृतत्राणाः स्थापयामासक्षत्रियान् ॥ १५५ ॥
उपतिष्ठन्तियेतान्वै यावन्तोनिर्भयास्तथा ।
सत्यं ब्रह्म यथाभूतं ब्रुवन्तोब्राह्मणाश्चते ॥ १५६ ॥
येचान्येप्यबलास्तेषां वैश्यसंकर्मसंस्थिताः ।
वैश्यानेवतानाहुः कीनाशान् वृत्तिसाधकान् ॥ १५७ ॥
शोचन्तःद्रवन्तश्च परिचर्यासु ये रताः ।
निस्तेजसोल्पवीर्याश्च शूद्रास्तानब्रवीत्तुसः ॥ १५८ ॥
तेषां कर्माणि धर्मांश्च ब्रह्मातुव्यदधात्प्रभुः ।

संस्थितौ प्राकृतायांतु चातुर्वर्ण्यस्यसर्वशः ॥ १५९ ॥
पुनःप्रजास्तु तामोहात् धर्मांस्तान्नपालयन् ।
वर्णधर्मैरजीवन्तः व्यरुध्यन्त परस्परं ॥ १६० ॥
ब्रह्मा तमर्थंबुद्ध्वातु याथातथ्येनवैप्रभुः ।
क्षत्रियाणां बलं दण्डं युद्धमाजीवमादिशत् ॥ १६१ ॥

57-வது அத்தியாயத்தில்:—

वर्णानां प्रविभागाश्च त्रेतायां संप्रकीर्तिताः ।
त्रेतायुगादिकेष्वत्र जायन्ते चक्रवर्तिनः ॥ ७२ ॥
इज्या दानं तपः सत्यं त्रेतायां धर्म उच्यते
तदा प्रवर्तते धर्मः वर्णाश्रमविभागशः ॥ ८१ ॥
मर्यादास्थापनार्थं च दण्डनीतिः प्रवर्तते

கல்பத்தினுதியில் கிருதயுகத்தில் தர்மம் அதர்மம் என்பது ஜனங்களிடத்தில் கிடையாது. கிருதயுகத்தில் நல்லது கெட்டது என்ற கர்மா கிடையாது. வர்ணம் ஆசிரமம் என்ற விவஸ்தையில்லை. ஸங்கரம் என்ற தோஷமுமில்லை. வீட்டுச் செடிகளும் காட்டுச் செடிகளும் இப் பதினன்கெனச் சொல்லப்பட்டிருக்கிறது. திரேதா யுகத்தினரம்பத்தில் (வீட்டுச் செடிகளும், காட்டுச்செடிகளும்) முதலிலுண்டாயின. 149. இவ்வாறு ஜீவன உபாயம் ஏற்பட்டபிறகு அவரவர்கள் கர்மாவுக்குத் தக்கபடி பிரம்மா அவர்களைப் பகுத்தார். 154. அவர்களுக்குள் (சொத்துக்களை) கைப்பற்றுகிறவர்களும் உபத்திரவிப்பவர்களுமானவர்களை (?) க்ஷத்திரியர்களாக, மற்றவர்களை ரக்ஷிக்கும்படி நியமித்தார். 155. அவர்களை அடுத்துப் பயமில்லாமல் உண்மை பகர்ந்து உள்ளபடி வேதத்தை உரைத்தவர்கள் பிராம்மணர்களானர்கள். 156. அவர்களில் இன்னும் சிலர் பலமற்று வைசியத் தொழில் செய்து, பயிரிட்டுப் பிழைப்பேற்படுத்தியவர்கள் வைசியரென்று அழைக்கப்பட்டார்கள். 157. வருந்தி ஓடிப் பிறருக்குழைத்தே ஒளி இழந்து வீரியம் குன்றியவர் சூத்திரரென்று வழங்கினர்கள். 158. அவர்களுக்குத் தர்மங்களையும் கர்மாக்களையும் பிரபுவான பிரம்மா செய்தார். இவ்வாறு எங்கும் நான்கு வர்ணங்களும் நன்றாய் ஏற்பட்டபிறகும், 159. ஜனங்கள் கர்மாக்களை சரியாய்ப் பரி

பாலிக்கவில்லை. வர்ண தர்மத்துக் கடங்கி வசிக்காமல் ஒருவருக்கு ஒருவர் விரோதித்து எதிர்த்தார்கள்.' அதை உள்ளபடி அறிந்து கொண்டு க்ஷத்ரியர்களுக்கு பலத்தையும் தண்டநீதியையும் ஆயுஸ் முழுவதும் யுத்தத் தொழிலையும் ஏற்படுத்தினர் பிரம்மா 16.

வர்ணப் பிரிவினைகள் திரேதாயுகத்தில் என்பார்கள் (69) திரேதாயுகமுதலே சக்கிரவர்த்திகள் ஜனிக்கிறார்கள். (73) யாகம், கொடை, தவம், சத்தியம் இவை திரேதாயுகதர்மம் எனப்படும். அக்காலத்தில் வர்ணாசிரமப் பிரிவினைப்படி தர்மம் பிரவர்த்திக்கிறது. (81) இந்த மரியாதையைக் காப்பாற்ற தண்டநீதி பிரவர்த்திக்கிறது. (82)

(1) கிருதயுகத்தில் வர்ணம் ஒன்றே எனவும் சில இடங்களில் வாக்கியங்களுண்டு.

பாகவதம் :—

एकएवपुरावेदः प्रणवःसर्ववाङ्मयः ।
देवो नारायणो नान्यः एकोऽग्निर्वर्णएवच ॥
पुरूरवसएवासीत् त्रयीत्रेतामुखेनृप

"முன் காலத்தில் வேதம் ஒன்றே; எல்லா வாக்குக்களின் ஸாரம் பிரணவம் ஒன்றே, ஒரே தேவன் நாராயணன், வேறில்லை; ஒரே அக்கினி, ஒரே வர்ணம், புரூரவனிடமிருந்து திரேதாரம்பத்தில் மும்மறை துவங்கிற்று, (47).

ராமாயணத்திலும் உத்தரகாண்டத்தில் ஒரு வர்ணம் கிருதயுகத்தில் எனக் கூறியிருக்கிறது.

अमरेन्द्र मयाबुद्ध्वा प्रजाः सृष्टास्तथाप्रभो
एकवर्णाः समभाषाः एकरूपाश्चसर्वशः ॥

அத்தியாயம் 30 § 21

இவற்றையெல்லாம் ஆலோசிக்குமிடத்து முதலில் வர்ண பேத்தியாசமில்லை என்றும், திரேதா யுகத்திலே ஒரு வேதத்துக்கு மூன்று உருவமும், ஒரு அக்கினியை மூன்றாகப் பிரிவும், மும்மறைகளுதவியால் யாகங்களமைப்பும் ஜனங்களின் குணங்களுக்குத் தக்கபடி பிரிவினையும், அவரவர்களுக்குரிய கர்மாவின் பிரிவினையும், நியமங்கள் நிறைவேற்ற அரசாக்ஷியும் ஏற்பட்டனவென்றும் தோற்றுகிறது.

பிரிவினை மெல்ல மெல்லத் திடப்பட்டது:—

11. இவ்வாறு பிரிவினை பூர்த்தி பெற்றதும் ஒரே காலத்திலில்லை. கொஞ்சம் கொஞ்சமாகவே பலமடைந்து, திரேதாயுகம் பாதி கடந்த பிறகு தான் வர்ணாசிரமங்கள் ஏதிக்கப்பெற்று, நிலை நிறுத்தப்பட்டன. மேல்கண்ட பாகவதப்படிக்கும் இன்னும் மற்றுமுள்ள ஆதாரங்களாலும் புரூரவன் காலம் திரேதாயுகம் என்று தெரிகிறது. அப்படியிருக்குமேயாகில் அதற்குப் பிறகு வெகு தலைமுறை பரியந்தம், தகுதியுள்ளவர்கள் வர்ணத்திலிருந்து வர்ணம் போய்க் கொண்டிருந்ததாகப் புராணங்கள் விளக்குகின்றன.

(a) மநுவுக்குப் பத்துப்பிள்ளைகள் என்று முன்னமேயே சொன்னோம். அவர்கள் பெயர் பிருஷத்திரன், (2) இக்ஷ்வாகு, (3) நிருகன் (4) திருஷ்டன் (5) சர்யாதி (6) பிராம்சு (7) கரூஷன் (8) நபாகன் (9) நேதிஷ்டன் (10) நரிஷ்யந்தன். முதல் பிள்ளை சூத்திரத் தன்மை யடைந்தான்; அடுத்த ஏழு பேர் க்ஷத்திரியர்கள்; 9 வது பிள்ளை வைசியனானன்; கடைசியில் சொன்னவரும் அவர் சந்ததியாரும் அக்கினிவேச்யாயன பிராமணர்கள். மேலே க்ஷத்திரியர் என்றும் வைசியர் என்றும் கூறியவர் குலத்தில் சிலர் பிராம்மணர்களாகி யிருக்கிறார்கள். அதைக் கீழே விவரிக்கிறோம்.

(b) அத்ரி முனிவர் வம்சத்தில் ஆத்ரேய பிராம்மணர்களும் சந்திரவம்ச க்ஷத்திரியர்களும் உண்டானார்கள்.

சந்திரவம்ச க்ஷத்திரிய அரசர்களில் சிலர் மறுபடியும் பிரம்மணியம் புகுந்தார்கள்.

(c) கோத்திர கிரந்தங்களில் ஊன்றிப் பார்த்தால் யாவரும் 4 மூலரிஷிகள் வம்சத்தில் பிறந்தவர்களாகக் காணும். அந்நான்கு ரிஷிகள் பிருகு, அங்கிரஸ், மரீசி, அத்ரி என்பவர்கள். பிருகுவை மூல புருஷனாக வரிக்கும் குடும்பங்கள் ஐந்து, (1) கிருத்ஸமத, (2) வீதஹவ்ய, (3) மித்ரயு, (4) வேந, (5) ஜமதக்நி என்பவர்கள்.

அங்கிரஸ் முதன்மையான குடும்பங்கள் எட்டு, (1) கோதம (2) பரத்வாஜ (3) கண்வ (4) முத்கல (5) பிருஷதச்வ (6) புருகுத்ஸ (7) அம்பரீஷ (8) ஸங்கிருதி

மரீசிகுலத்தில் மூன்று குடும்பங்கள் (1) கச்யபர் (2) வசிஷ்டர் (3) அகஸ்தியர் என்பவர்கள்.

அதரிகுலத்திலிருவர் (1) அத்ரி (2) விசுவாமித்திரர்.

ஆக நான்கு ரிஷிமூலமாகக் குடும்பங்கள் பதினெட்டு (18) இப் பதினெட்டுக் குடும்பங்களில் பிருகுக்களில் முதல் நான்கு, ஆங்கிரஸர்களில் மூன்று; அத்ரிகுலத்தில் விசுவாமித்திரர் ஆகப் பதினேரு குடும்பங்கள் க்ஷத்திரியர்களாக இருந்து, பிராம்மணிய மடைந்து, கோத்திரப் பிரவர்த்தகர்களானவர்கள்.

இப்பதினேரு பேர்களில்:—

கிருத்ஸமதர்	புரூரவனிடமிருந்து 4-வது தலைமுறை.
வீதஹவ்யன்	மநுவிடமிருந்து 52-வது தலைமுறை.
மித்ராயு	புரூரவனிடமிருந்து 37-வது தலைமுறை.
பிருஷதச்வன்	மநுவிலிருந்து 27-வது தலைமுறை.
முத்கலர்	புரூரவனிடமிருந்து 37-வது.
கண்வர்	,, 37-வது.
புருகுதஸன்	மநுவிலிருந்து 23-வது.
அம்பரீஷன்	,, 23-வது.
ஸம்கிருதி	புரூரவனிடமிருந்து 28-வது.
விச்வாமித்திரர்	அத்ரியிடமிருந்து 13-வது.

இதனால் சூரிய சந்திர வம்சங்களில் 50-தலைமுறை பரியந்தம் கூட க்ஷத்திரியர்கள் பிராம்மணியமடைய முயன்றதாகத் தெரிகிறது.

சாதுர் வர்ண்யம் பிரவர்த்தி செய்வித்ததாகச் சொன்ன சௌனகர் புரூரவனிடமிருந்து 5-வது புருஷர். அவர் தகப்பன் கிருத்ஸமதர். பிராம்மணியம் புகுந்தவர். கர்கபூமி என்பவருக்கும் நான்கு வர்ண ஸ்தாபனம் செய்ததாகப் புகழ் உண்டு. அவர் அதே குலத்தில் 25-வது தலைமுறை. வெகு தலைமுறைகளாகப் பிரயத்தினம் செய்து நிலை பெறுது, காலம் கடந்து, மெதுவாக வர்ணப்பிரிவுகள் திடப்பட்டவைகள் போலும்.

வர்ணாந்தரம் புகுவது.

இதுவரை கூறியதால் பிராம்மணர்கள் க்ஷத்திரியர்களானதும் க்ஷத்திரியர்கள் மறுபடி பிராமணிய மடைந்ததுமே தெரிகிறது.

(c) மநுவின் பிள்ளை நேதிஷ்டன் வைசியனானன். அவன் பிள்ளை நாபாகன். அவன் பிள்ளை பலந்தனன். அவன் பிள்ளை வத்ஸப்ரி என்பவன். இவர்கள் வம்சத்தில் மருத்தன் என்ற பெரிய சக்கிரவர்த்தியும் வைசாலி தேசத்தரசர்களும் உதித்ததாக விஷ்ணுபுராணம் கூறுகிறது. நேதிஷ்டன் வைசியனானல் அவன் வம்சத்தில் சக்கிரவர்த்திகள் எவ்வாறிருக்க முடியும் என்றாலோசித்து, ஸ்ரீதரர் என்ற

வியாக்கியானக்காரர் சொல்லுகிறார்:—நேதிஷ்டன் வைசியனுக்கு முன்னமேயே பிள்ளைகள் பிறந்து விட்டமையால் அவர்கள் க்ஷத்ரியர்களாக இருப்பதிலும் அரசர்களாக இருந்ததிலும் தவறில்லை என்று சாதிக்கிறார். ஆனலிச் சமாதானப்படி அக்காலத்தில ஒருவன் ஒரு ஆயுள் காலத்திலேயே சில போது ஒரு ஜாதியோனுகவும் பிற் காலம் வேறு ஜாதியோனுகவுமிருப்பது சாத்தியமெனக் காட்டும். அதுவும் தவிர இச்சமாதானம் கோத்திரப் பிரவர கிரந்தங்களைக் கவனியாது எழுதியதுபோல் படுகிறது. வைசியர்கள் பிரவரம் விரிக்குமிடத்தில் பாலந்தன, வாத்ஸப்ரி; மாங்கில என்று அழைக்கும்படி விதித்திருக்கிறபடியால் பலந்தன, வத்ஸபரி இருவரையும் வைசியராகவே ஸூத்திரக்காரர்கள் கணித்திருக்கிறார்கள். அவ்வாறு வைசியரானவர் சந்ததியில் மறுபடி க்ஷத்திரியர் ஆவது சாத்தியமெனக் காட்டுகிறது.

(d) ஹரிவம்சத்தில் மநுவின் பிள்ளை வைசியனுகப் போனவன் குலத்திலிருவர் மறுபடி பிராம்மணர்களானதாகச் சொல்லுகிறது.

नाभागादिष्टपुत्रौद्वौवैश्यौब्राह्मणतांगतौ

"நாபாகாதிஷ்டனின்இரண்டுபிள்ளைகள் வைசியர்களாகஇருந்தவர் பிராமணியமடைந்தார்கள்."

மேலுபாக்கியானங்களால் பிராம்மணர்கள் க்ஷத்திரியராயிருக்கின்றார்கள், க்ஷத்திரியர் பிராம்மணராயிருக்கிறார்கள். பிராமணர் வைசியராகி, வைசியர் பிராமணராயிருக்கிறார்கள். க்ஷத்திரியர் வைசியராகவும் வைசியர் க்ஷத்திரியராகவும் ஆயிருக்கிறார்கள். பிராம்மணர்கள் பரம்பரையாகச் சூத்திரராகவும் ஆயிருக்கிறார்கள்.

சூத்திரர்கள் மேல் பிரிவு சென்றதாக வாக்கியங்கள் கிடையாது. மகா பாரத முதலிய கிரந்தங்களில் சில இடங்களில் பிறப்பு மாத்திரமே போதாது குணம் வேணுமென்று வற்புறுத்து மிடங்களில், "பிராம்மண குணமில்லாத பிராம்மணன் பிராமணனல்லன். பிராம்மண குணமுள்ள சூத்திரன் சூத்திரனல்லன்" என்று உரைத்திருப்பதுண்டு. பிராம்மண குணமுள்ளவன் எப்பிறவியானுலும் பிராம்மணனே என்று அர்த்தம் கொண்டாலல்லாது சூத்திரன் பிராம்மணியமடைந்ததாகக் குறித்துக் கூறும் ஆக்கியானங்கள் இல்லை.

(இன்னும் வரும்.)

தந்த சுத்தி.

[ம-ள-ள-ஸ்ரீ, Dr. A. Y. நாராயணையர் L. M. & S. எழுதியது.]

(221-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

விடியற்காலத்தில் எழுந்து வாசஸ்தானத்தை விட்டு மேற்கு நோக்கி முக்கால் மைல்தூரம் சென்று கைகால் கழுவிக்கொண்ட பிறகு தந்த சுத்தி செய்வது ஹிந்து மதாசாரப்படி சுகாதார ஏற்பாடு. மேல் நாட்டவர்களுக்குள் இரவு படுக்கைக்குப் போகும்பொழுது தந்தசுத்தி செய்வது நலம் என்ற கொள்கை ஒன்று உண்டு. காலையில் தந்த சுத்தி செய்வது அத்யாவசியமே: இரவிலும் சுத்தி செய்வதனால் அதிகக் குணந்தான். உண்மையாதெனில், ஒவ்வொரு தடவை ஆகாரம் செய்த பின்னும் கொஞ்சம் தந்த சுத்தி செய்து வாயைக் கொப்புளிப்பது அவசியம். ஆனால் காலையில் எழுந்தவுடன் தந்தசுத்தி செய்யாமல் ஏதேனும் ஆகாரம் உட்கொள்ளுவது மிகக் கேவலமான வழக்கமே. ஐரோப்பியர்கள் காலையில் படுக்கையிலிருந்துகொண்டே பெட் டீ (Bed tea) சாப்பிடுவது இவ்வபிப்பிராயத்துக் குள்ளடங்கியது.

தந்தசுத்தி, என்பதைப் பல் தேய்த்தல் அல்லது பல் விளக்குதல் என்று தமிழில்சொல்வது வழக்கம். அதாவது பற்களின்மேலும் இடுக்குகளிலும்,எயிறுகளின் அருகிலும் சேரும் அழுக்கைத்துப்புரவு செய்வதே.இவ்வழுக்கைசாதாரணமாய்ஊத்தைஎன்றுசொல்வதுண்டு. இயற்கையிலுள்ள மற்றமிருகங்களைப்போல் இயற்கையிலமைந்த ஆகாரங்களைச் சாப்பிட்டால் மனிதனுக்கும் தந்த சுத்தி செய்வது ஒருக்கால் அனாவசியமாயிருக்கலாம். ஆனால் அனேக காலங்களாக மனிதன் தான் புசிக்கும் ஆகாரங்களைச் சமைத்தும் மற்ற விதமாய்ப் பக்குவம் செய்தும் சாப்பிடுகிற வழக்கத்தை அனுசரித்து வந்திருப்பதால் அவனுக்குப் பற்களை விளக்குவது அவசியமாய் விட்டது. பற்களைச் சுத்தம் செய்யாவிட்டால் நாகரிகத்தை அடைந்த மனிதனுக்கு அனேக விதமான தந்த வியாதிகள் உண்டாகின்றன. நாகரிகமடையாத மனிதர்களுடைய பற்கள் நாகரிக மடைந்த மனிதர்களுடைய பற்களைவிடப் பலமாயிருப்பதைத் தவிர, அம்மனிதர்களுக்குப் பல் வியாதிகளும்

குறைச்சல். மேல் நாட்டார்களுக்குள் கீழ் நாட்டார்களை விடப் பல் வியாதிகள் மிக அதிகம். பற்களும் சீக்கிரத்தில் அவர்களுக்குள் விழுந்துவிடுகின்றன. அமெரிக்கா தேசத்து ஜனங்களின் வாய்களில் பல் வியாதிகளுக்காக உபயோகப்பட்டிருக்கும் தங்கத்தின் விலை அனேக லக்ஷம் பவுன் இருக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பாலியத்திலேயே அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் இயற்கைப் பற்களை இழந்து பொய்ப் பற்கள் வைத்துக்கொள்வது சகஜம். இந்தக் கெட்ட வழக்கத்திலும் நம்முடைய நாட்டார் மேல் நாட்டாரைப் போல ஆகிவருகிறார்களென்பது துக்கிக்கத்தக்கதே. ஐம்பது வயதிற்கு மேல் பற்கள் அத்தனையும் எண்ணமும் உறுதியும் சரியாய் இருப்பது தற்காலத்தில் துர்லப மாகிவிட்டது. பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்குள் குருட்டுக் கண்களுக்குக் கண்ணாடிகளைப் போல, சொத்தைப் பற்களுக்குப் [Carious teeth] பதில் பற்களும் சாதாரணமாகி வருகின்றன. சரியானபடி தந்தசுத்தி செய்யாததாலும், பல் வியாதிகளினாலும், அசுத்தமான ஆகாரங்களைத் தின்பதினாலும், பல்லின் ஈறுகளைப்பற்றிய வியாதி ஒன்று இந்நாளில் சாதாரணம் என்பது வைத்தியர்களுக்குத் தெரிந்த விஷயம். இவ்வியாதியில் பல் ஈறுகளை அமுக்கினால் சீழ் வருவதும், வாயில் துர்கந்தம் உண்டாவதும், அசீரண முதலிய மற்றும் அநேக வியாதிகள் உண்டாவதும் ஏற்படுகின்றன. இவ்வியாதிக்கு எயிற்றுச்சீழ் (Pyorrhœa Alveolaris) என்று பேர். அளவுக்கு மிஞ்சிச் சுருட்டுக் குடிப்பதனாலும், தாம்பூலம் தரித்துக்கொள்வதினாலும் சில பல்வியாதிகள் உண்டாகின்றனவென்று சிலருடைய அபிப்பிராயம். அதிகமாய்ச் சுருட்டுக் குடிப்பதனால் பற்கள் கெட்டுப் போகின்றன வென்பது திண்ணம். அப்படியே தாம்பூலத்தைச் சொல்ல இயலாது. சிலர்களைப்போல் சதா தாம்பூலம் தரிப்பதால் பற்கள் கெட்டுப்போகலாம் ஆயினும் ஒரு நாளைக்கு இரண்டொருதடவை, அதாவது பகல், இரவு ஆகாரங்களுக்குப் பின்பு தாம்பூலத்தை அதற்கு ஏற்பட்ட கந்தாதிகளுடன் போட்டுக்கொள்வது நலமென்றே சொல்லலாம். ஸர் ஜார்ஜ் பர்ட்வுட் (Sir George Birdwood) என்பவர் தாம்பூல உபயோகத்தினால் ஹிந்துக்களுள் வயதானவர்களுக்கும் பல் பலமாயிருக்கிறது என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். வெற்றிலை, சுண்ணாம்புடன் உபயோகிக்கும் பாக்கை நல்லதாய்ப் பொறுக்கி யெடுத்துக் கழுவி உலர்த்திவிட்டு, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சுக்கு,

பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ இவைகள் சேர்த்து இடித்து வைத்துக் கொள்வது நலம்.

மேற்சொன்ன பீடிகையில் பல்வியாதிகளை நீக்கிக் கொள்வதற்குத் தந்த சுத்தியே முக்கிய உபாயமென்று சொன்னோம். தந்த சுத்தியைப்பற்றிச் சொல்வதற்குமுன் தந்தம் என்றால் இன்னது என்பதைக் கவனிப்போம்:

தந்தங்கள் (பற்கள்) என்பன அஸ்தி மண்டலத்தைச் (Osseous or Bony System) சேர்ந்தவை. எலும்பைப் போன்ற அமைப்புள்ளவை. தந்தங்களில் இரண்டு வகை உண்டு. குழந்தைப் பருவத்தில், அதாவது ஆறுவது மாத முதல் உண்டாகி, பன்னிரண்டு வயதுக்குள் விழுந்துவிடும் இருபது பற்களையும் இளம்பற்கள் என்று சொல்லலாம். பால் பற்கள் (Milk teeth) என்று வழக்கமாய்ச் சொல்வதுண்டு. அவை மேல்வாயில் பத்தாகவும், கீழ்வாயில் பத்தாகவும் இரண்டு தாடைகளுக்குள் அமைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு தாடையிலும் நடுவில் நான்கு முன் பற்களும் (Incisors), அவைகளுக்கு இருபுறமுமாக இரண்டு கூரிய நாய்ப்பற்களும் (Canines), அவைகளுக்குப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு அசைப்பற்களும் (Molars), ஆக மொத்தம் பத்துப் பற்களாகின்றன. மேற்கூறிய பற்கள் காணப்படும் வயது கீழே கூறப்பட்டிருக்கிறது.

1 முன்பற்கள் —கடிக்கும் பற்கள்.	6-வது மாதம்.
2 அசைப்பற்களின் முன் பகுதி —அரைக்கும் பற்கள்.	12-வது மாதம்.
3 நாய்ப்பற்கள் —கிழிக்கும் பற்கள்.	18-வது மாதம்.
4 அசைப்பற்களின் பின் பகுதி — அரைக்கும் பற்கள்.	24-வது மாதம்.

(From Halliburton's Physiology)

இந்த இருபது பற்களும் ஆறு வயது முதல் பன்னிரண்டாவது வயதுக்குள் விழுந்துவிடுகின்றன. அவை ஒன்றொன்றாய் விழ விழ அவைக்குப்பதில் இருபது ஸ்திரமான பற்கள் (Permanent teeth) முளைக்கின்றன. இவை தவிர வேறு பன்னிரண்டு ஸ்திரமான பற்களும் முளைக்கின்றன. ஆகவே ஸ்திரமான பற்களின் கிரமமான எண்ணம் முப்பத்திரண்டு. இந்த முப்பத்திரண்டு ஸ்திரமாயுள்ள

பற்களும் பொதுவாக ஒரே வரிசையில் ஒழுங்காய் மேல் தாடையில் பதினாறும் கீழ் தாடையில் பதினாறுமாக அமைக்கப் பெற்றுள்ளன. ஆனால் சிலர்களுக்கு வரிசை தப்பி முன்னும் பின்னுமாய் முளைப்பதும் சிலர்களுக்கு முப்பத்திரண்டு எண்ணத்துக்கு மேல் கோரப்பல் என்றும், வீரப்பல் என்றும், 'தெத்தி'ப்பல் என்றும் பெயர் படும் அதிகப் பற்கள் முளைப்பதும் உண்டு. இவை அந்தக்குறைவுக்குக் காரணமாயிருப்பதினால், இவைகளை முளைக்கும் பொழுதே பிடுங்கி விடலாம். ஸ்திரமான பற்கள் முப்பத்திரண்டும் முளைக்கும் பருவம் கீழ்வரையுமாறு நிகழும் :—

1. அசைப்பற்களின் முன் பகுதி —அரைக்கும் பற்கள்.	6-வது வயது.
2. நடுவிலுள்ள முன்பற்கள் —கடிக்கும் பற்கள்.	7-வது வயது.
3. பக்கத்திலுள்ள முன் பற்கள் —கடிக்கும் பற்கள்.	8-வது வயது.
4. இருதலைப்பற்களின் முன் பகுதி —அரைக்கும் பற்கள்.	9-வது வயது.
5. இருதலைப்பற்களின் பின் பகுதி —அரைக்கும் பற்கள்.	10-வது வயது.

[4-உம் 5-உம்—அசைப்பற்களின் முன்னே அமைக்கப்பட்டிருக்கின்றன.]

6. நாய்ப் பற்கள் —கிழிக்கும் பற்கள்.	11-வது வயது.
7. அசைப்பற்களின் பின் பகுதி —அரைக்கும் பற்கள்.	12-வது வயது.
8. அசைப்பற்களின் கடைப்பகுதி "ஞானப்பற்கள்" என்னப்படுபவை —அரைக்கும் பற்கள்.	17-முதல் 25 வயதுக்குள்.

(From Halliburton's Physiology)

மேற் கூறியபடி பால் பற்களும், ஸ்திரமான பற்களும் முளைக்கும் வயதுப் பருவங்கள் பொது வழக்கமே. ஆனால் கொஞ்ச காலம் முன்பின்னாக அவை முளைப்பது சாதாரணம். குழந்தைகளுக்குப் பற்கள் சில முளைக்கும் வரை பால் முதலிய திரவமான ஆகாரமே கொடுக்கவேணும். கிரமமாக முதற்பற்கள் முளைக்கும் ஆறுவது மாதத்தில் 'அன்னப்பிராசனம்' செய்வது வழக்கம். வியாதி, வளர்ச்சிக்குறைவு, அல்லது மற்ற காரணங்களால் குழந்தைகளுக்கு முதல் பற்கள் முளைப்

பது தாமதப்படுமாயின், அப்பற்கள் முளைக்கும் வரை அன்னம் ரொட்டி முதலிய சுவைக்கவேண்டிய ஆகாரங்கள் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், வயிற்றுப்போக்கு முதலிய வியாதிகள் உண்டாகும். இப்போது பற்களை சுத்தம் செய்வதைப்பற்றிக் கவனிப்போம். சாதாரணமாய், தந்த சுத்தி செய்வதற்கு விறகுக் கரியைப் பொடித்து உபயோகிப்பது மேல் நாட்டாருக்குள்ளும் கீழ் நாட்டாருக்குள்ளும் வழக்கமாயிருக்கிறது. இது நல்லதாயினும், பொதுவாய் இதை உபயோகப்படுத்தும் விதம் சரியானதல்ல. முன்பக்கத்தை மாத்திரம் வெளுப்பாய் காண்பிக்கிறதற்காகத் தேய்க்கிறது வழக்கம். இப்படிச் செய்வதினால் பல் இடுக்குகளில் கரிப்பொடி புகுந்துகொள்வதும் தவிர, இடுக்குகளிலும் பின்பக்கங்களிலும் அடையும் ஊத்தை உறைந்து காரைக்கட்டியாகிவிடும். இதனால் எயிறுகள் கரைந்து பலங்குறைந்து எயிற்றிலிருந்து இலேசாய் அமுக்கினாலும் இரத்தம் வர ஹேதுவாகும். பின்பு எயிற்றில் சீழும் உண்டாக ஆரம்பிக்கும். எயிற்றுச்சீழ் உண்டானால் அனேக வியாதிகள் உண்டாகுமென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இவ்வியாதிகளெல்லாம் உண்டாகாதபடி பற்களைத் துப்புரவு செய்வதற்கு முன்பக்கம், பின்பக்கம், மேல் வாயின் கீழ்ப்பக்கம், கீழ்வாயின் மேல்பக்கம் பற்களின் இடுக்குகள் எல்லாம் துப்புரவு செய்யவேண்டியது. மேல்கண்டபடி சுத்தம் செயய, மேல் நாட்டாருள் ரோமங்களைக் கைபிடியில் பதித்த ப்ரஷ் (Brush) என்னும் குச்சுப்புற்களை உபயோகிக்கிறார்கள். சில வருஷங்களாக ஜப்பான் தேசத்திலிருந்து தென்னம் சவுரிக் குச்சுப் புற்களும் செய்யப்பட்டு வருகின்றன. இக்குச்சுப்பற்கள் இடுக்களிருலுள்ள அழுக்கைப் போக்குவதற்கு சௌகரியமாயினும் அவைகளின் உபயோகத்திற்குச் சில ஆக்ஷேபணைகள் கவனிக்கத்தக்கவை. அவையாவன, இக்குச்சுப்புற்களை எவ்வளவு ஜாக்கிரதையாய்த் துப்புரவு செய்தாலும் வெயிலில் வைத்து உலர்த்தினாலும் காற்றுட வைத்திருந்தாலும் அவைகளைத் திரும்பத் திரும்ப உபயோகிப்பது இரண்டாம் பக்ஷமே. மேலும் அவைகளை

குறிப்பு—கரும்பு, ஆரஞ்சுப்பழம், எலுமிச்சம்பழம், ஆப்பிள், பேரிக்காய் முதலிய நறுநறுப்புள்ள பழங்கள்—இவைகளை சாப்பிடுதல் பசுலுக்கு உறுதியையும் கொடுத்து சுத்தத்தையும் உண்டாக்கும். ஆனால் இவைகளைச் சாப்பிட்டவுடன் (எந்த ஆகாரம் செய்தாலும்மே வாயைச்சுத்தமாய்க் கழுவி விடவேணும்.

மாத்திரம் உபயோகித்தால் பற்களிலுள்ள அழுக்கும் சரிவரப் போகாது. ஆகையால் இவைகளை உபயோகிப்பதுடன் பற்களை வெள்ளையாய் வைத்துக் கொள்வதற்காக மேற் கூறியபடி விறகுக் கரிப்பொடி உமிக்கரிப்பொடி, பாக்குக்கரிப்பொடி, வாதாங்கொட்டைக் கரிப்பொடி இவைகளைத் தனியாயும், மிளகு பொடி, உப்புப் பொடி முதலியவைகளைச் சேர்த்தும் ஊடே ஊடே உபயோகிப்பர் சிலர். இக் கரிப் பொடிகளுடன் குச்சுப்புற்களை உபயோகித்தால் அவை கறுத்துச் சீக்கிரம் கெட்டுப்போகும். தவிர, குச்சுப்புற்களின் கிரயமும் எல்லாராலும் கொடுக்கத்தக்கதல்ல. இதற்காகக் குச்சுப்புற்களுடன் அனேகம் பற்பொடிகளையும், பசைகளையும், திரவங்களையும் உபயோகிப்பதுண்டு. இப்பொடிகளிலும் பசைகளிலும் உள்ள முக்கிய பதார்த்தம் 'சாக்' (Chalk) என்னும் சீமைச் சுண்ணும்பே. வாசனைக்காகவும், வாயின் நாற்றத்தை எடுப்பதற்காகவும் அனேகம் மருந்துகள் கலந்து சாதாரணமாய் விற்கப்படுகின்றன. இவைகளில் முக்கியமாயுள்ளவை 'கார்பாலிக் ஆசிட்' (Carbolic Acid) 'தைமால்' ('Thymol), 'யூதைமால்' (Euthymol), 'ஸோப்' 'Soap) முதலியன. இப்படிச் செய்த பொடிகளும் பசைகளும் அவற்றுள் அடங்கியிருக்கும் மருந்துகளுக்கு ஒவ்வாத அதிகக்கிரயங்களுக்கு விற்கப்பட்டுவருகின்றன. பற்பொடிகளை உபயோகிப்பதற்குக் கீழ்க்கண்ட சாமான்களைச் சேர்த்து எளிதில்யாவரும் பற்பொடிகளைச் செய்து கொள்ளலாம்:—

கருவப் பட்டைப் பொடி, ஏலம் கிராம்பு ஜாதிக்காய்ப்பொடி, கற்பூரத்தூள், சுக்குத்தூள், ஓமத்தூள். ஓமத்தூளைக் கருவப்பட்டைப் பொடிக்குச் சமமாகச் சேர்த்து, மற்றவைகளை வாசனைக்காகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். மேற் சொல்லிய 'தைமால்' 'யூதைமால்' என்பவை ஓமத்தின் சத்தே. எந்தப் பற்பொடி உபயோகித்தாலும், அவை கொஞ்சம் சொர சொரப்பா யிருக்கவேண்டுமே யல்லது, பல்லின் கடினமான மேற்பாகமாகிய தந்தத்தை (Dentine) கீச்சக் கூடியதாயிருக்கக்கூடாது. ஆகையால் சாம்பல், செங்கல் கட்டி, கோலப் பொடி, மணல் முதலியவைகளை பல் தேய்க்க உபயோகிக்கக்கூடாது. குச்சுப் புல்லுடன் ஜீனிச் சர்க்கரையை உபயோகிக்கலாம். குச்சுப்புற்களுக்குப் பதிலாகக் குச்சு உண்டாக்கக் கூடிய அனேக சாமான்கள் நமது தேசத்தில் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. இவற்றுள் முக்கியமானவை பழுத்த மாவிலே,

நாயுருவிவேர், ஆலம் விழுது, கருவேலங் குச்சி, வேப்பங்குச்சி முதலியவை. அவைகளில் பின் சொல்லிய மூன்றும் சிலாக்கியமானவை. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்று ஒரு பழமொழி உண்டு. வேப்பங்குச்சி, வாயில் துர்க்கந்த மிருந்தால் அதை எடுத்து விடும்; ஆனால் அது கொஞ்சம் கடினமாயுள்ளது. குச்சுப்புல்லோ அல்லது இக்குச்சிகளோ வழக்கமில்லாதவர்கள் உபயோகித்தால் எயிற்றிலிருந்து இரத்தம் வரும். ஆனால் இப்படி இரத்தம் வருவது முதல் சிலநாள்களுக்குத்தானிருக்கும். பின்பு வர வர இரத்தம் குறைந்து எயிறு இறுகி, பல் கட்டிப்படும். எவ்விதம் தந்த சுத்தி செய்தாலும் மேற்கூறியபடி பற்களின் எல்லாப்புறங்களிலும் அழுக்குப்போக, மேலுங் கீழுமாய், பக்கத்திலிருந்து பக்கமாய்த் தேய்த்து, நாவையும் விரல்களினால் தேய்த்துத் துப்புரவு செய்து வாயைச் சுத்த ஜலத்தால் கொப்புளிக்கவேண்டும். மலையாளத்தில், நாக்கை வழிப்பதற்கு, பிளந்த தென்ன ஈர்க்கை உபயோகிப்பதுண்டு. இது அவசியமல்ல. கொஞ்சம் அசாக்கிரதையாயிருந்தால் நாக்கைப் புண்படுத்திவிடும். தந்தசுத்தி செய்யும் போது சாதாரணமாகத் தென் ஜில்லாக்களில் ஜலத்தில் காறி உமிழ்வதும், வாயைக் கொப்புளித்து உமிழ்வதும் எல்லாரும் நிறுத்த வேண்டிய கெட்ட வழக்கம். வடதேசத்தாரைப் போல் பாத்திரங்களில் ஜலத்தை எடுத்து நீர்க்கரையிருந்து விலகிப்போய் தந்த சுத்தி செய்வதே நல்லவழக்கம்.

கவனித்தறியும் சக்தி:—இரசாயன சாஸ்திர போதகர் ஒருவர் தமது மாணாக்கரை நோக்கி, "கூர்மையாய்க் கவனிக்கும் சக்தி உங்களுக்கில்லையே" என்று மனங்கசந்து கூறிவிட்டு, பரீக்ஷை மேஜையிலிருந்த ஒரு புட்டியை எடுத்துத்திறந்து, தமது விரலை அதிலுள்ள திரவபதார்த்தத்தில் தோய்த்துத் தம்வாயில் வைத்து ருசித்து, பிறகு அந்தப்புட்டியைத் தமது மாணவர்களிடம் பரீக்ஷைக்குக் கொடுத்தார். மாணவர்களில் ஒவ்வொருவனும் தன்விரலால் அவ்வஸ்துவைத்தொட்டு ருசிபார்த்து, முகஞ்சுளித்து, அதன் துர்க்கந்தத்தினாலும் அரோசிகத்தினாலும் மனம் நொந்தான். அப்பால், ஆசிரியர், "நான் முன்னமே சொல்லவில்லையா: உங்களுக்குக் கவனிக்கும் சக்தியில்லையே. நான் புட்டிக்குள் தோய்த்தது எனது ஆட்காட்டி விரல், வாயில் வைத்து ருசிபார்த்ததோ நடுவிரல்; இதை நீங்கள் கவனித்தறியவில்லையே" என்று கூறி நகைத்தார்.

பூர்வ இந்திய சரித்திர மூலங்கள்.

[ம-ா-ா-ஸ்ரீ C. R. இராகவேந்திரராயரவர்கள் M. A. எழுதியது.]

(265-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

(8) அக்காலத்து மதக் கோள்கை.

ஆரியர்களின் மதவிஷயங்கள் ரிக் வேதத்தில் ஏராளமான கவிதைளில் வர்ணிக்கப்படுகின்றன. ஜனங்கள் ஒன்றையும் அதிகமாய்ப் பாராமலிருந்து, பின்னிட்டுப் புதிதாய்ப் பார்த்தால் அதிக ஆச்சரியப்படுவதுபோல், ஆரியர்கள் முதலில் தம்மைச் சுற்றிலும் காணப்பட்ட சூரியன், சந்திரன், நெருப்பு முதலியவைகளை ஆச்சரியத்துடன் நோக்கி, ஒவ்வொரு தெய்வங்களாகப் பாவித்து, அவைகளையே பூஜித்து வந்தனர். இருளைப் போக்கி, வெளிச்சத்தைக் கொடுக்கிற சூரியனை, அதிக மேன்மைபொருந்திய தெய்வமாகப் பாராட்டினர். நெருப்பு, சூரியனைப் போலவே உஷ்ணமுள்ளது. ஆகவே, அதனை அக்னி தேவனாகக் கொண்டனர். ஆரியர், மந்த்ரங்களாலும், யாகங்களாலும், மேற்கூறிய சூரியன் முதலியவர்களைப் பூஜித்து வந்தபடியாலும், தமது கைங்கரியங்களுக்கு நெருப்புவேண்டியிருந்ததாலும், நெருப்பை ஆராதனை செய்வது நாளடைவில் சிறப்பாயிற்று. இந்திரன் தன் வஜ்ஜிராயுதமாகிய இடியினால் கருமேகங்களைப் பிளந்து, அவைகளில் அடங்கிய ஜலத்தை மழையாகப் பெய்யும்படி செய்வதாகக் கொண்டு, அவனை ஒரு தெய்வமாக்கினர். மழை வருமுன்னே காற்று அதிகமாயிருத்தலால், காற்றை வாயுபகவானெனத் தொழுதனர். விவசாயமே முக்கிய விருத்தியாயிருந்ததால், இவ்விதமான கொள்கைகளை எளிதில் தழுவினார்கள். சில காலத்துக்குப்பின், அவர்களே இந்தக் கொள்கைகளை ஊக்கத்துடன் ஆராய்ந்து பார்த்துச் சில மாறுதல்களை ஏற்படுத்தினர். ஆகாயத்தின் விசாலத்தையும் உயரத்தையும் கண்ணுற்று, வருணனை சிறந்தவனென்றார் சிலர் இறந்தவர்களைத் தண்டிக்கும் யோக்கியதையுடைய யமனை இவனினும் உயர்ந்தவனென்றார் வேறு சிலர். இவ்வாறு கொள்கைகளில் பேதங்கள் ஏற்பட்ட காலம், சுமார் கிறிஸ்து பிறக்க 1000-வருடங்களுக்கு முன்னென்றும்; அப்பொழுது, ஆரியர், சரஸ்

வதி நதியைக் கடந்து, கங்கையைச் சார்ந்த சமவெளிகளில் குடியேறி யிருந்தார்களென்றும் சரித்திரங்களில் காணலாம்.

இப்படியாக ஆரியர் தம்மைச் சுற்றிலுமிருந்த பிரகிருதி பூதங்களைக் கொண்டாடினபோதிலும் வேதங்களை நன்றாய் ஆராய்ந்த தற்காலத்துச் சரித்திராசிரியர், ஆரியர் அனைவரும் ஒரே கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும்; அவர்களில் ஒரு சாரார் கடவுள் ஒருவரே என்றும், அவரைத்தான் பூஜித்தல் வேண்டுமென்றும் அபிப்பிராயப் பட்டனரென்றும் சொல்லுகிறார்கள். எத்தேசத்திலும், எக்காலத்திலும் கடவுளை ஆராதிக்கும் மார்க்கங்களும், ஆராதிக்கப்படும் தெய்வங்களும், ஆராதிப்போர் மன நிலையையும் புத்தியையும் ஒட்டியே யிருக்குமென்பது திண்ணம். அக்னியைப் பூஜிப்பதில் அதிகப் பேர் பெற்று, முதன்மையை அடைந்தவர்கள் 'ஆங்கிரச' இனத்தார் என்பவர்களே. பின்னர் 'பிருகு' வம்சத்தார்களும், நமது நாட்டிற்குப் பேரை அளித்த 'பரத' வம்சத்தார்களும், அதைப்பின்பற்றி வந்ததாக ரிக் வேதத்தில் அநேக இடங்களில் காணலாம்.

(9) அவர்களின் அரசாட்சி;—கங்கையைச்சார்ந்த சமவெளியில் தங்க ஆரம்பித்தபின், ஆரியர் அங்கு வசித்து வந்த தஸாயுக்களுடன் கலக்க நேரிட்டது. ஆரிய இனத்தார்கள் அநாரியர்களைத் துரத்தி அவர்களிடங்களைக் கவர்வதும், ஆரியர்களுக்குள்ளேயே ஓர் இனத்தார் மற்றோர் இனத்தார்களை அடித்து விரட்டுவதும் நிகழ்ந்தது. இப்படியாக அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தமையால், ஆரியர்களுக்குள் சிலவகுப்புக்கள் ஏற்பட்டன. சண்டைகளுக்குச் சைநியங்களை நடத்தத்திறமையுள்ள தளகர்த்தர்கள் அநேகர்,சேர்ந்து கூடினர். இவர்களே, பின்னிட்டுத் தம் தம் குழுக்களுக்கு அரசராக அமைந்தனர். வேதங்களில் இக்ஷ்வாகு, சந்தனு என்கிற அரசர்களைப்பற்றி அடிக்கடி குறிப்புக்கள் காணலாம். அரசன் தன் இஷ்டம் போல ராஜ்ஜியத்தை நடத்தி வந்தபோதிலும், ஒரு பொது சபையிருந்தது. அந்தச் சங்கத்தில், அரசனுக்கு வேண்டிய சிநேகர்களும், ரதங்களை நடத்துகிற சாரதிகளும், அவைகளைச் செய்யும் தொழிலாளர்களும், கைத்தொழில்களில் சிறந்தவர்களும், சின்னக் குழுக்களை நடத்துகிற தலைவர்களும் அங்கத்தினரா யிருந்தார்கள். தேச நன்மையைக் கருதிய விஷயங்களெல்லாம் அச்சபையில் தீர்மானிக்கப்பட்டன. அநேக ரிஷிகளும் கூட, சில காலங்களில் அச்

சபைக்கு வருவதுண்டு. யுத்த விஷயங்களைப் பற்றியும், ஓர் இனத்தார் மற்றோர் இனத்தாருடன் சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டும், ஆரியர், அநாரியர் சண்டைகளைக் குறைத்தல் பொருட்டும் அநேக வழக்குக்கள் இச்சபைகளில் ஏற்படுவதுண்டு. ஆரியர்கள், கங்கைச் சமவெளியில் இருந்த காலத்து, பல சிறிய நாடுகளாகச் செய்துகொண்டு, ஒரு நாட்டில் ஒரே இனத்தாராக வாசம் செய்து, தமக்குள்ளே இராஜாவை ஏற்பாடு செய்து கொண்டனர். ஓர் இனத்தார் மற்றோர் இனத்தாரோடு கலந்து, பிறிதோர் இனத்தாருடனாவது, அநாரியர்களுடனாவது சண்டை செய்வதும் உண்டு. சுதஸ் (Sudas) என்னும் (Tritsus) திருட்ஸஸ் ஆரிய இனத் தலைவன், வேறு ஆரிய அநாரிய இனங்கள் பத்துடன் போர் புரிந்ததாக ரிக் வேதத்தில் காணப்படுகிறது. அந்தச் சண்டை, 'பத்து அரசர்கள் போர்' எனப்படும். இவ்விதமான சண்டைகளைக் குறைக்கும் பொருட்டு, சில பொது நியாயங்களை ஏற்படுத்திக் கொண்டதாகவும் ஊகிக்கலாம். இந்த விஷயத்தைப்பற்றி இன்னும் விஸ்தாரமாக அடுத்த வியாசத்தில் கூறப்படும்.

அரண்மனைகள் மரத்தாலேயே பெரும்பான்மையும் அமைக்கப்பட்டன. கல் மாளிகைகளும், கற்சுவர்களும் இருந்ததாகவும் தெரிகிறது. யானையின்மீது அரசர்கள் சவாரி செய்வதுண்டு; நல்ல குதிரைகள் பூட்டி அலங்கரித்த தேரில் அரசன் நகரத்தைச் சுற்றி வருவான். அநேக குழுக்கள் ஒன்றாகக்கூடி அரசனை நியமிப்பார்கள். பிள்ளை தகப்பனுடைய பட்டத்திற்கு உரிமையுடையனென்பது நவீன வழக்கமென்று அறியத்தக்கது. அரசன் அநேக நற்குணங்கள் பொருந்தி யிருத்தல் வேண்டும், அதிக வீரியவானும் பலவானுமா யிருக்க வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம். தளகர்த்தர்கள் அரசனைச் சுற்றியே யிருப்பார்கள். ஒரு புதிய நாட்டை அடைந்தவுடன் அரசன் அவர்களுக்கு வெகுமானம் அளிப்பான்; திரவியமும் நிலங்களும் பரிசாக அளிப்பான். பிற்காலத்தில், இவ்வாறு ஏராளமான பூமிகளை அடைந்த தளகர்த்தர்கள், சிற்றரசர் எனப்பட்டார்கள். இத்தளகர்த்தர்கள், சிலகாலஞ் சென்றபின், ஒரு ஜாதியாக க்ஷத்திரியரென அமைந்தனர். யாக ஹோமங்களைக் கைவிடாதவர்களாகையால், ஒவ்வொரு குழுவுக்கும், குலகுரு வேண்டியதாயிற்று. மந்திரங்கள் சாமானிய ஜனங்களால் அறிய முடியாமல் போகவே, மந்த்ரங்க

ளைச் சரிவர உச்சரிக்கும் பொருட்டும், யாகங்களை நடப்பிக்கும் பொருட்டும், வேதபாராயணம் செய்தவர் வேண்டியதாயிற்று. ஆகவே அநேக காலமாய் தம்கூடவே யிருந்த மகரிஷிகளின் வம்சத்தில் தோன்றிய சிரேஷ்டர்களை, குருக்களாகக் கொண்டனர். நாளடைவில், இவர்கள் 'பிராம்மணர்' எனப்பட்டார். பிராம்மணர் என்றால், பிரம்மனை, அதாவது, கடவுளைப்பற்றி விசாரணை செய்தவர்களென்பது பொருள்.

இவ்விதமாய், சுமார், கிறிஸ்து பிறக்க 1000 வருடங்களுக்கு முன்னே, ஆரியர்களுக்குள் மூன்று பிரிவுகள் ஏற்பட்டன. சௌரியமுள்ளவர்கள் க்ஷத்திரியரெனவும், வேதமோதியவர்கள் பிராம்மணரெனவும், கைத்தொழில்கள் செய்பவர் வைசியரெனவும் சொல்லப்பட்டார்கள். ஏனையோரெல்லாம் நாலாவது பிரிவுக்குள் சேர்க்கப்பட்டார்கள். மாக்ஸ்முல்லர் (Max Muller) என்பவர் ஜாதிகள் உண்டானது மூன்று காரணம்பற்றி என்று, எழுதுகிறார்:— (1) ஓர் இனத்தார் மற்றைய இனத்தார்க்குள்ள குணங்களைப் பெருமையால், தம்மைப் பேதப்படுத்தும்பொருட்டு, தம்முடைய ஜாதி வேறு என்பார்கள். இப்படியே, பண்டைக் காலத்தில், ஆரியர், தம்மை, அநாரியர்களினின்று வேற்றுமை தோன்றும்படி, பிராமணர் க்ஷத்திரியர், வைசியர் என்பதாக, அவரவர் தொழில்களை ஒட்டி அழைத்து வந்தார்கள். (2) சௌரியமுடையவர்களே ஆரியரென்றும், அநாரியர்களைத் தம்முடன் சமமாகப் பாவித்தால், அவர்களும் அரசுரிமைக்குப் பாத்தியஸ்தராகி விடுவார்களென்றும், இந்த ஜாதி முறையைத் தமக்குள்ளே ஆரியர் வைத்துக்கொண்டார்கள் (3) தாம், இந்த இந்தியாவில், புராதனமாக வாசஞ்செய்த திராவிட ஜாதிகளல்லவென்பதைக் குறிக்கவும், அவருடன் உறவாடிக் கலியாண முதலிய சடங்குகள் செய்து கொள்ள இஷ்டப்படாமையாலும், தம் ஜாதியை நிலைநிறுத்தும் பொருட்டு, ஆரியர் இவ்வகுப்புக்களை ஏற்படுத்தினர். ஸர் ஆல்பிரட் லயல் (Sir Alfred Lyall), என்பவர் நான்காவது காரணமொன்று கூறியிருக்கிறார்:—ஒவ்வொரு இனத்தாரும் தத்தம் மதக்கொள்கைகள் தோன்ற, அநேக சாதிப் பிரிவுகளை ஏற்படுத்தினர் என்பதே. ஆகவே, அந்தக்காலத்தில் பிராம்மணர்கள் வேதங்களை நன்று கற்றுவந்தனர்; ஹோமமுதலிய சடங்குகளுக்கு முக்கிய கர்த்தாக்களாயிருந்தனர்; க்ஷத்திரியரும் வைசியரும் தம்முடைய தொழில்களையே கவனிப்பவர்களாய், பிராம்மணர்களை

சிறப்பாய் அபிமானித்து வந்தார்கள். சாதாரண பிராம்மணர்களுக்கும், ரிஷிகளுக்கும் அநேக பேதங்களுண்டு. ரிஷிகள் பல உபாசனைகள் செய்தவர்; அவர்களுக்கு ஜாதிபேதம் கிடையாது. பெண்மக்களும் ரிஷிகளாவதுண்டு என்பது ரிக் வேதத்தில் தெரிகிறது. மேற் சொன்ன நான்கு வகுப்புக்களுள் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ளும் பொருட்டு, அநேக பிரயத்தனங்கள் நடந்தன. ஆனால், புராதன மான பிராமண, பௌத்த நூல்களிலிருந்து இரண்டு விஷயங்கள் வெளிப்படுகின்றன.—

(1) கி. மு. ஆறாம் நூற்றாண்டு வரையில் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்கு மாறுவதற்கு அவர்களுடைய தொழில்களே காரணமாயிருந்தன.

(2) பிராம்மணர், க்ஷத்திரியர் இவ்விரு வகுப்புக்களுள் இது தான் சிறந்தது என்பது தீர்மானமாகவில்லை.

10. பொது நடவடிக்கைகள்:—இந்த மூன்று வகுப்பினர்கள் ஒழிய, ஏனைய ஜனங்கள் மிகவும் ஏழைகளாம். இவர்கள் அடிக்கடி கடன் வாங்குவதும், அதிக வட்டி கொடுப்பதும், வாங்கின கடனை 8 அல்லது 16 தவணைகளில் கொடுத்து விடுவதும் வழக்கமென்பதை ரிக் அதர்வண வேதங்களில் காணலாம். சிலர், பழைய கடனைப் புதுக் கடனுடன் சேர்த்துப் பத்திரம் எழுதிக் கொடுப்பதும் உண்டாம். ஜனங்களுக்கு விவசாயமே முக்கிய ஆதாரம். அந்நாட்களிலும் இரண்டு மாடுகட்டி நிலங்களை உழுதனர். கதிரமரம் என்கிற ஒரு ஜாதிமரத்தைக்கொண்டு உழுமரம் செய்யப்பட்டது. புலங்கள், வாய்க்கால்கள் மூலமாய்த் தண்ணீர் பாய்ச்சப்பட்டன. பெரிய ஏரிகளும், கிணறுகளும் இருந்ததாக அதர்வண வேதத்துச் செய்யுள்களால் தெரிய வருகின்றது. தானியங்களை அளந்து களஞ்சியங்களில் சேகரித்து வைப்பதுண்டு. குளங்களில் தாமரைக் கொடிகள் ஏராளமாகக்காணும். வாழையிலையை உபயோகிப்பதுபோல் அவர்கள் தாமரையிலையை உபயோகித்தார்கள். பழத்தோட்டங்கள் அநேகமிருந்தன. அவர்கள் விவசாயத்தில் அதிகவல்லவர்களென்பதை, செய்யுள்களில் வரும் உபமானங்களால் அறியலாம். ஆடுமாடுகள் ஏராளமாய் வைத்துக்கொண்டிருந்தார்கள். பெண் மக்களே விசேஷமாகப் பசுவின் பாலைக் கறப்பது வழக்கம். ரிக் வேதத்தில், நாய்களை அதிகமாக வளர்ப்பது உண்டென்றும், புலங்களிலும், பசுக் கொட்டகைகளுள்ளும் ஓநாய் முதலிய துஷ்ட

மிருகங்கள் வராமல் அவைகள் காத்தன என்றும் புலப்படுகிறது. கலியாணத்தில் மாப்பிள்ளைக்கு வஸ்திரம் கலியாணப் பெண்ணே நெய்து கொடுத்து வந்ததாக அதர்வண வேதத்தில் கூறியிருக்கிறது. கம்பளங்கள் நெய்வதுமுண்டு. ஓடங்கள், கப்பல்கள், அக்காலத்திலுமுண்டாம். தச்சன், கருமான், முதலிய தொழிலாளர்கள் இருந்தார்கள்.

வியாதிகளை மருந்துகளாலும் மந்திர தந்திரங்களாலும் போக்குவார்கள். அநேக மூலிகைகள் அவர்களுக்குத் தெரியும். வியாதிகளின் பெயரும், அவைகளைப் போக்கும் சிகிச்சைகளும் அதர்வண வேதத்தில் அறியலாம். அவர்களுக்கு அங்கதத்வசாஸ்திரமும், தேகதத்வமும் நன்ருய்த் தெரிந்திருத்தல் வேண்டும்.

யுத்த ரங்கத்திற்கு ரிஷிகளும், பிராம்மணர்களும் போவதுண்டு. சண்டைக்கு முன்னே இந்திரனை ஆராதித்து அநேக பலிகளும், காணிக்கைகளும் செலுத்துவார்கள். சண்டைகள் அநேகமாய் ஆடு, மாடுகளைப்பற்றியே யிருக்கும். கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களை உபயோகிப்பார்கள். இருப்புக் கவசங்களைத் தரிப்பதுண்டு. தற்காலத்தில் மெடல்களைப் போட்டுகொள்வதுபோல், அவர்களும் அநேக வீர சங்கிலிகளை அணிவார்கள். சாயனர் என்பவர் யானைப்படையிருந்ததாகவும் கூறுகிருர். ஆகவே, அவர்களுடைய சண்டைகளும் வெகு விமரிசையாக இருந்தன.

ஜனங்கள் கந்தமூல பதார்த்தங்களும் புசிப்பார்கள்; குதிரை, மாடு, எருமை ஆடு முதலிய மிருகங்களின் மாமிசத்தையும் உண்பதுண்டு. அதர்வண வேதத்தில் மீன், பக்ஷி இவைகளைப் பிடிப்பது வழக்கமெனக் கண்டிருக்கிறது; அவைகளையும் சாப்பிடுவார்கள். பால், நெய், வெண்ணெய், தேன், தயிர் இவைகளை உபயோகிப்பதுண்டு. அரிசி, யவை, அவரை, மொச்சை, எள்ளு முதலிய தானியங்களைப் பக்குவப்படுத்திச் சாப்பிட்டு வந்ததாகவும் அறியலாம். பானங்களில் சிறந்தவை, சுராபானமும் சோமபானமுமே. சோமா என்னும் செடி, தற்காலத்தில் இமயமலைச்சாரல்களிலிருப்பதாக ஆயுர்வேத சாஸ்திரிகள் தெரிவிக்கிருர்கள். அரிசி, யவை இவற்றைக் காய்ச்சி ஒருவிதமான ரசம் இறக்கி, அதனுடன் பாலைக்கலந்து பருகி வந்தார்கள்; இதுதான் சுராபானம்.

பிரபுக்களுக்கு முக்கிய விளையாட்டு, தேர்ப் பந்தயம். மூன்று அல்லது எட்டுப் பேர்கள் உட்காரக்கூடிய ரதங்களில் ஆரோகணித்து,

தேர்களை வரிசை வரிசையாக நிறுத்தி, பந்தயம் விடுவார்கள். அநேக ரிஷிகள் இதைக் காண வருவதுண்டு. ஆரியர்கள் வேட்டையாடுவதி லும் சமர்த்தர்கள். காட்டுயானையை வேட்டையாடுவதே சிறப்பாக மதிக்கப்பட்டது. பழகின வேட்டை நாய்களைக்கொண்டு, காட்டுப் பன்றிகளைச் சங்கரிப்பதுமுண்டு. சிங்கத்தையும், காட்டு எருதையும் வலையை வீசிப் பிடிப்பார்கள். சூதாடுவதில் அதிக நிபுணர்கள். இந்த ஆட்டம் நமது நாட்டிற்கு, இந்துசித்தியர்களால் கொண்டு வரப்பட்டது என்று டாட் என்பவர் வெகு விஸ்தாரமாக எழுதியிருக் கிறார். சூதும், குடியும் ரிஷிகளைக்கூட வேதித்தன. நாட்டியம், மல்யுத் தம், இவைகளும் இருந்தன. அநேக வாத்தியங்களிருந்தனவாம்.

நமது நாட்டிலே பிள்ளையில்லாதவர்கள் தெய்வ ஆராதனைகள் அநேகம் செய்வதுபோல, ஆதி ஆரியர்களும், மக்கட்பேற்றைச் சிறப் பாக மதித்தார்கள். ரிக்வேதத்தில், இதைப்பற்றி வெகுவிரிவாகச் சொல்லப்படுகிறது. ஆண் குழந்தை இல்லாதவன், தன்பெண்ணைச் சிறப்பாக எண்ணி அவளுக்கு உண்டாகும் ஆண் குழந்தையை எடுத்து வளர்ப்பானும். இதுதான் தற்கால ஹிந்து நடவடிக்கைக்குப் பிரமாணம். பெண்குழந்தைகளைச் சிலாக்கியமாக் கொள்ளாவிடினும், ஸ்திரீகளுக்கு மிக்க மரியாதை அளித்து வந்தார்கள். பெண்கள், அதி காலையில் எழுந்து, தந்த சுத்தி செய்துகொண்டு, கூந்தலை வாரி முடித்து, பின்னர் மங்களஸ்நானம் செய்து, பிறகுதான் சம்சாரகாரியங்களில் புகுவார்களாம். பெண்மக்கள் ரிஷிகளாவதுமுண்டு என்று முன்னே கூறப்பட்டது. அவ்வாறு ரிஷிகளாய்ச் சிறப்புற்ற பெண் மணிகளிருவர், விஸ்வாவரா, கோஷா என்பவர்கள். இவர்களிரு வரும், ரிக் வேதத்தில் சிற்சில பாடல்களைச் செய்தார்களென்றால், அக்காலத்துப் பெண்மக்களின் படிப்பைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ!

இன்னும் நெசவு, பிரப்புபின்னல், சாயம்போடுதல் முதலிய தொழில்களைப் பெண்மக்களே பெரும்பாலும் செய்தனர் என்றால்,

---

* இவ்வாறு ஒரு சிலரைக்கொண்டு மிக பலரைப்பற்றி ஊகிப்பது, சந்தேகத்துக்கிடையாகவே தோற்றுகிறது. இந்தநியாயம் பொருந்துமாயின், நமக்குப்பிற்காலத்தவர், ஸ்ரீமதிதோருதத்தை, ஸரோஜினிநாயுடு, முதலிய தற்காலத்துப் பெண்மணிகள் சிலரின் கல்விச்சிறப்பைக்கொண்டு, இக்காலத்து மாதரெல்லாம் கல்வியில் தேர்ந்திருந்தனரென்று ஊகிக்கலாகுமே. உண்மையோ, பெரிதும் வேறாயிருக்கின்றதே. [ப-ர்; த-நே.]

தற்காலத்தில் நமது நாட்டுப் பெண்களின் நிலைமையை என்ன வென்று சொல்லலாம். சாதாரணமாய் ஒருமனிதன் ஒருத்தியைத் தான் விவாகம் செய்து கொள்வான்; இரண்டு மூன்று பெண்களை மணந்து கொள்வதுமுண்டு. அதிதிகளை உபசரிப்பதில், ஆரியர் அதிக உற்சாக முடையவர்கள்; வேதபாராயணங்கள் செய் தோனே அதிதியாவன். இதன்பொருட்டு ஆண்பிள்ளைகள் விடியற் காலையில் எழுந்து வேதங்களைச் சந்தை சொல்லுவதுண்டு.

(11) பூஜித்த தெய்வங்கள்:—யாகங்களில் முக்கியமாய் நடத் தப்பட்டன இரண்டு: சோமயாகம், அஸ்வமேதயாகம். பிற்காலத்தில் ராஜபுத்திரர்கள் இயற்றியபடி அதிக ஆடம்பரமாக அஸ்வமேதயாகம் செய்ததாகக் காணவில்லை. ஒரு வருடத்திற்கு 12 மாதமென்றும், மாதமொன்று 30 நாளென்றும் அவர்கள் கணித்தார்கள். நக்ஷத் திரங்கள் 27 என்பதும் தெரியும். ஆகவே வானசாஸ்திரப் பழக்க மும் அவர்களுக்குண்டு என்கலாம். 'அக்னி'யின் மூலமாய், சகல தேவதைகளையும் ஆராதித்தனர். பண்டைக்காலத்தில், கால்டியர், பாரசீகர், கிரேக்கர், இத்தாலியர் முதலிய ஜாதிபார்களும் நெருப்பைப் பூஜித்து வந்ததாகத் தேச சரித்திரங்களில் அறியலாம். ஆயினும், நமது நாட்டில் அக்னியை வெகு சிலாக்கியமாய் மதித்ததற்கு அநேக காரணங்களுள. இதர தேசங்களில், மற்றைப் பூதங்களைப்போலவே அக்னியையும் எண்ணினார்கள். நமது நாட்டாரோ அக்னி மற்றெல் லாரையும் விடச் சிறந்தவன் என்றனர். ரிக் வேதத்தில், அக்னியே சூரியன், இந்திரன், வருணன், விஷ்ணு, மித்திரன் என்று கூறப்படு கிறது. அவனைத்தான், சம்ஸ்கிருதத்தில் "ஜாதவேதஸ்" என்பார்கள். இவ்வக்னிபூஜை, நமது நாட்டிற்கு ஜோரஸ்டிரியர் (Zorastrians) இடமிருந்து வந்ததென்பது சிலர் கொள்கை. இது பொருந்தாது என் பார் சிலர். 800 கி.மு. அல்லது 900 கி. மு. வுக்குமுன் ஜொராஸ்டிரிய மதமேயில்லை. இந்தியர்கள் நெருப்பை அக்னி தேவனாகப் பாவித்தா ரென்றும், அக்னியில் எதை வேண்டினும் ஆகுவதியாகக் கொடுக்கலா மென்றும் நினைத்தார்கள். ஆனால் ஜொராஸ்டிரியரோ, அக்னியே (Ather) அத்தர் எனும் தெய்வமென்றும், மாம்ச முதலிய வஸ்துக் களை அக்னியின் கிட்டக் கூடக் கொண்டுபோகலாகா தென்றும், அக்னி அணைந்து போனால் அநேக பிராயச்சித்தங்கள் உண்டென்றும் சொன்னார்கள். இக்காரணங்களைப்பற்றி அக்னியை ஆராதிப்பதும்,

அதை அனுசரித்த நித்திய கருமங்களும், நமது நாட்டில் பிரத்தியேகமாய் அனுஷ்டிக்கப்பட்டனவென்பது விளங்கும்.

சிலர் இந்திரனை இஷ்டதெய்வமாக மதித்தார்கள்; இவனையே சிறந்த தெய்வம் மெனவும், சகல போக்கியங்களுக்கும் இவனே உசிதன் எனவும் சொன்னார்கள். கிருஷித் தொழில் அதிகமாயிருந்தபடியால், இவனுக்கு ஆதிபத்தியம் அதிகமிருந்தது. சம்பரன், சுஷ்ணன், பிப்ரு முதலியவர்கள் இவனுக்கு விரோதிகளாம். இவர்கள் ஏனைய கூட்டத்தார்களின் தலைவர்கள்; அல்லது, அவர்களால் பூஜிக்கப்பட்ட தேவதைகளாயிருத்தல் வேண்டும்.

இந்திரன், அக்கினி இவர்களைத் தவிர, வேறு சில தேவதைகளையும் தொழுவதுண்டு. இந்தியாவிலிருந்த தொன்று தொட்ட வழக்கங்களை, அநாரியரிட மிருந்து ஆரியர்கள் தெரிந்து கொண்டார்கள். அப்படி ஏற்றுக் கொண்ட தேவதைகளில் வருணன் ஒருவன். இவ்வருணன் கடலோரத்தில் வாசம் செய்த இனத்தார்களின் தெய்வமாம். வேதங்களில் வருணனுக்கு அதிக பிராபல்லியம் யில்லாமையாலும், ஆரியர்களுக்கு சமுத்திரமதிகமாய்த் தெரியாது என்று சொல்லுவதாலும், இவ் வருணன், வியாபார முதலிய தொழில்கள் அதிகமாய் நடத்திய திராவிடர்களுடைய தெய்வமென ஊகிக்க இடமுண்டு. திராவிடர்களால் பூஜிக்கப்பட்ட மற்றொரு சிறந்த தெய்வம் ருத்திரன். இவன் மலைகளில் சஞ்சரிப்பவனென்றும், சங்காரம் செய்வதில் மிக்க சமர்த்தனென்றும், கடூரமானவனென்றும், மனிதர்களைக் கொல்லுபவனென்றும் ரிக் வேதத்தில் வர்ணிக்கபடுகிறான். விந்திய மலை, இமய மலைகளில் வசித்த ஜனங்களால் மேன்மையாகப் பூஜிக்கப்பட்டான். 'ருத்ர' என்றால் சிவப்பு என்பது பொருள்; திராவிடச் சொல் 'சிவ' என்பதைக் காண்க.

விஷ்ணுவை ஆரியர் கொண்டாடினதாகத் தெரியவில்லை. ஆனால் ரிக் வேதத்தில், அவனுடைய வாசஸ்தலம் மிகவும் உன்னதமானது என்றும், அவனுடன் அநேக சாதுக்களும், தேவதைகளும் கூடியிருப்பார்களென்றும் கூறப்படுகிறது. ஆரியர்கள், விஷ்ணு, சிவன் முதலிய தெய்வங்களை அதிகமாய்ப் பூஜித்ததாகத் தெரியவில்லை; அவர்களுக்கு அக்னியே முக்கியம். இந்த ஆராதனை பின் நூற்றாண்டுகளில் குறையவே, இந்தியர்களுடைய புராதன தெய்வங்களான சிவனும் விஷ்ணுவும் பிரபலமானார்கள் என்னலாம்.

வேதங்களில் காண்கிற வம்சங்கள் ஐந்து:—துர்வாஸஸ், யதுஸ், என்ஸ், துருகியுஸ், புருஸ் என்பன. ரிக் வேதத்தில், நகுஷாஸ் (Nahushas) என்கிற ஒரு ஜாதியார் காணப்படுகிறார்கள். இவர்கள் மதியீனர்களென்றும், மிலேச்சர்களென்றும், 'அக்னி' மதத்திற்கு விரோதிகளென்றும் இகழப்படுகிறார்கள். இவர்கள் தேவதையாகிய வீர்தர (நாகம் என்பது பொருள்)னை இந்திரன் ஜெயித்ததாகக் காண்கிறது. இதனால், இச்சாதியார் நாகபூஜை செய்து வந்தார்கள் என்பது பொருந்தும். அந்தக்காலத்தில், கிருஷ்ணன் என்னும் தெய்வமும் இந்திரனுக்கு சத்துரு. கிருஷ்ணர்கள் என ஒரு ஜாதியார், யமுனாநதி தீரவாசிகளெனச் சொல்லப்படுகிறது. இந்திர கிருஷ்ண சண்டைகளைத் தற்கால புராணங்களிலும் காணலாம். பகவத் கீதையிலும் சில செய்யுள்களில் இதைக் காணலாம் என்று சிலர் ஊகிக்கிறார்கள்.

(12) இதர விஷயங்கள்:—முற்கூறியவைகளை நோக்குமிடத்து, நமது நாட்டில் இருப்புப்பாதை முதலிய நவீன விசித்திரங்கள் புகாத இடங்களில் உள்ள ஜனங்களின் நடவடிக்கை, 3000 வருடங்களுக்கு முன் எப்படி யிருந்ததோ அப்படியே ஏறக்குறைய இருப்பதாகக் காண்கிறது. நமது முன்னோர்கள் நாய், பன்றி, ஆடு, மாடு முதலிய மிருகங்களையெல்லாம் பரிபாலித்து வந்தார்கள். கிறிஸ்து பிறக்க 2500 ஆண்டுகளுக்கு முன்னே, ஆசியாவில் பெரிய பூகம்பங்கள் ஏற்பட்டு, அப்பொழுது மத்திய ஆசியாவினின்றும் சில குடிகள் கிலமாகி, சிரியா, மஸபோடேமியா, முதலிய இடங்களுக்குச்சென்று குடியேறினார்கள். அவர்களால்தான் பாபிலோனியா என்னும் ராஜ்ஜியம் ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களில் சிலர், தற்காலத்தில் பாரசீகம் என வழங்கும்நாட்டில் வாசம் செய்தனர். அங்கிருந்து, பலநூற்றாண்டுகளுக்கு முன்னே, சில அப்பியாசங்களும், கொள்கைகளும் நமது நாட்டிற் புகுந்தன எனக் காண்கிறது. மக்டானல் (Macdonnel) என்பவர், ஆரியர் இந்தியாவில் வந்த பிறகு அநேக அப்பியாசங்களை விருத்தி செய்து வந்தபடியால், கிரேக்கர் முதலிய மேல் நாட்டாரிடமிருந்து இந்தியாவுக்கு அதிகமாய் வழக்கங்கள் வந்திருக்க முடியாது என்கிறார். இனி இராமாயண மகாபாரதங்களைப் பற்றி எழுதுகையில், இந்தியாவினின்றே அநேக விஷயங்கள் இதர தேசங்களுக்குப் பரவின என்பது எடுத்துச் சொல்லப்படும். ஆரிய மதக் கொள்கைகளை, பாதராயணர் என்ற மகரிஷி பிரம்ம மீமாம்ச சூத்திரங்களாகத்திரட்டி,

பிற்காலத்தில் வேதாந்த சூத்திரங்களாக மாற்றினர், இச்சூத்திரங்கள், ரிஷிகளுக்கும், துறவிகளுக்குமே முக்கியமானவையாதலால், பாணினி என்னும் இலக்கண நூலாசிரியர், அவைகளை பிக்ஷு சூத்திரங்களென்றார். சென்ற ஆயிரவருடங்களில், இந்த நூல்களுக்கு மதாசாரியர்கள், அவரவர் புத்திக்கு ஏற்றவாறு, உரை யெழுதினர். ஆகவே, தற்காலத்தில் நடந்துவரும் அநேக சம்பிரதாயங்களில் மாறுதல்களைக் கண்டால், அவை சென்ற 10 நூற்றாண்டுகளில் இந்தியாவின் பேரில் படை யெடுத்து வந்த ஜாதியர்களின் கலப்பினால் உண்டான வித்தியாசங்களெனவே கொள்ளல் வேண்டும். இவ்வளவு காலம் சென்றும், அப்புராதன விஷயங்கள் நமது நாட்டில் தங்கியிருப்பதை நோக்கின், அம்மகரிஷிகளுடைய புத்திக்கூர்மையை எக்காலத்தும் புகழ்ந்து கூறுவதற்கு இடமுண்டு.

(இன்னும் வரும்.)

நல்லுரைக் கோத்து.

(313-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

(9) திருப்தியுள்ள மனமே முடியும் அரசுமாகும்.

(10) ஊன்றி ஆலோசிப்போர்க்கு இவ்வுயிர் வாழ்க்கை ஒரு விளையாட்டைப் போலும்; உணர்ந்து அனுபவிப்போர்க்கோ துன்பப் பெருக்காகும்.

(11) கடைசிவரையில், பாடுபட்டுச் சம்பாதிப்பதே சுலபமாய்ப் பணந்திரட்டும் வழியாகும்.

(12) ஆயிரம் நியாயங்களை விட ஓர் உதாரணம் மேல்.

(13) சொற்பப் பணத்தைத் திருடினவன் மரணதண்டனையை அடைகிறான்; ஒரு நாட்டை அபகரித்தவனே அரசனாகிறேன்.

(14) உயிர் வாழ்க்கையில் என் அநுபவம் என்னவென்றால், எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவனுக்கு ஐசுவரியம் மிகுந்திருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு ஜீரணசக்தி குறைவாயிருக்கும்.

(15) இராஜதந்திரமுறை (Politics) களில் இருதிறத்தாரே உளர்: யோக்கியர், மற்றவர்.

ஆதி ஆயுர்வேத சாஸ்திரமும் நுண்ணுயிர் நூலும்.*

[நுண்ணுயிர் நூல் (Bacteriology) என்று சொல்லப்படும் சாஸ்திரம் மேனாட்டாரால் தற்காலத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. அதிநுட்பமானவும் ஒரு நிமிஷத்துக்குள் ஆயிரக்கணக்காகப் பல்கக்கூடியனவுமான ஒருவகைக் கிருமிகள் தாம் அநேக நோய்கள் உண்டாவதற்கும் பரவுவதற்கும் காரணமா யிருக்கின்றன என்பது இச்சாஸ்திரத்தால் தெரியவருகிறது. ஆகவே, இந்நுண்ணுயிர்க் கிருமிகளைப்பற்றிக் கண்டு பிடிக்கப்படும் உண்மைகள், நோய்வராமல் தடுப்பதற்கும், வந்தால் நிவர்த்தி செய்வதற்கும் ஏற்ற முறைகளைக் காட்டுவதனால், நுண்ணுயிர் நூல் வைத்திய சாஸ்திரத்துக்கு நாளும் பேருதவிபுரிந்து வருகிறது. இச் சாஸ்திரத்தைக் கண்டுபிடித்து விட்டதாக மேனாட்டார் அடையும் பெருமை கொஞ்சமல்ல. ஆனால், இச்சாஸ்திரம் முதன்முதல் மேனாட்டாரால் கண்டுபிடிக்கப்படவில்லை; இவ்விஷயங்கள் ஆதிகாலத்திலேயே நம் முன்னோர்களுக்குத் தெரிந்திருந்தன என்பது ஸ்ரீமான் ஜி. பி. கொலேக். எ. எ. எம். எஸ். செய்த பின்வரும் உபந்யாசத்திலிருந்து தெரியவரும்.]

ஆயுர்வேத முறைப்படி ஏற்பட்டுள்ள வைத்திய சாஸ்திரம் தகுந்ததில்லை என்று சிலர் நினைக்கிறார்கள். நுண்ணுயிர் நூலை (Bacteriology) ப்பற்றி ஆயுர்வேத சாஸ்திரத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை என்பதை அவர்கள் ஒரு முக்கிய ஆக்ஷேபணையாகக் கூறுகிறார்கள். இந்த ஆக்ஷேபணை கிரமமா இல்லையா என்பதை ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியின் பலனாக அது முழுவதும் தவறு என்று நிரூபிப்பதே இப்பொழுது என் நோக்கமாகும்.

ஆரம்பத்திலேயே, ஆயுர்வேத சாஸ்திரத்தில் கிருமிகள் பின்வருமாறு வகுத்து வருணிக்கப் பட்டிருக்கின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

---

* ஸ்ரீமான் ஜி. பி. கொலேக், எ. எ. எம். எஸ்; அவர்களின் உபந்யாசத்தை ஸ்ரீமதி M. லக்ஷ்மியம்மாள் மொழி பெயர்த்தமைத்தது.

"சில வகைக்கிருமிகள் இரத்தத்துடனேயே சேர்ந்து தேக மெங்கும் வியாபித்திருக்கின்றன. இவ்வகைக் கிருமிகள் உருண்டைவடிவும் சிவப்பு நிறமும் உள்ளனவாயும் காலில்லாதன வாயும் இருக்கின்றன. இக்கிருமிகள் மனிதர் வெறும் கண்ணால் பார்க்க முடியாதபடி அவ்வளவு அதி நுட்பமாயிருக்கின்றன."

இதைப்போலவே, வேறு பலவகைக் கிருமிகளையும், அவை பல்கு மிடங்களையும் பற்றிச் சொல்லும்பொழுது, சுச்ருதாசாரியார், "கிருமிகள் அநேகவிதமான வேறுபட்ட வடிவுள்ளனவாய் இருக்கின்றன. அவைகள், கோழை, ஜவ்வு, இரத்தம், மலபதார்த்தங்கள் முதலியவற்றில் பெருகும்" என்று சொல்லியிருக்கிறார்.

அதர்வஸம்ஹிதையில் இந்நுட்பமான கிருமிகள் அநேகவற்றை வர்ணித்திருக்கிறது. இவ்வித நுட்ப ஜந்துக்களைச் சூக்ஷ்மதரிசினி போன்ற கருவிகளின் உதவியில்லாமல் வருணிப்பது அசாத்தியமாதலின், இந்தச் சம்ஹிதை எழுதப்பட்ட காலத்திலேயே, சூக்ஷ்மதரிசினியைப் போன்ற கருவிகள் கண்டுபிடித்து உபயோகப் படுத்தப் பட்டன என்பது இதனால் தெரியவருகிறது.

மேல் நாட்டார், மலேரியா முதலிய ஜுரங்களுக்குக் கிருமிகள் தான் காரணமென்றும், கொசுக்கள், ஈக்கள் முதலிய ஜந்துக்கள் மூலமாக இந்த ஜுரங்கள் மனிதர்களிடத்தில் பரவுகின்றன என்றும் இப்பொழுது கண்டு பிடித்திருக்கிறார்கள். மேனாட்டு வைத்திய சாஸ்திரப்படிப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த உண்மை பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே ஆயுர்வேத சாஸ்திரிகளுக்குத் தெரிந்திருந்தது. ஜுரத்தின் காரணங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது, "மலை ஜுரமும் அதை ஒட்டிய மற்ற ஜுரங்களும் கொசு, உண்ணி, ஈ, மூட்டை, எறும்பு, பேன் முதலிய ஜந்துக்களால் உண்டாகின்றன; இந்த ஜந்துக்கள் ஜுர விஷத்தை மனிதரிடம் பரவச் செய்கின்றன" என்று ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கிறது. தவிரவும், ஆயுர்வேத ஆசிரியர் வேறு அநேகவித ஜுரங்களுக்குக் கூடக் கொசுக்கடி காரணமாயிருக்கலாமென்று கூறுகிறார்.

இவ்விதப் பூச்சிக்கடிகளால் உண்டாகும் ஜுரங்களைப் பரவாமல் தடுப்பதற்கு வாசனை திரவியங்களைப் புகைபோடுவதும், வீட்டையும் உடம்பையும் சுத்தமாய் வைத்துக்கொள்வதும், நல்ல காற்றைத் தாராளமாய் வரப்போகவிடுவதும் உத்தமம் என்று சொல்லியிருந்

கிறது. வாசனை திரவியங்களாவன, கடுகு, வசம்பு, தேவதாரம், துளசி, உள்ளி, கந்தகம் முதலியவை என்றும், இவற்றின் புகை தீங்கிழைக்கும் கொசு முதலிய ஜந்துக்களைத் துரத்திவிடும் என்றும் சொல்லியிருக்கிறது. மலே ஜுரமும், அதை ஒட்டிய மற்ற ஜுரங்களும் கொசுக்கடி முதலியவற்றால் உண்டாகின்றன என்பது மேனாட்டாரால் கண்டு பிடிக்கப்பட்ட உண்மையன்று, முதலில் இந்தியாவில் கண்டு பிடிக்கப்பட்டது என்பது இதனால் தெளிவாய் விளங்குகிறது.

நோயாளிகளையும், அவர்களுடைய ஆகாரம், துணிகள் முதலியவற்றையும் தொடுவதனால் நோய் பரவுகிறதென்று மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயுர் வேத ஆசிரியரும் இதே விஷயத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே சொல்லியிருக்கிறார் என்பது பின்வருவதால் தெரியவரும்.

"குஷ்டரோகம் போன்ற தோல் சம்பந்தமான வியாதிகளும், க்ஷயமும், கண்ணில்வரும் நோய்களும், ஜுரங்களும், தேகஸ்பரிசத்தாலும், ஒரே ஆகாரத்தை இருவரும் சேர்ந்து உட்கொள்வதனாலும், ஒரே இடத்தில் சேர்ந்து உட்காருவதாலும், படுப்பதாலும், நோயாளி உபயோகித்த வஸ்திரத்தையாவது, பூக்களையாவது, வாசனை திரவியத்தையாவது உபயோகிப்பதாலும், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவும்" (குஷ்டரோகாதிகாரம்).

விஷபேதியைப் போன்ற கொள்ளை நோய்கள் ஓர் ஊரில் பரவினால், அங்குள்ளவர்கள் அனைவரும் ஊரைக் காலிசெய்து விட்டு வெவ்வேறிடங்களுக்குப் போய் விடவேண்டுமென்று ஆயுர்வேதம் சொல்லுகிறது. நோய்க்கிருமிகள் எளிதில் ஒருவனிடமிருந்து மற்றொருவனிடம் பரவும் என்றும், தொத்து நோய் உள்ளவனிடம் நெருங்கிப் பழகுவது அபாயமானதென்றும் தெரிந்தே, ஆயுர் வேதத்தில் இவ்வாறு கூறியிருக்க வேண்டும்.

ஒரு முள்ளோ, கண்ணாடிச் சில்லோ, அல்லது வேறு ஏதாவது வஸ்துவோ, தோலைக்குத்தி உடலுக்குட் புகுந்ததினால் ஏற்படும் காயத்தைத் திறந்து வைக்காமல் உடனே துணியால் மூடிக் கட்ட வேண்டியது அவசியமென்றும், இல்லாவிட்டால் அப்புண் துவாரத்தின் வழியாக வியாதிப் பூச்சிகள் உடலுக்குட் சென்று தீங்கிழைக்குமென்றும் ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கிறது.

"ஒரு புண் மூடப்படாமல் திறந்துகிடந்தால், அதன்மேல் ஈக்கள் மொய்த்துக் கிருமிகள் உண்டாகச் செய்யும். இதனால் வலியும், வீக்கமும், இரத்தப்பெருக்கும் ஏற்படும்." என்பது ஆயுர்வேத வாக்கு.

மற்றோரிடத்தில், ஆயுர்வேத ஆசிரியர் புண்கள் திறந்து கிடந்தால் ஈக்களும், வேறு பூச்சிகளும், குளிர்ந்த காற்றும் அப்புண்களில் விஷமுண்டாகச் செய்யும் என்று சொல்லியிருக்கிறார். (வாக்பத அஷ்டாங்கஸூத்ரம்.)

மேற் கூறப்பட்டவற்றிலிருந்து, மேனாட்டுச் சாஸ்திரியாகிய பாஸ்டர் (Pasteur) என்பவரல்லர், ஆயுர்வேத ஆசிரியரே உண்மையில் முதன் முதல் நுண்ணுயிர் நூலைக் கண்டுபிடித்தவர் என்பது தெளிவாகப் புலப்படவில்லையா?

இரண வைத்தியம் செய்வதற்கு முன்பு இரணவைத்தியக்கருவிகளெல்லாம் அதிசுத்தமாகவும், நோய்க்கிருமிகள் அணுக வொட்டாதனவாயும் இருக்கின்றனவா என்று ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும், இவ்விஷயத்தைக் கவனிக்காவிட்டால் இரண வைத்தியத்தால் நன்மை ஏற்படாதென்றும் ஆயுர் வேதத்தில் சொல்லியிருக்கிறது. இரண வைத்தியம் செய்யும்பொழுது, துருப்பிடித்தனவும், சுத்தமில்லாதனவுமான கருவிகளை உபயோகிப்பதால் ஏற்படும் அபாயத்தை ஆயுர்வேத ஆசிரியர் நன்கு அறிந்திருந்தார் என்பது இதனால் விளங்குகிறது.

ஒரு வீட்டில் மரணம் சம்பவித்தால், அவ்வீட்டுக்காரர்கள் பத்து நாள் வரை ஸூதகம் காக்க வேண்டுமென்றும், பல மரங்களின் பச்சைக் கொம்புகளைக் கொண்டு ஹோமாக்கினி மூட்டி வீட்டின் காற்றைச் சுத்தம் செய்ய வேண்டுமென்றும், வீட்டில் சாம்பிராணிப்புகை போடவேண்டுமென்றும், எல்லா வஸ்திரங்களையும் நனைத்துச் சுத்தப்படுத்த வேண்டுமென்றும், வீட்டை உள்ளும் புறமும் சுண்ணும்படித்து, கீழே கூடப் புதுத்தளம் போட வேண்டுமென்றும் நமது சாஸ்திரங்களில் விதித்திருக்கிறது. இந்த ஏற்பாடுகளெல்லாம் நோய் பரவவொட்டாமல் நோய்க் கிருமிகளைக் கொல்லுவதற்காக விதிக்கப்பட்டனவாகத் தோன்றவில்லையா? சாவு நேர்ந்த வீட்டில் உள்ளவர்கள் செத்தவனை நெருங்கித் தொட்டிருப்பார்களாதலால், நோய்க்கிருமிகள் அவர்களைத் தொத்திக் கொண்

டிருக்கக்கூடும்; அதற்காகவே, அவர்கள் பிறருடன் கலக்காமல் பத்து நாள் ஸூதகம் காக்கவேண்டுமென்று நம் முன்னோர்கள் விதித்திருக்கிறார்கள். "அசுத்தமான வஸ்துக்களை அணுகவே கூடாது" என்று வாக்பதர் எச்சரித்திருப்பது நோய்க் கிருமிகளைத் தொத்தவொட்டாமல் விலக்குவதற்கே.

விரல் நகங்களிலும், நெருங்கிய மயிர்ச்சுருள்களிலும், மூக்குத் துவாரங்களிலும் காதுத்துவாரங்களிலும் கிருமிகள் இடம் பெற்றுப் பெருகும் என்று மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. ஆயுர்வேத ஆசிரியரும் இவ்விஷயத்தைத் தெளிவாக வற்புறுத்திக் கூறுகிறார்:—

"நகங்களையும் தலைமயிரையும் மீசைதாடியையும் அதிகமாய் வளரவிடக்கூடாது. கால்களையும் காதுகளையும் மூக்கையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்; அவ்விடங்களை அழுக்கடைய விடக்கூடாது. தினந்தோறும் ஸ்நாநம் செய்யத் தவறக்கூடாது; மேலெங்கும் சந்தனம் பூசிக்கொள்ளவேண்டும்; தூயவஸ்திரத்தையே தரித்துக் கொள்ள வேண்டும்."

இவ்விதிகள் நோய்க்கிருமிகளை அணுக வொட்டாமல் தடுக்கும் நோக்கத்தையே கொண்டன.

யாககருமங்களைப் பற்றிய அதிகாரத்தில், மயிரை நீக்க வேண்டிய காரணங்களைப் பற்றிச் சொல்லும் பொழுது, "மயிர் நுனிகளில் பாவம் ஒட்டிக்கொண்டிருக்கிறது; ஆகவே நான் மயிரைக்களைந்து விடுகிறேன்" என்று சொல்லியிருக்கிறது. இங்கே பாவம் என்று சொல்லப்படுவது நோய்க்கிருமிகளை உண்டாக்கும் அழுக்குத்தான் என்று கொள்வது பொருந்தும்.

ஸ்திரீகள் தினந்தோறும் தங்கள் நீண்ட மயிரைவாரி முடித்துக் கொள்ள வேண்டுமென்று நம் சாஸ்திரங்களில் சொல்லியிருப்பது மயிரில் தங்கக்கூடும் கிருமிகளை விலக்குவதற்காகத்தான்.

பஹிஷ்டையான ஸ்திரீ மிதமான ஆகாரத்தை உண்டு, உடம்பைச்சுத்தமாய் வைத்துக்கொண்டு, பிறரைத் தீண்டாமலிருக்க வேண்டுமென்று நமது வைத்திய சாஸ்திரம் சொல்லுகிறது. அதுபோலவே, பிரஸவ அறைக்குள் வெளியிலிருந்து வருபவர்கள் போகக் கூடாதென்றும், பிரஸவஸ்திரீயைச் சுற்றிலுமுள்ள யாவும் சுத்தமாயிருக்க வேண்டுமென்றும், வேப்பிலை போன்ற மருந்துத்தழைகளை

அவ்வறையைச் சுற்றிலும் தொங்க விடவேண்டுமென்றும் நம் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. பிரஸவஜன்னி, சைத்தியம் முதலியன பிறக்க வொட்டாமல் தடுப்பதற்குத் தான் இவ்விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

நோய்க்கிருமிகள் பலவிதங்களில் மனிதர் தேகத்துக்குட் போய்ச் சேர்ந்து விடுகின்றன என்றும், அவற்றுள் ஆகாரம் அசுத்தமாயிருத்தல் ஒன்று என்றும் ஐரோப்பிய வைத்திய சாஸ்திரம் இப்பொழுது கண்டு பிடித்திருக்கிறது. ஆயுர்வேத சாஸ்திரம் இதைப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கண்டு பிடித்தாய் விட்டது. உதாரணமாக, நம் சாஸ்திரத்தில், "ஒவ்வொருவனும் நன்றாய் ஸ்நாநம் செய்து விட்டு, தோய்த்துலர்த்திய தூய வஸ்திரங்களை உடுத்து, சுத்தமான இடத்தில் உட்கார்ந்து, தன் மீது அன்புள்ள பந்துக்கள் ஜாக்கிரதையுடன் சமைத்து வைத்த ஆகாரத்தைச் சுத்தமான பாத்திரங்களிலிருந்து எடுத்து உட்கொள்ள வேண்டும்," என்று விதித்திருக்கிறது. இது இவ்வாறாக, மேனாட்டாரும், மேனாட்டு ஆசாரங்களே, சரியானாலும் தப்பானாலும், சிறந்தவையென்று அவற்றை மேற்கொண்டொழுகும் நம்மவர்களும், சம்பளத்துக்கு வேலைசெய்யும் கீழ்ச் சாதிக்காரர்கள் பக்குவப்படுத்திய ஆகாரத்தை, அவர்களுடைய அசுத்த நடவடிக்கைகளைப்பற்றிச் சிறிதும் யோசியாமல், ஆக்ஷேபணையின்றி உட்கொள்கிறார்கள். இவ்விரண்டு வழிகளில், எது ஆகார மூலமாய்க் கிருமிகள் தேகத்துக்குட் புகாமல் தடுப்பதற்கு ஏற்றதென்று நாமே யோசித்துப் பார்ப்போம். கிருமிகளால் வரும் வியாதிகளின் காரணங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது, அசுத்தமான ஆகாரம் அவற்றுள் ஒன்று என்று சுச்ருதாசாரியார் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். அன்றியும், வாக்பதர், " பகைவர் வீட்டிலும் பொதுமகளிர் வீட்டிலும், உண்டிச்சாலைகளிலும் போஜனம் செய்தல் தகாது." என்று கூறுகிறார். இப்பொழுது, இதற்கு நேர் விரோதமாக, நம்மவர்களில் அநேகர், 'ஹோட்டல்'களுக்குச் சென்று, ஆயிரம்பெயர்கள் வாயில் வைத்துக் குடித்த பாத்திரங்களிலிருந்து சூடான தேத்தண்ணீர் குடித்து, அழுக்கடைந்த தட்டுக்களிலிருந்து சிற்றுண்டிகள் அருந்திக் களைப்பாறுகிறார்கள். இது நிற்க; நாம் முற்கூறிய விதிகளிலிருந்து, ஆகாரவழியாகக் கிருமிகள் மனிதர் தேகத்துக்குட் செல்லும் என்ற உண்மை நம் முன்னோர்களுக்குத்

தெரிந்திருந்ததென்பது தெளிவாய் ரூபிக்கப்படுகிறது. ஜீரணாக்கினி எப்பொழுதும் தபித்துக்கொண்டே யிருக்கவேண்டுமென்று ஆயுர்வேதம் கூறுகிறது. இது எதற்காக? வயிற்றுக்குள் செல்லும் நோய்க்கிருமிகள் ஜீரணரசத்தால் கொல்லப்பட வேண்டுமென்பதே இதன் கருத்து.

மானிததேகத்தில் வியாதிக் கிருமிகள் பெருகும்படிச் செய்யும் காரணங்களைப்பற்றி ஆயுர்வேத ஆசிரியர் பின்வருமாறு சொல்லுகிறார்.

"துன்மார்க்க நடத்தையும், தினம் ஸ்நாநம் செய்யாமல் உடம்பில் அழுக்கடைவதும், கோபமும், துக்கமும், பயமும், விசாரமும், பொறாமையும், இரவில் வெகுநேரம் தூக்கம் விழித்திருப்பதும், அகால போஜனமும், ஒரே விதமான ஆகாரத்தை மாறுதலில்லாமல் தினமும் உட்கொள்வதும், சுருட்டுக் குடிப்பதும், தூசியும், அசுத்தமான காற்றும், அசுத்தமான வாழ்க்கையும், அதிக உஷ்ணமும் குளிரும் உடம்பைத்தாக்குவதும், ஈரமான இடங்களில் வசிப்பதும், தாராளமான மல ஜல நிவர்த்தி இல்லாதிருப்பதும், ஆகாரக் குறைவும், வஸ்திரக்குறைவும், அதிக வேலையும், வேலை செய்யாமலிருப்பதும், சரியான சுவாசப் பயிற்சி இல்லாமலிருப்பதும், இருண்ட முட்டுதட்டான இடங்களில் வசிப்பதும், இன்னும் இவை போன்ற காரணங்களும் ஒருவனுக்கு நோய்வராமல் தடுக்கும் உடல்வலியை அழித்து விடும்,"

நோய் வராமல் தடுக்கும் சக்தி, 'வைஷ்ணவசக்தி' என்று ஆயுர்வேத ஆசிரியர் கூறுவதைத்தான் ஆங்கிலேயர் "Immunity" என்று கூறுகிறார்கள். ஆகவே, இவ்விஷயம் புதிதாய் மேனாட்டாரால் கண்டுபிடிக்கப்பட்டதன்று; பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே நம் முன்னோர்களுக்குத் தெரிந்திருந்தது. சதுப்பு நிலங்களுக்கருகே பிறந்து வளர்ந்தவர்களுக்கு மலேஜுரம் வருவதில்லை; அங்கே புதிதாக யாராவது போனால் அவர்களுக்குச் சீக்கிரம் ஜுரம் கண்டு விடுகிறது. பிச்சைக்காரர்கள் ஊசிப்போன ஆகாரத்தை உட்கொண்டு சௌக்கியமாய் வாழ்கிறார்கள்; மற்றவர்கள் அவ்வாறு செய்தால் அவ்வுணவே அவர்களுக்கு விஷமாகும். நெடுநாளாக ஒருவன் விஷத்தை உட்கொண்டு பழகினால், அவனுக்கு அவ்விஷத்தால் ஒரு கெடுதியும் நேரிடாது. பைத்தியம் பிடித்த நாய் கடிப்பதால்

ஏற்படும் விஷத்தை மாற்றுவதற்கு இப்பொழுது மேனாட்டார் செய்யும் சிகிச்சை இவ்வுண்மையை ஆதாரமாகக் கொண்டதே. இவ்விஷயங்களை நம்முன்னோர்களும் நன்கு அறிந்திருந்தார்கள். பூனையின் மண்டையோடு எலிகடி விஷத்துக்கு மாற்று என்றும், கீரியின் எலும்பு பாம்பு விஷத்துக்குச் சிறந்த மாற்று என்றும் ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கிறது. மேனாட்டு வைத்தியப் புஸ்தகங்களில் இவ்வகையான மாற்று மருந்துகளைப்பற்றி வாசித்து, நாம் மேனாட்டாரின் புத்திகூர்மையை வியந்து மெச்சுகிறோம். ஆனால், உண்மையில், இவ்வகையானவும், இன்னும் மேனாட்டார் கண்டுபிடிக்காத வேறு பலவிதச் சிகிச்சை முறைகளும், நம் முன்னோர்களுக்கு, வெகுகாலத்துக்கு முன்பே, தெரிந்திருந்தன. நாய்கள், கோழிகள், பன்றி, வாத்து முதலிய ஜந்துக்களைத் தொடுவது தீண்டலென்றும், அவைகளைக் கூட்டிலடைத்து வைப்பது பாவமென்றும் அவைகளைத் தொட்டவர்கள் உடனே ஸ்நாநம் செய்யவேண்டுமென்றும் நம் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. இவ்வகை ஜந்துக்கள் மனிதர்களிடத்து நோய் பரவுவதற்குக் காரணமாயிருக்கின்றன என்பதை அறிந்தே நம் முன்னோர்கள் இவ்விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சூரிய வெளிச்சமும், நெருப்பும், சுத்தமான காற்றும், நோய்க்கிருமிகளை அழித்துவிடும் என்று அதர்வஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறது. நம் வைத்தியப் புஸ்தகங்களில், ரஸம் (கந்தகம்) சுண்ணாம்பு, களிமண் முதலியவை நோய்க்கிருமிகளைக் கொல்லுவதற்குச் சிறந்த மருந்துகள் என்று சொல்லியிருக்கிறது. இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்தால் நம் முன்னோர்களுக்கு நுண்ணுயிர் நூலைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று பலர் நினைப்பது முற்றிலும் தவறு என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் விளங்குகிறது.

நம்மவர்கள் மேனாட்டு வைத்திய முறைகளையும் சாஸ்திரத்தையும் பயிலுவது அவசியமே; ஆனால் அவர்கள் ஆயுர்வேத சாஸ்திரத்தை உபயோகமற்றதென்று இழிவாக மதிப்பது மட்டும் தவறு. வைத்திய கலாசாலையிலுள்ள மாணவர் ஆயுர்வேத சாஸ்திரத்தையும் பயில வேண்டுமென்று கட்டாயமிருந்தால், அது நம் நாட்டுக்கு எவ்வளவோ நன்மை பயக்கும்; வைத்திய சாஸ்திரமும் அதிக முன்னேற்றமடையும்.

வானசாஸ்திரம்.

[ம-ா-ா-ஸ்ரீ P. N. அப்புஸ்வாமி ஐயர் B. A; B. L; எழுதியது.]

சரித்திர வரலாறு.

(381-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

கி. பி. 1750-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தவரான லாகேல் (Lacaille) என்பவர் ஆப்பிரிக்கா கண்டத்தின் தென்கோடியாகிய நன்னம்பிக்கை முனையில் (Cape of Good Hope) ஒரு சிறிய நக்ஷத்திரகணித சாலையை ஸ்தாபித்தார். இம்முனையை ஐரோப்பியர் அறிந்ததற்குக் காரணபுருஷர் நாம் முன்னே கூறியுள்ள பார்தலோமியூ டயஸ் (Bartholomew Diaz) என்பவர். அவர் இந்தியாவிற்குச் செல்ல ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று கி. பி. 1486-ம் வருஷத்தில் இப்பக்கம் கப்பல்யாத்திரை செய்துவந்தபொழுது ஒரு பெரிய புயல் கிளம்பி, கப்பலிலிருந்தோர்க்கு மிகுந்த பயத்தை உண்டாக்கிய காரணத்தால் இம்முனைக்குப் புயல்முனை (Cape of Storms) எனப் பெயரிட்டாரென்றும்; அவர் புயலுக்குத் தப்பித் தம் மூருக்குச்சென்று, தம் மரசனிடம் நடந்த அதிசய விருத்தாந்தங்களைக்கூறி, இம் முனைக்குப் புயல்முனையென்று நாமகரணம் செய்திருப்பதைச் சொன்னபொழுது, இரண்டாவது ஜான் (John II) என்னும் போர்த்துகல்தேசத்தரசன், கஷ்டங்களுக்குப் பின்னரே சந்தோஷமுண்டாகு மாகையால், நீர் பட்ட கஷ்டம் சுகத்திற்கே அறிகுறியெனக் கூறி, அக்கஷ்டத்தினாலேயே இந்தியாவுக்குச் செல்லும் மார்க்கத்தைச் சீக்கிரம் கடவுள் நமக்குக் காட்டுவார் என்ற நம்பிக்கை நமக்குப் பூரணமாய் ஏற்பட்டதால், இம்முனையை நன்னம்பிக்கை முனை என்றே அழைத்தல் வேண்டும் என்று கட்டளையிட்டான். இம்முனையை முதன் முதல் சுற்றிச் சென்று கள்ளிக்கோட்டையை அடைந்த வாஸ்கோ டி காமா (Vasco de Gama) என்பவரும் போர்த்துகல் நாட்டினரே. இதன் பக்கப்பிரதேசங்களாகிய கேப் காலனி (Cape Colony), நேடால் (Natal) என்னுமிடங்களைத் தினசரிப் பத்திரிகைகளை இந்நாட்களில் படிப்போர் யாவரும் அறிவார்கள்.

ஆகாயத்தின் தென்பாகத்திலுள்ள நக்ஷத்திரங்கள் யாவும் பூமத்திய ரேகைக்கு வடக்கே யிருப்போர்க்குப் புலப்படா வென்றும், அவற்றுள் சில தெரிவன என்றும், எஞ்சியவற்றைப் பார்க்க முயலுவோர் தென்னடுகளுக்கே செல்லல் வேண்டு மென்றும் நாம் முன்னே கூறியிருப்பதை இங்கு நினைப் பூட்டுகிறோம். தெற்கேயுள்ள நக்ஷத்திரங்களைக் கவனித்துக் குறிக்கவே இவ்விடத்தில் நக்ஷத்திரகணித சாலை யொன்றை லாகேல் ஸ்தாபித்தா ரென்று நாம் எடுத்துக்கூற வேண்டியதில்லை.

ஜெர்மனி தேசத்தில் கானிக்ஸ்பெர்க் (Konigsberg) நகரத்தில் கி. பி. 1724-ம் வருஷத்தில் பிறந்த இம்மானுவேல் கான்ட் (Immanuel Kant) என்பவர் நிகரற்ற ஆத்மதத்வ சாஸ்திரி (Metaphysician) யெனப் பெயர் வாய்ந்தவர். இவர் தம் மூரிலிருக்கும் சர்வகலாசாலையில் கணிதம் (Mathematics), வேதாந்தம் (Theology) தத்வசாஸ்திரம் (Philosophy) தர்க்கம் (Logic) முதலிய சாஸ்திரங்களை மாணவர்களுக்கு உபதேசம் செய்துவந்தார். தற்காலத்திலும் தத்வசாஸ்திரிகளுள் இவர் இயற்றிய அருமையான நூல்களைப் படித்துணர்ந்து மகிழாதாரில்லை. பிற்காலத்தில் லாப்லேஸ் (Laplace) என்பவர் எடுத்துக் கூறிய தூமபடலக் கோட்பாட்டையும் (Nebular Theory), அதற்கும் பின்னர் ஸர் ஜார்ஜ் டார்வின் (Sir George Darwin) விஸ்தரித்துரைத்த ஏற்றவற்ற கோட்பாட்டையும் (Tidal Theory) இம்மகான் அக்காலத்திலேயே தாமியற்றிய நூல்களில் சுருக்கிக் கூறியிருப்பதைக் காணலாம்.

கி. பி. 1749-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தில் பிறந்த லாப்லேஸ் (Laplace) என்பவர் ஓர் ஏழைக் குடும்பத்தில் ஜனித்தவர். தம்முடைய சாஸ்திர ஆராய்ச்சியே காரணமாக இவர் சாஸ்திரஞ்ஞானிகளுள் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்தார். வானசாஸ்திரவிஷயங்களிலும், பௌதிகசாஸ்திர (Physics) விஷயங்களிலும் கணித சாஸ்திரத்தைப் பிரயோகித்து அதனால் நூதனமான அறிவைப் பெருக்கும் வல்லமை வாய்ந்தவரென்று இவர் எல்லாராலும் கொண்டாடப்பட்டார். கான்ட் சுருக்கிக் கூறிய தூமபடலக் கோட்பாட்டைக் கணித சாஸ்திர முறைகளுக்கிணங்க விவரித்துரைத்தது இவர் தாம்.

ஜெர்மனி தேசத்தைச் சேர்ந்த ஹானோவரில் (Hanover) கி. பி. 1738-ம் வருஷத்தில் ஒரு சங்கித வித்வானுடைய புத்திரனாக

ஸர் வில்லியம் ஹேர்ஷெல் (Sir William Herschell) என்பவர் பிறந்தார். இவர் பாலியத்தில் சங்கீதமே அதிகம் பயின்றார். பதினேழாம் வயதில் ஹானோவர் பட்டாளத்தில் ஓபோ (Oboe) என்னும் வாத்தியம் வாசிப்பவராக அமர்ந்திருந்தார். இரண்டு வருஷங்களுக்குப் பின்னர் பட்டாளவேலையை வெறுத்துச் சொல்லிக்கொள்ளாமலே வேலையை விட்டுவிட்டு ஓடிப் போய்விட்டார். சிறிது காலத்துக்கு பிறகு இங்கிலாந்து தேசத்திலுள்ள பாத் (Bath) என்னும் நகரத்துக்கோயிலில் சங்கீத வித்வானாக வேலைபார்த்துவந்தார். இவ்வேலையும் இதரவேலைகளும் இவருடைய காலத்தை அதிகம் கவர்ந்தனவெனினும், சோர்வும் ஓய்வும் அறியாத சுறுசுறுப்பான சுபாவத்தை அருளப்பெற்ற இம்மகான் காலம்வாய்ந்த தருவாய்களில் இத்தாலிய, கிரேக்க பாஷைகளையும், 'சுத்தகணிதம்' என்று சொல்லப்படும் சாஸ்திரத்தையும், ஒளியைப்பற்றிய பௌதீக சாஸ்திர விஷயங்களையும், வானசாஸ்திரத்தையும் மேன்மேலும் படித்துப் படித்துத் தாம் இவ்விஷயங்களில் கொண்டுள்ள தீரா அவாவை ஒருவாறு நிறைவேற்றிக்கொள்ள முயன்றார். இவர் தம்முடைய முப்பத்தைந்தாம் வயதில் தான் முதன்முதல் தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலமாக ஆகாயத்தை நோக்கியது. அப்பொழுது தமக்குத் தோன்றிய வியப்புக்களைக் கண்ணுற்று அந்நாட்களில் கண்ணாடிகளின் விலை அதிகமாகையால் ஒரு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியைத் தாமே செய்ய முயன்றார். இவருடைய சகோதரியான காரோலைன்ஹேர்ஷெல்(Caroline Herschell) என்னும் சீமாட்டி இவருக்கு மிகவும் ஆப்த சினேகிதையாயிருந்து இம்முயற்சியில் உதவிபுரிந்தனர். இச்சீமாட்டி பிற்காலங்களிலும் வானசாஸ்திர விஷயங்களில் இவருக்கு உதவிபுரிந்ததும் தவிர இவருடைய உத்தியோக பாரங்கள் இவரை அதிகம் பீடிக்காவண்ணம் அப்பொறுப்புக்களையெல்லாம் தாமேவகித்துத் தம்முடைய சகோதரர் மனந்தளராதபடி அவரை ஊக்கமுறச் செய்துவந்தனர். பகல்முழுதும் ஸர் வில்லியம் தூரதிருஷ்டிக் கண்ணாடிக்காகக் கண்ணாடிகளைத் தேய்த்துச் சுத்தம் செய்வதிலும், அவற்றை உரைத்து ஒழுங்கும் பளபளப்பும் அடையச்செய்வதிலும், சங்கீதப்பாடங்கள் சொல்லிக்கொடுப்பதிலும், சங்கீதக் கச்சேரிகள் நடத்துவதிலும் காலத்தைச் செலவிட்டு, அக்காலங்களில் இடை இடையேயும் அனேகமாக இராமுழுதும் ஆகாயத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பரீக்ஷை செய்துவந்தார். இவ்வாறு ஏழு வருஷங்கள் சென்றபின்னர் கி. பி.

1781-ம் வருஷத்தில் ஒருநாள் மிதுனராசி (The Twins) யிலிருக்கும் நக்ஷத்திரங்களை ஒவ்வொன்றாகப் பரிசோதிக்க ஆரம்பித்தார். தூரதிருஷ்டிக் கண்ணாடியிலும்கூட நக்ஷத்திரங்கள் புள்ளிகள்போல் தோற்றுவனவேயல்லாது தட்டுப்போல் தோன்றமாட்டா. பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியை உபயோகித்தால் அது நக்ஷத்திரத்தைச் சற்று பெரிதாகவும், சிறிய தட்டுப்போன்ற வடிவமுடையதாகவும் காட்டக்கூடும் என்று நம் நேயர்களில் சிலர் நம்பியிருக்கலாம். வாஸ்தவத்தில் அப்படியல்ல. நாம் எவ்வளவுக்கெவ்வளவு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியை உபயோகிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நக்ஷத்திரம் சிறியதாகத் தோன்றும். ஆனால் அதன் வடிவத்தின் ஓரங்கள் மங்கலாயிராமல் தெளிவாகத் தோன்றுவன. ஆகவே மிகப் பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியில் ஒரு நக்ஷத்திரம் மிகச்சிறிய, ஒளியிருந்த, ஸ்பஷ்டமான, புள்ளிபோலக் காணப்படும். இதற்குக் காரணம் அது பொதுவாக அளப்பரிய தூரத்துக் கப்பாலிருப்பதே. கிரகங்கள், தூமகேதுக்கள் முதலியவை இவ்வாறு விபரீதமாக நடப்பனவல்ல. நாம் உபயோகிக்கும் கருவியையொத்து அவை சிறியனவாயும், பெரியனவாயும் காணப்படுவன. ஹெர்ஷெல் அன்று நக்ஷத்திரங்களைக் கவனிக்கும்போது அவற்றுள் ஒன்று கண்ணாடியின் சக்திக்கிணங்கப் பெரிதாகக் காணப்படுவதைக் கவனித்து அஃது ஒரு தூமகேதுவா யிருக்குமோவென்று ஐயுற்றார். பண்டைக்காலம்முதல் கிரகங்கள் ஐந்தெனவே வழங்கப்பட்டு வந்தமையால் ஆறாவது கிரகத்தைக் கண்டு பிடிக்கும் அளப்பரிய அதிருஷ்டத்தைத் தாம் அடைந்ததாக இவர் நம்பவில்லை. ஆயினும் சிலநாட்கள் அதைக் கவனித்த பொழுது அஃது இடம் பெயர்ந்ததாலும், கண்ணாடிக்குத் தகுந்தவாறு பெரிதாகத் தோற்றினதாலும், அதன்சலனம் தூமகேதுவின் சலனத்தைப் போலல்லாமல் கிரகத்தினுடைய சலனத்தையே ஒத்திருந்ததாலும் அஃது ஒரு கிரகமென்று அறிந்து, அச்செய்தியைப் பகிரங்கப்படுத்தினார். உடனே இவ்விஷயம் எங்கும் பரவிற்று. அக்காலத்துச் சாஸ்திரஞ்ஞானிகளிலும் மற்றோரிலுமே "இச்சங்கீத வித்வான் யார்?" என்று பிரமித்துக் கேட்காதாரில்லை. இங்கிலாந்தில் அரசுபுரிந்த மூன்றாவது ஜார்ஜ் (George III) இதைக்கேள்வியுற்று ஹெர்ஷெலைத் தம்முன் வரும்படி ஆஞ்ஞாபித்தார். இவர் அங்குச் சென்றதும் இவரை மகிழ்வுடன் வரவேற்று இவர் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அக்காலத்தில் இங்கிலாந்து மன்னன்

ஹானோவருக்கும் அரசன் என்பது சரித்திரம் படித்தோர் அறிந்திருக்கலாம். ஹானோவர் பட்டாளத்தை விட்டோடின குற்றத்திற்காகத் தண்டனைக்குள்ளாகவேண்டிய ஹெர்ஷெலைமன்னித்துவிட்டதாக அரசன் கைப்படவே அக்கடிதத்தில் எழுதியிருந்ததைப் பார்த்துஹெர்ஷெல் மகிழ்வுற்றார். பிறகு அரசன் கட்டளைப்படி புதுகிரகத்தைப் பற்றிய விஷயங்களை ஆதியோடந்தமாகக் கூறினார். இவற்றையெல்லாம் கேட்ட அரண்மனைச் சீமாட்டிகள் வானத்திலுள்ள அற்புதங்களைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். ஆகவே ஹெர்ஷெலின் பெயர்பெற்ற தூரதிருஷ்டிக் கண்ணாடி விண்ட்சர் (Windsor) அரண்மனைக்குக் கொண்டுபோகப்பட்டது. ஆனால் அன்று விபரீதமாக மேகங்கள் மூடி ஆகாயத்திலொன்றும் தோன்றாவண்ணம் மறைத்து நின்றன. ஹெர்ஷெல் எப்படி அற்புதங்களைக் காட்டக்கூடும்? அரசன் உத்தரவு என்றால் மேகங்கள் அஞ்சி ஒதுங்காவே. ஆகையால் ஹெர்ஷெல் தம்முடைய கண்ணாடியை ஆகாயத்தை நோக்க வைக்காமல் சற்றுதூரத்துக்கப்பாலுள்ள தோட்டச் சுவரொன்றை நோக்கவைத்தார். சீமாட்டிகள் ஒவ்வொருவராகத் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் வழியாய் நோக்கி ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தார்கள். அவர்கள் எதைப் பார்த்துச் சந்தோஷமடையக்கூடும்? சுவரை நோக்கினால் மேலுள்ள காரை தெரியலாம், அல்லது காரை உதிர்ந்துபோய்ச் செங்கல் தெரியக்கூடும், ஒருவேளை சுவரின்மேல் படர்ந்திருக்கும் செடி கொடி பாசி தெரியக்கூடும். இவையெல்லாம் ஆச்சரியத்தை விளைவிப்பன அல்லவே. சீமாட்டிகள் கண்ணுற்றது சனியினுடைய அழகு மிகுந்த பிம்பமே—நடுவில் அழகிய கோளமும், சுற்றும் யாவர் மனத்தையும் கவரும் வடிவுவாய்ந்த அதன் வளையங்களும், யாவுமே அங்கிருந்தன. முதிர்ந்த வானசாஸ்திரிகளும்கூட இது வாஸ்தவமாகச் சனியின் பிம்பமென்றே ஒப்புவார்கள். சுவரில் சனி எப்படி வரக்கூடும்? அன்றுமாலை மேகங்கள் அடர்ந்திருந்ததால், தாம் நினைத்திருந்தவாறு நிகரற்ற அழகுவாய்ந்த சனியின் பிம்பத்தைச் சீமாட்டிகளுக்குக் காட்ட முடியாதென்று அறிந்து சனியினுடைய பிம்பம் ஒன்றுவரைந்து, அதைச் சுவரில் சரியான இடத்தில் வைத்து, இரவில் தம் கண்ணாடியை அதை நோக்கித் திருப்பியது இவருடைய புத்தி சாதுர்யத்தை விளக்கும். அக்காலமுதல் அரசன் ஹெர்ஷெலுக்குச் சம்பளமேற்படுத்தி வானசாஸ்திர ஆராய்ச்சியே செய்யவேண்டு

மென்று கட்டளையிட்டான். ஹெர்ஷெலும், அவர் சகோதரியும் அவ்வாறே நடந்தனர். இவருக்குப் பெருமையை அருளிய புதுக்கிரகத்திற்கு இவர் ஜார்ஜியம் ஸைடஸ் (Georgium Sidus) என்று பெயரிட்டது, அரசனிடம் இவருக்கிருந்த நன்றியறிவை விளக்கும். ஐரோப்பாக் கண்டத்திலேயுள்ள இதர வானசாஸ்திரிகள் இப்பெயரை ஒப்பவில்லை. மற்றக் கிரகங்களெல்லாம் தெய்வங்கள் பெயர்களையே கொண்டன. வியாழனுடனும் சனியுடனும் ஒரு சாதாரணமான பூலோக மன்னனைச் சமமாகக் கூறுவதுசரியல்லவென்றார்கள். மேலும், சூரியன் அஸ்தமிப்பதில்லை யெனப் பெருமை வாய்ந்த பிரிடிஷ் ராஜ்யம் ஏற்கெனவே பூமியின் மேல் எல்லாத்திசைகளிலும் பரந்து விஸ்தரித்திருப்பது போதும், ஆகாயத்திலும்கூட அது படர்ந்து செல்லாமல் தடுக்க வேண்டியது நமது கடமை என்ற எண்ணமும் அவர்களுக்கு இருந்திருக்கலாம். கடைசியாக எல்லாரும் கூடி யோசித்து இப்புதிய கிரகத்துக்கு "யூரனஸ்" என்று நாமகரணம் செய்தார்கள்.*

[சிறு கிரகங்களைப் (Asteroids) பற்றிய ஆராய்ச்சிகள் செய்து வந்த ப்ரோபஸர் டிஷியஸ் (Professor Titius), காஸ் (Gauss) என்ற ஜெர்மானியர்களும், பியாஸ்ஸி (Piazzi) என்றஸிஸிலி (Sicily) தேசத்தவரும் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் வாழ்ந்தவர்கள்.]

முன் கூறிய ஹெர்ஷெலின் புத்திரரான ஸர் ஜான் ப்ரெடெரிக் ஹெர்ஷெல் (Sir John Frederick) என்பவர் பிதாவின் உள்ளத்தை மகிழச் செய்யும் அறிவு வாய்ந்தவர். இவர் ஈடன் (Eton) கேம்ப்ரிட்ஜ் (Cambridge) இவைகளில் பயின்று சர்வகலாசாலைகளில் பட்டமும் பெயரும் பெற்றார். பிறகு கணிதத்தையும் வானசாஸ்திரத்தையும் அப்பியசித்தார். கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் இவர் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று நன்னம்பிக்கை முனையில் நான்கு வருஷம் (1834-1838) செலவிட்டு, தெற்கேயுள்ள நக்ஷத்திரங்களின் அட்டவணை ஒன்று இயற்றினர். ஆகாசகங்கை, சாயாபதம், பயோ மார்க்கம் (Milky Way) என்று பலவாறாகக் கூறப்பட்டு ஆகாயத்தின் வயிரமிழைத்த மேகலையோவென நாம் நினைக்குமாறு எண்ணிறந்த நக்ஷத்திரங்களடங்கிய ஓர் அகன்ற வளையம்போல் நமக்குத் தோற்றுவது என்ன, ஏன் அது அப்படித் தோற்றவேண்

* From Sir Robert Ball's *Star Land*.

டும் என்ற விஷயங்களை ஆராய்ச்சி செய்தவர் இவரே. வானசாஸ்திர சம்பந்தமான இதர விஷயங்களைப்பற்றியும் மிகுதியாக எழுதியிருக்கிறார்.

அயர்லாந்து (Ireland) தேசத்தவரான ராஸ் பிரபு (Lord Rosse) கி. பி. 1800-ம் வருஷத்தில் பிறந்தவர். பெரிய தூரத்திருஷ்டிக் கண்ணாடிகள் செய்வதில் கியாதி பெற்றவர். அக்காலத்துத் தூரத்திருஷ்டிக் கண்ணாடிகளெல்லாம் பிரதிபிம்ப தூர திருஷ்டிக் கண்ணாடிகளே (Reflecting Telescopes). இவர் செய்த ஆறடி அகலமுள்ள கண்ணாடி அந்நாட்களிலுள்ள கண்ணாடிகள் யாவற்றிலும் மிகப் பெரிது. அதனின் உதவியால் இவர் தூமபடலங்களைப் (Nebulae) பற்றிய ஆராய்ச்சி செய்தார். முன் தூமபடலங்களெனக் கருதப்பட்டிருந்தவற்றுள் சில நக்ஷத்திரக் கூட்டங்களேயென்றும், நக்ஷத்திரங்களென நினைத்திருந்தவற்றுள் சில தூமபடலங்களென்றும் இவர் கண்ணாடிமூலமாக வெளியாயின.

யூரனஸை ஹெர்ஷல் கண்டுபிடித்தாரென்று நாம் கூறியபொழுது இஃது ஒரு கிரகமென்று அவர்தாம் முதன் முதல் அறிந்து கூறினாரெனப் பொருள் படுத்த வேண்டுமேயல்லாது, இது மற்றவர் கண்களுக்கு அதற்கு முன்னால் தோற்றவேயில்லை யெனக் கொள்ளலாகாது. இது கிரகமென்றறிந்த பின்னர் பழைய அட்டவணைகளை நோக்கும்போது, இதைப் பலர் சிறிய நக்ஷத்திர மெனக்கருதி அட்டவணைகளில் பதிந்திருப்பது தெரியவந்தது. அவ்வட்டவணைகளை ஒப்பிட்டுப் பார்க்குங்கால் இது சூரியனைச் சுற்றி யோடுகிற மார்க்கம் நிச்சயமாய்த் தெரிந்தது. இது கிரகமென்றறிந்த பின்னர் இதன் சலனத்தைக் கவனித்துவந்த வானசாஸ்திரிகள் முன் நிர்ணயிக்கப்பட்ட மார்க்கத்திற்கும் இது செல்லும் மார்க்கத்திற்கும் சிறிது பேதமிருப்பதை அறிந்தார்கள்.

இப்பேதம் அதிநுட்பமான இயந்திரங்கள் மூலமாய் அறிய முடியுமேயல்லாது கேவலம் கண்ணால் பார்ப்போருக்குத் தெரியாது: பேதம் அவ்வளவு சிறிதே ஏற்பட்டபோதிலும், இது பேதமேயாதலால் வானசாஸ்திரிகள் இதன் காரணத்தை அறிய முயன்றனர். சற்றேறக்குறைய ஒரே காலத்தில் கேம்ப்ரிட்ஜில் கல்வியின்ற ஆடம்ஸ் (Adams) என்பவரும் ப்ரான்ஸ் தேசத்தவரான லெவெரியர் (Leverrier) என்போரும் இவ்விஷயமான ஆராய்ச்சியைத் தொடங்

கின்ர். இருவருள் ஆடம்ஸ் சற்று முன்னும் லெவெரியர் பின்னுமாகப் பேதத்தின் காரணம் யூரனஸுக்கும் அப்பாலுள்ள ஒரு கிரகம் அஃதை இழுப்பதேயென்று அறிந்தனர். ஆடம்ஸ் தாமறிந்ததை கி. பி. 1845-ம் வருஷத்தில் ராஜ்ய வானசாஸ்திரிக்கு அனுப்பினர். அவரும் இவருடைய கடிதத்தைக் கவனமாகப் படித்து அஃது அருமையான விஷயமடங்கிய தென்றறிந்தார். உடனே அதிலடங்கிய ஒரு விஷயத்தைக் குறித்துச் சற்று விளங்கும்படி விரித்தெழுத வேண்டுமென்று பதிலனுப்பினர். ஆடம்ஸ் இக்கடிதத்துக்குப் பதிலெழுதாமல் காலஹரணம் செய்துவிட்டார். இதனிடையில் லெவெரியர் தம்முடைய கணக்குக்களைப் பிரசுரித்தார். இதைப் படித்த ராஜ்ய வானசாஸ்திரி ஆடம்ஸும் லெவெரியரும் ஒத்திருப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்து கேம்பிரிட்ஜைச் சேர்ந்த ப்ரோபஸர் சால்லிஸ் (Professor Challis) என்பவருக்கு ஆடம்ஸ் குறிப்பிட்ட இடத்தில் புது கிரகம் தென்படுகிறதாவென்று கவனித்துப் பார்க்கும்படி உடனே கடிதமெழுதினர். அவர் அவ்வாறே கவனித்துக் குறித்தாரெனினும் அவர் எழுதிய குறிப்புக்களை அப்போதைக்கப்போது ஒத்துப் பார்க்காமல் பிற்பாடு அதன் சலனத்திலிருந்து நக்ஷத்திரமோ கிரகமோவென்று அறிந்து கொள்ளலாமென்று சும்மா இருந்துவிட்டார். இவர்கள் இங்கிலாந்தில் இவ்வாறு வலைபோட்டுத் தேடிக்கொண்டிருக்கையில் லெவெரியர் என்பவர் தம் கணக்குக்களை முடித்து, பேர்லின் (Berlin) நக்ஷத்திர கணிதசாலையில் வேலை பார்த்து வந்த கால்லி (Galle) என்பவருக்குப் புதிய கிரகமிருக்கவேண்டிய இடத்தைக் குறிப்பிட்டு அவ்விடத்தில் தேடும்படியாகக் கடிதம் எழுதினர். கால்லியும் சந்தோஷமாக ஒப்புக்கொண்டார். அவர் தேடவேண்டிய பிரதேசத்தின் நக்ஷத்திரப்படம் அவரிடம் ஏற்கெனவே இருந்தது அவருடைய அதிருஷ்டவசமே. கடிதம் கிடைத்த இரவே கால்லியின் கண்ணுக்கு அப்புதிய கிரகம் தென்பட்டது. மறுநாள் லெவெரியரும் கால்லியுமாகப் புதிய கிரகமொன்றைக் கண்டு பிடித்துவிட்டார்களென்று உலகெங்கும் பரவிற்று. இதைக் கேள்வியுற்ற சால்லிஸ் தம் மட்டவணைகளைப் புரட்டிப் பார்க்கும்பொழுது, தாம் அப்புதிய கிரகத்தை இரண்டு தறுவாய்களில் கவனித்திருப்பதை அறிந்து, மிக்க விசனமுற்றார். ஆயினும் நம்பிக்கையுடனும் ஊக்கத்துடனும் முயன்றோர் சந்தேகத்துடனும் காலதாமதத்

துடனும் முயன்றோருக்கு முன் பலன் அடைவது இயல்பேயாதலின் நாம் கால்லியின் ஜயத்திற்குச் சந்தோஷிப்போமேயல்லாது ரால்லி வின் தோல்விக்கு வருத்தமுறோம். இப்புதிய கிரகத்துக்கு நெப்டியூன் என்று நாமகரணம் செய்தார்கள்.

சற்றேறக்குறைய இதே காலத்தில் நன்னம்பிக்கை முனையில் ஒரு பெரிய நக்ஷத்திர கணிதசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இதற்குச் சிறிது காலத்துக்குப் பின்பே, ஆஸ்ட்ரேலியாவில் (Australia) நக்ஷத்திர கணித சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

கி. பி. 1849-ம் வருஷத்தில் காப்டன் கில்லிஸ் (Captain Gillis) என்பவர் தென் அமெரிக்கா (South America) விலுள்ள சிலி (Chile) தேசத்தில் ஒரு நக்ஷத்திர கணிதசாலை ஏற்படுத்துவதற்காகக் கப்பல் பிரயாணம் செய்து அந்நாட்டையடைந்தார். அவ்விடத்தில் ஸாண்டியாகோவில் (Santiago) உயர்ந்த பாறையான பிரதேசத்தின் மேல் தம்முடைய சாலையை ஏற்படுத்தினர். அங்கே சில காலமிருந்து நக்ஷத்திரங்களைக் கவனித்துக் குறிப்புக்கள் எழுதிக் கொண்டு வந்தார். ஆனால் இவர் எதிர்பாராதவண்ணம் இவருடைய முயற்சி வீண்போயிற்று. ஏனென்றால் இவர் தம்முடைய கணிதசாலையை ஒரு பாறைப் பாங்கான இடத்தில் நிருமித்தார் என்று சொன்னோமல்லவா? ஒவ்வொரு நாளும் பாறை வெயிலில் காய்வதால் சற்றுப் பெரிதாகியும், இரவில் குளிர்வதால் சற்றுச் சுருங்கியும் இவருடைய குறிப்புக்களைப் பாழ்படுத்தியது.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில் பெஸ்ஸெல் (Bessel) என்னும் ஜெர்மானிய வானசாஸ்திரி லுப்தக நக்ஷத்திரம் (Sirius) இடம்பெயர்ந்து கொண்டேயிருக்கிறதென்று கூறினர். இது காறும் நக்ஷத்திரங்கள் வெகுவாக அசைவற்றனவென்றே கருதப்பட்டிருந்தன. அதனால் தான் கிரகங்களுக்கு ப்ளானெட் (Planet), அதாவது சலனமுள்ளது என்ற வித்தியாசத்தைச் சுட்டிக் காட்டும் பெயரிடப்பட்டது. மேலும் லுப்தகன் செல்லும் மார்க்கம் முட்டை வடிவமானதென்றும் அஃது இவ்வாறு செல்லுவதற்குக் காரணம் அதற்குப் பக்கத்திலேயே ஒளியற்றிருக்கும் பிரமாண்டமான நக்ஷத்திரமொன்று அஃதை இழுப்பதேயென்றும், இவ்விரண்டுமாகச் சேர்ந்து பொதுவான ஒரு மத்தியத்தை சுற்றிச் சுழலுகின்றனவென்றும் பெஸ்ஸெல் ஊகித்தார். இவருடைய ஊகம் சரியென்று பின்னால் கணக்கு மூலமாக நிச்சயமாயிற்று.

கி. பி. 1870-ம் வருஷத்தில் தென் அமெரிக்காவில் ஆர்ஜென்டைன் குடியரசு நாட்டில் (Argentine Republic) கார்டோபா (Car doba) என்னும் ஸ்தலத்தில் ஒரு நக்ஷத்திர கணிதசாலையானது டாக்டர் கோல்ட் (Doctor Gould) என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

கி. பி. 1877 - ம் வருஷத்தில் ப்ரோபஸர் ஷ்யாபரேலி (Prof: Schiaparelli) என்பவர் செவ்வாயின் அழகிய பிம்பத்தில் நுண்ணிய கோடுகள் தமக்குத் தென்பட்டதாகக் கூறினர். * இதன் பிறகே செவ்வாயைப் பற்றிய விசாரணை அதிகரித்தது. இவ் விஷயமாகப் பணம் செலவிட்டுப் பெரிய நக்ஷத்திர கணிதசாலை ஏற்படுத்திச் செவ்வாயில் உயர்தர உயிர் உண்டென்று நிலை நிறுத்த முயன்ற பெர்ஸிவல் லோவெல் (Percival Lowell) என்பவரைப் பற்றி நம் நேயர்கள் அறிவார்கள்.

கி. பி. 1888-ம் வருஷத்தில் அமெரிக்காவில் லிக் (Lick) நக்ஷத்திர கணிதசாலையில் மிகப் பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியும், சாயாதர்சன யந்திரமும் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றின் உதவியால் அநேக புதிய நக்ஷத்திரங்களும், தூம படலங்களும் நமக்கு ஒன்றாகத் தோற்றினும் யதார்த்தத்தில் இரண்டு மூன்று நக்ஷத்திரங்களடங்கிய ஜோதிகணங்களும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. நமக்கு அசைவற்றனவாகத் தோன்றும் நக்ஷத்திரங்கள் வாஸ்தவத்தில் அசைவுள்ளன; அவை இன்ன இன்ன வேகத்தோடு இன்ன இன்ன திசையை நோக்கிச் செல்கின்றனவென்றும் நாம் அறிவதற்கு இந்தக் கணிதசாலை ஒரு காரணமாயிருந்திருக்கிறது. உலகப் பிரசித்தி பெற்ற காம்பெல் (W. W. Campbell) என்பவர் இவ்விடத்தில் உழைத்தவரே.

வான சாஸ்திரத்தைப்பற்றி இவ்வாறு ஜனங்கள் ஊக்கமுற்று மூலைக்கு மூலை நக்ஷத்திர கணிதசாலைகளை நிருமாணித்தார்கள். ஹைதராபாத்திலுள்ள நிஜாமியா (Nizamiah) நக்ஷத்திர கணிதசாலையும் கோடைக்கானல் (Kodaikanal) நக்ஷத்திர கணிதசாலையும் இவ் வூக்கத்தின் பயனாகவே ஸ்தாபிக்கப்பட்டன.

முன் காலங்களில் வான்சாஸ்திரி யென்று ஒருவன் இருந்தால் அவன் வானசாஸ்திர விஷயங்கள் அனைத்திலும் தலையிட்டு அறிவை

---

* நமது இரண்டாவது சஞ்சிகையில் இதைப்பற்றி விரிவாகக் கூறியிருப்பதை நினைப்பூட்டுகிறோம்.

விருத்தி செய்ய முயலுவது வழக்கம். ஆனால் தற்காலத்திலோ அப்படிச் செய்வது சாத்தியமுமல்ல, செய்வதும் கிடையாது. வானசாஸ்திரப் பயிற்சிக்கு இன்றியமையாத விஷயங்களை மட்டுமே யாவரும் கற்கிறார்கள். மற்ற விஷயங்களுள் அவரவருடைய மனத்தின் போக்குப்போல ஒவ்வொன்றை மட்டுமே அதிகமாகக் கவனிக்கிறார்கள் சிலர் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாகச் சிறிய நக்ஷத்திரங்களையும் அவை ஆகாயத்தில் சிதறிக்கிடக்கும் ஒழுங்கையும் பற்றிய விஷயங்களைக் கவனிக்கிறார்கள். சிலர் புதிய தூமபடலங்களை அறிவதிலும் மற்றவைகளை வகுப்பு வகுப்பாகப் பிரித்துக் கூறுவதிலுமே கருத்தாயிருக்கிறார்கள். சிலர் நக்ஷத்திரங்களின் வயதை நிருணயிப்பதிலும்; சிலர் இரட்டித்த நக்ஷத்திரங்களைக் காணுவதிலும்; சிலர் மாறுபாடான சுபாவமுள்ள நக்ஷத்திரங்களைக் குறிப்பாகக் கவனிப்பதிலும்; மற்றும் சிலர் சூரிய வடுக்களையும் பிம்பத்தின் மாறுபாடுகளையும் குறிப்பதிலும்; சிலர் நக்ஷத்திரங்களை மண்டலங்களாகவும், வகுப்புக்களாகவும் பிரித்தெழுதுவதிலும்; சிலர் நக்ஷத்திரகதிகளையும், சிலர் வெவ்வேறு கிரகங்களையும், தூமகேது வாதியனவற்றையும் ஆராய்கிறார்கள். இப்படிப் பலரும் வெவ்வேறாக அவரவருக்குத் தோன்றியவாறு வெவ்வேறு விஷயங்களை ஆராய்ச்சி செய்கிறார்கள். வீணாக அறிவைப் பலவழிகளில் செலுத்திச் சிதறாமல் ஒரே விஷயத்தில் முழு மனத்தையும் செலுத்துவது உலகத்துக்கு முன்னிலும் அதிகமாகப் பயன்தரக் கூடியதென்று எளிதில் விளங்குமாதலால் ஏன் அவர்களுள் ஒவ்வொருவரும் எல்லா விஷயங்களையும் அறிய முயலவில்லை என்னும் வினா உண்டாகாது.

மிகச் சுருங்கக் கூறின் இதுவே வானசாஸ்திரத்தின் வரலாறாகும். மனிதர் இந்நிலவுலகின்கண் சில சதுர மைல் அளவுள்ள சிறிய பிரதேசம் ஒன்றையே அறிந்து, இப்பூமியின் அளவையாவது, வடிவத்தையாவது, வானில் அசைந்தோடிக் கீழே ஒளி பரப்பும் சோதிகளுக்கும் அதற்குமுள்ள சம்பந்தத்தையுமாவது அறியாதிருந்த காலம் முதல், எவ்வகையாலும் சொல்லுதற்கியலாத விரிவையும், மாட்சிமையையும் கலம்பகப் பெருக்கையுமுடைய பலகோடி சூரியர்களடங்கியபிரபஞ்சத்துள்ளோம் யாம் என்று நாம் நினைக்கும் இற்றைக் காலம் வரை பெற்றுள்ள அறிவின் வரலாறே இச்சரிதம். சூரியனையும் சந்திரனையும், நக்ஷத்திரங்களையும் காலத்தை அறிவிக்கும் கருவிகளாக உபயோகிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்த காலத்தி

லேயே இந்நூலும் தொடங்கிற்று. ஆனால் ஒழுங்குள்ள காட்சியும் நினைவும் அறிவினைப் பயக்க, வேறு பயனொன்றுமே குறியாமல் அறிவை அறிவின் பொருட்டே மக்கள் விரும்புவாராயினர். முன்னிலும் அதிகமாகக் கூரிய நோக்கத்தையும், தெள்ளிய ஆராய்ச்சியையும், திண்ணிய யூகத்தையும் மனிதர்கட்கு அளித்து, அவர்களுடைய திறமைகளைப் பெருக்கியதே அம்முயற்சி தந்த நற்பயனாகும். அம்முயற்சியை மாத்திரம் நோக்கில் அதற்கோரளவில்லை. இன்னும் நாம் விடைதெரியவேண்டியுள்ள வினாக்கள் முன்னைக்காட்டிலும் இப்பொழுது தொகைமிகுந்துகொண்டே யிருக்கின்றன. ஆதலால் இந்நூலாராய்ச்சியை வற்புறுத்தும் வண்ணம் விண்ணினின்றெழும் விளி ஒலி இஃதே.

"நமது கண்களால் வானை நோக்குமின்! வானை நோக்குமின்"

வான்சாஸ்திர சரித்திரம் முற்றிற்று.

ஊழும் முயிற்சியும் :—"ஒருவன் உட்கார்ந்து கொண்டால் அவன் ஊழும் உட்கார்ந்து கொள்ளும்; அவன் எழுந்து இருந்தால், அவன் அதிர்ஷ்டமும் எழுந்திருக்கும்; ஒருவன் சோர்ந்து படுத்தால், அவன் ஊழும் படுத்துவிடும்; ஒருவன் மேல் நடந்தால், ஊழும் மேல் நடக்கும். ஆதலினால், ஏ ரோஹிதா! கிளம்பு, புறப்படு. ஒருவன் சோர்ந்து படுத்தால், கலி அவனை விடவே விடாது; விழித்து எழுந்து வீற்றிருப்பவன்பாடு துவாபர யுகமாகும்; எழுந்து நின்றால் திரேதா யுகம்; நேர்வழியே மேல் நடப்பவன்பாடோ எப்பொழுதும் சத்திய யுகமே. ஆதலினால், ஏ ரோஹிதா! மேல் நடப்பாயாக."—ரிக்வேதம்.

---

* From E. W. Maunder's *The Science of the Stars.*

தாவர மாம்சபக்ஷிணிகள்.

[சென்னை பிரஸிடென்ஸி கலாசாலையில் தாவர சாஸ்திர போதகரான ம-ா-ா-ஸ்ரீ R. கோபாலையரவர்கள் M. A; L. T. எழுதியது]

தாவரங்களின் உணவைப்பற்றியும் தமக்கு வேண்டியதை அவை எவ்விதம் சேகரிக்கின்றன வென்பதைப்பற்றியும் சென்ற சஞ்சிகையில் கூறினோம். தாவரங்களுக்கு வேண்டு முணவு சாதாரணமாகப் பிரயாசையின்றிக் கிடைக்குமென்றாலும், மிகவும் சதுப்பு நிலங்களில் உள்ள சில செடிகளுக்கு வேண்டிய நைத்ரஜனம் சம்பந்தப்பட்ட சில பதார்த்தங்கள் பூர்ணமாய் அவ்வகைப் பூமியில் கிடைப்பதில்லை. சொற்ப வரும்படியுள்ளவன் தன் வரும்படியைப் பலவிதமாக விருத்தி செய்ய முயல்வானன்றோ? அதுபோலவே தம் தேக அமைப்புக்கு வேண்டிய பொருள்களைப் பூமியிலிருந்து சேகரிக்க முடியாத ஸ்திதியிலிருக்கும் சிற்சில செடிகள், தம்மிடத்தில் வரும் சிறிய ஜந்துக்களைக் கொன்று, அவைகளின் தேகத்திலுள்ள ஊன் பதார்த்தத்தை அபகரித்துக் கொள்ளவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இப்படி மாம்சபக்ஷிணி எனப்படும் செடிகள் எல்லாத் தேசங்களிலும் உள. ஆயினும் முக்கியமாய் இந்தியா, சுமாட்ரா, தென் அமெரிக்கா என்னும் உஷ்ண தேசங்களிலுள்ள சதுப்பு நிலங்களில் விசேஷமாய்க் காணப்படுகின்றன.

இவ்வகைச் செடிகள் பல ஜாதி ஜந்துக்களையும் இருந்தவிடத்திலிருந்தே பிடித்து உபயோகப்படுத்தும் சக்தியுள்ளன. மனிதனுக்கு எவ்விதம் சிற்சில தின் பண்டங்களில் அதிக விருப்பமோ அதைப் போலவே மாம்சபக்ஷிணிகளாகிய செடிகளுக்கும் சில ஜந்துக்களை உண்ணுவதில் அதிக ஆசைபோலும்.

தம் கொலைத்தொழிலைப் புரிய இவ்வகைச் செடிகள் செய்து கொண்டிருக்கும் ஏற்பாடுகளைக் கவனித்தால், வேடர் தமக்கு வேண்டிய மிருகங்களையும், புள்ளினங்களையும் கைப்பற்றும்படிச் செய்யும் எத்தனங்களை அவமானப்படுத்துமென்றே சொல்லலாம். காட்டில் வாழும் பெரிய மிருகங்களை ஆட்டிறைச்சி முதலிய தின்பண்டம்

வைத்து ஆசைகாட்டுவதும், நீரில் வாழ்வனவாகிய மீன் முதலியவை களைக் கவரத் தூண்டில் விடக்குக்கள், வலைகள் முதலியவற்றை உப யோகப்படுத்துவதும் நமக்குத் தெரிந்த விஷயங்களே. அதைப் போலவே நாம் பேசி வரும் செடிகளும் பல ஏற்பாடுகள் செய்து தமக்கு வேண்டும் ஜந்துவாகிய இரையைத் தேடிக் கொள்கின்றன.

மேற்கூறியதை இரண்டு உதாரணங்களால் விளக்குவோம்.

"சன்டியூ" (Sundew) எனப்படும் சிறிய செடியை, தென்னிந் தியாவில் நீர்நிறைந்த வயல்களில் சாதாரணமாகக் காணலாம். இதை மக்கஜாலி என்று வழங்குவதுமுண்டு. இது மிகச் சிறியதாகினும் அழகில் சிறந்ததே. பார்க்கச் சிறியதாயும் தொடுமளவில் ஒடியு மென்ற தோற்றம் உள்ளதாயும் காணப்படும். இச்செடிகள் பல சேர்ந்து கும்பலாய் ஒருங்கே வளரும் தன்மையன; இலைகள், தரை யோடு தரையாய், தண்டின் நாலா பக்கத்திலும் வட்டமாய் அமைக் கப்பட்டிருக்கும். செடியின் தண்டு இலைகளின் நடுவிலிருந்து 5-6 அங்குலம் நேராக உயர்ந்து, நுனியில் புஷ்பக்கதிர் உள்ளதாயிருக் கும். (1-ம் படத்தைப் பார்க்க.) இலைகளின் மேற்பாகத்தில் பல மயிர்கள் அடர்ந்துள்ளன. ஒவ்வொரு மயிரின் நுனியிலும் சிறிய பிசின் துளி ஒன்று காணப்படும். இத்துளிகள், புற்களின் நுனிகளி லுள்ள பனித் துளிகள் சூரிய கிரணங்கள் படும்போது பிரகாசிப்பது போலப் பிரகாசிக்கும் தன்மையன. (2-ம் படத்தைப் பார்க்க.)

அங்குமிங்கும் பறந்து செல்லும் சிறு "பூச்சிகள்" மின்னிக் கொண்டிருக்கும் பிசின் துளிகளைக் கண்ணுற்று மதுவென்று மயங்கி, அபாயமென்று முன்பின் யோசியாமல், இலைகளின்மேல் வந்து அம ரும். அழகாயுள்ள தாமரைத் தடாகத்தையும், சப்தமின்றி நின்றோ டும் ஆற்றையும் நம்பலாகாது என்பதுபோல, இச்செடியின் அழகிய பூக்களும், தெளிந்த பிசின் துளிகளின் பிரகாசமான தோற்றமும் இலை களின்மேல் உட்காரும் பூச்சிகளின் வாழ்வு முடிவுக்குக்காரணமாகும்

பறந்து வந்து அமர்ந்த 'பூச்சி', பிறகு பயந்து தன்னைவிடுவித்துக் கொள்ளக் கால்களைப் பலமுறை உதறி எவ்வளவு முயன்றாலும் வீண் முயற்சியே ஆகும். பக்கங்களிலுள்ள மயிர்கள் மெதுவாக உட்பக் கம் வளைந்து, தம் நுனியிலுள்ள பிசின் துளிகள் 'பூச்சி' யின் மேல் பட்டு, முற்றிலும் பிசுக்கால் சூழும்படி செய்விக்கின்றன. (3-ம் படம் பார்க்க.)



1. SUNDEW.
இயற்கைத் தோற்றம்.



2. தனித்த இலை-X-8
மயிர்களின் நுனிகளில் பிசின்
துளிகளைக் கவனிக்க.



3. தனி இலை.
பூச்சி அமர்ந்து மயிர்களால் கவரப்பட்ட
தோற்றம்.

இம்மாதிரிப் பிசுக்கினால் மூடப்பட்ட 'பூச்சி' தனது பக்கங்களி

னுள்ள மூச்சு, விடும் துவாரங்கள் அடைபட்டு மூச்சுவிட முடியாமல் மாண்டு போகின்றது. இவ்விதம் கொல்லப்பட்ட பூச்சியின் தேகம் பிசின் துளிகளின் சக்தியினாலேயே ஜீர்ணிக்கப்பட்டு, அதன் சார பதார்த்தம் உள்ளிழுக்கப்படுகிறது. கொஞ்ச நேரத்தில் இலைகளும் மயிர்களும் நிமிர்ந்து முன் ஸ்திதியைப் பெறுகின்றனவென்றால், இச் செடி, ஆவின் தோல் போர்த்து அடுபுலித் தொழில் செய்யும் சில மானிடரை ஒக்குமெனலாகாதோ?

இம்மாதிரியாக மாம்சபக்ஷணஞ் செய்யும் செடிகள் நிலத்தில் மட்டுமன்று, நீரிலும் உள.

'உட்ரிகுலேரியா' (Utricularia) என்று வழங்கப்படும் செடி பாசிபோன்றது. இது குளத்திலும், குட்டையிலும், கொடிப்பாசி போன்று மிதப்பதைக் காணலாம்.

இச்செடியில் ஒரு சிறு பாகம் நாலாவது படத்தில் வரையப் பட்டுள்ளது. இலைகள் மயிரைப்போல் மெல்லியதாயிருக்கும். இடை இடையே முட்டை வடிவமுள்ள பைகள் போன்ற உறுப்புக்கள் உண்டு. இப்பைகள் உள்ளதினாலேயே இச்செடிக்கு (bladderwort) "பைச் செடி" என்ற பெயர் வந்தது போலும். இப்பைகளெல்லாம் செடி நீரில் மிதப்பதற்காகவே உபயோகப் படுகின்றன வென்பார் சிலர். ஆனால் யதார்த்தத்தில் பைகள் ஒவ்வொன்றும் சில நீர்ப்பூச்சி களைப் பிடிப்பதற்கு ஏற்பட்ட ஒரு இயந்திரம், (வலை) என்றே கூற லாம். செடியில் ஒரு சிறு துண்டிலுள்ள இரண்டு பைகளின் தோற் றம் இயற்கைப் பருமனுக்குச் சில மடங்கு அதிகரித்து 5-வது படத் தில் வரையப்பட்டிருக்கிறது.

6-வது படத்தைக் கவனிக்க. இது ஒரு தனிமையான பை. அநேக தடவை பருமனக்கக் காட்டப்பட்டிருக்கிறது. வடிவத்தில் முட்டையை ஒத்திருக்கிறது. ஒருபுறம் மூடப்பட்டு மற்றொரு பக்கத் தில் குதிரைலாடம் போன்ற வரம்புள்ளதாயிருக்கிறது. வரம்பின் ஓரங்களினின்று முட்கள் போன்ற மயிர்கள் மீசைபோல நீண்டுள் ளன. வரம்பினுள்ளடங்கியிருக்குமிடம், பையினுள் செல்லும் வாயே. இவ்வாய் தட்டுப்போன்ற கபாடத்தினால் மூடியிருப்பதைக் காணலாம். இக்கதவு உட்புறம் திறக்குமே தவிர வெளிப்பக்கம் திறவாது.

இச்செடி வாழும் நீரில் எப்பொழுதும் பற்பல சிறு ஜந்துக்கள் வாழ்வது சகஜம். இப்பிராணிகள் அங்குமிங்கும் இரைதேடித் திரியும்



4. பைச் செடி.



5. இரண்டு பைகள்.



6. தனிப் பை—மிகப் பெரிதாக்கிய தோற்றம்.

போது பைகளின் கபாடங்களினருகில் சிறிது தங்கி உள்ளே யாதாவது தீனி கிடைக்கலாமென்ற எண்ணம் கொண்டு கபாடத்தைச் சட்டென்று விலக்கி உள்ளே நுழையும். கபாடங்களும் ஜந்துக்கள் உட்செல்ல வேண்டுமென்றே அமைக்கப்பட்டுள்ளதால் எளிதில் விலகி இடங்கொடுக்க,ஜந்து சரேலென்று உட்புகும்.உட்சென்ற பிராணிகள் திடுக்கிட்டுப் பலமுறை வெளிவர முயன்று, வரவரச் செயலற்று, முடிவில்மாளும். மாண்ட ஜந்துக்களின் தேகத்தின் ரசம் உள்இழுக்கப்பட்டுச் செடியால ஜீர்ணிக்கப்படுகிறது.

இவைபோன்ற மாம்ச பக்ஷிணியாகிய செடிகள் பல உள. அவைகளைப்பற்றி விஸ்தாரமாக இவ்விடத்தில் கூறுவது அசாத்தியம். அமெரிக்கா கண்டத்திலுள்ள நிகராகுவா தீரக்கரையிலுள்ள சதுப்பு நிலங்களில் உள்ள சில மாம்சபக்ஷிணி தாவரங்கள், தம் விழுது போன்ற உறுப்புக்களால் பால் கொடுக்கும் மிருகங்களையும் பிடித்துச் சாரத்தை உறிஞ்சி எலும்புகளை உதறிவிடுகின்றனவென்று கூறுகின்றனர்.

மரணம்.

"மரணம் யாது? மரணம் யாது?
கோவை குலைதல், கோப்பை உடைதல்,
அல்லல் நீங்குதல், ஆன்மா விடுதலை,
மீளவும் துன்பில் விழாது கிளம்பி
நாளை எழுந்து நன்று விளங்குற
இன்று சூரியன் ஈங்குமறைதல்,
இதுவே மரணம்! இதுவே மரணம்!

"மரணம் யாது? மரணம் யாது?
களைத்தவர் உறங்குதல். இளைத்தவர் அயர்தல்,
பயந்தவர்க்கு அபயம், புயல் நடு அமைதி,
வீட்டினை அடைதல், விதிப்படி உழன்று
வருந்திய மக்களைத் தம்பால் வரச்சொலும்
கருணைக் கடலாம் கடவுளைச் சேருதல்,
இதுவே மரணம்! ஆம், இதுவே மரணம்."

அ. மா.

பதார்த்த குணாதிசயக் குறிப்புகள்

[சைதாப்பேட்டை ஆசிரியர் கலாசாலைப் போதகர் ம-ா-ா-ஸ்ரீ M. C. S. அனந்தபத்மநாபராவ் அவர்கள் M. A., L. T., எழுதியது.]

(282-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

5. கண்ணும் கண்ணாடியும்.

நம்மைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்களையும் அவற்றின் குணங்களையும், அவைகளில் தோன்றும் இயற்கையான ஒற்றுமை வேற்றுமைகளையும் அறிந்து கொள்ள நமது ஐம்புலன்களே முதற்கருவிகளாகும். இவ்வைம்புலன்களின் சுவபாவத்திற்கும் சூக்ஷ்மத்திற்கும் தக்கபடி நாம் தெரிந்து கொள்வதும் வித்தியாசப்படும். எதாவது ஒன்றைப் பரிசோதிக்கையில் அதைக்கையால் தொட்டும், காதால் துவனிக்கக் கேட்டும், மூக்கால் மோந்தும், நாவால் ருசித்தும், கண்ணால் பார்த்தும் நமக்கு எவ்வளவு தெரிந்து கொள்ளக் கூடுமோ அவ்வளவும் கிரஹிக்கிறோம். இந்திரிய ஞானங்களிலெல்லாம் ருசியும் வாசனையும் மந்தமானவையென்றும், பார்வையும் துவனியும் அதி சூக்ஷ்மமானவையென்றும் சொல்லலாம். காதால் கேட்டும் கண்ணால் பார்த்தும் விஷய வித்தியாசங்களை ஆராய்ச்சி செய்வது போல் வாசனையாலும் ருசியாலும் அவ்வளவு நுட்பமான பேதா பேதங்களைக் கண்டு கொள்ள முடியாது. சுயேச்சையாய்த் திரியவும், வேண்டியவைகளைப் பார்த்து, தேடி, சம்பாதித்துக் கொள்ளவும் அதிக உபயோகமாவது கண்ணேயல்லவா? மிகவும் பிரயோஜனமுள்ளவைகளையும், அதிகமாக விரும்பினவைகளையும், இழப்பதற்குக் கொஞ்சமேனும் இஷ்டப்படாதவைகளையும் கண்ணுக்குச் சமானமாக உலகத்தார் சொல்வது சகஜமே. அதிக தூரத்திலுள்ள நக்ஷத்திர மண்டலத்திலுள்ளவைகளையும் அதிநுட்பமான அணுப்பிரமாணமான ஜெந்துக்களையும் பார்ப்பது, உதவி திருஷ்டிக் கருவிகளினாலேயானாலும் கண்ணின்றி என்ன செய்யலாம்? கண் எல்லாருக்கும் இயற்கையாக அமைந்திருப்பதால் அதன் அருமை சாதாரணமாக ஜனங்களுக்குத் தோன்றுவதில்லை. கண் கெட்ட பிறகு தான் அதன் அருமையின் ஞானமும், சூரிய நமஸ்காரமும்! ஆதலால் அதை எவ்வாறு காப்

பாற்றி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும், கண்கள் நீடித்து உதவும்படி எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பதும், அதற்காகக் கண்ணினுள்ள முக்கியமான பாகங்கள் இன்னவென்பதும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

கண்ணின் சிறப்புக்குத்தக்கபடி நமது உடம்பில் அதன் இடமும் அமைந்திருக்கிறது. ஐம்புலன்களிலும் இது மேலான ஸ்தானம் பெற்று முகத்தில் பந்தோபஸ்தான ஒரு எலும்புக்குகையில் அடங்கியிருக்கிறது. கொஞ்சம் உள்ளடங்கியும் அதனால் பார்வை தடைப்படாதபடியும் இருக்கிறது. நெற்றியின் மேற்புறமிருந்து வியர்வை முதலானவை வழியாதபடி புருவமும் புருவமயிரும்; அதிக வெளிச்சத்தைத் தடுக்கவும், வேண்டுமானபோது தூசி முதலானவைகள் மேலே படியாதபடி மூடிக்கொள்ளவும், ஈ முதலான பூச்சிகளின் ஹிம்சையைத் தடுக்கவும், அகஸ்மாத்தாய் விழுந்த தூசிகளைத் துடைத்துப் பக்கத்தில் தள்ளி விடவும் இமைகளும் அமைந்திருக்கின்றன. வேண்டுமான திசையில் பார்ப்பதற்கென்று கண் சுலபமாகச் சுழலும்படியான அனேக விதமான தசைகள் கண் விழியைச் சுற்றிலும் கோக்கப்பட்டிருக்கின்றன. கண்கள் இரண்டும் முன்பக்கமாகவே இருக்கின்றனவே, நாலு பக்கங்களிலுள்ளவைகளையும் பார்த்தறிய முகப்பக்கம் ஒன்றும், பிடரிப்பக்கம் ஒன்றுமாகப் படைத்திருந்தால் சிலாக்கியமாக இருக்குமே என்று தோன்றலாம். ஆனால் இரண்டு கண்களும் சேர்ந்து பார்த்தால்தான் வஸ்துக்கள் தாங்கள் சுவயமாக இருக்கும் இடத்தின் தூர வித்தியாசத்தை தெரிவிக்கும்படியான பரிமாண வித்தியாசங்களுடன் தோன்றும். ஒரு கண்ணால் பார்ப்பதற்கும் இரண்டு கண்களாலும் பார்ப்பதற்கும் வித்தியாசம், சாதாரணமான ஒரு கட்டடத்தின் படத்தைப் பார்ப்பதற்கும், அக்கட்டடத்தையே கண்களால் நேரே பார்ப்பதற்கும் உள்ள வித்தியாசம் போலவே இருக்குமென்று சொல்லுகிறார்கள். நக்ஷத்திரங்களெல்லாம் தூர வித்தியாசமின்றி ஒரே தூரத்திலுள்ளவை போலவும் நக்ஷத்திர மண்டலமான ஆகாச கோளத்தில் பதிந்திருப்பதாகவும் காணப்படுவதுபோல், ஒரு கண்ணால் பார்ப்பவர்களுக்குப் பக்கத்துள்ளனவெல்லாம் ஒரே தூரத்திலுள்ளனவாகக் காணப்படுமாம். அப்படி ஒரு கண்ணையுடையவர்கள் தொடுதல் நடத்தல் முதலான முயற்சிகளால் தூர வித்தியாசங்களை முதல் முதலில் நன்கு தெரிந்துகொண்டு, காணும் பிம்ப அளவின் வேற்றுமையால் அவற்றின் தூரங்களை

அநுமானிக்கின்றார்களென்று வைத்தியசாஸ்திரம் கற்றவர்கள் சொல்லுகிறார்கள். சற்றேறக்குறைய ஒரேவிதமான காகிதப்படங்களை ஸ்டீரியாஸ்கோப் (Stereoscope) என்னும் இரண்டு பில்லைகளையுடைய கருவியின் வழியே பார்த்தால் கட்டடங்களும் உருவங்களும் சுய உருவத்துடனும் தூரசமீப வித்தியாசத்துடன் காணப்படுகிற மாதிரியே, இரண்டு கண்களால் பார்த்தால்தான் சாதாரணத் தோற்றம் உண்டாகிறதென்று தேகதத்துவ சாஸ்திரிகள் நிரூபித்திருக்கிறார்கள். திருவிழாக் காலங்களில் கோபுரம்போல் அமைத்து வர்ணக் கண்ணாடிகளால் ஆகிய பெட்டி ஒன்றை உயர்ந்த நாற்காலியின்மேல் வைத்துத் தூக்கிக்கொண்டு தெருத் தெருவாய்ச்சென்று, காசி, ஜகன்னாத் முதலான இடங்களிலுள்ள விநோதக்கட்டிடம், தேர் முதலான விநோதக் காட்சிகளை இருப்பதுபோல் காலணாவுக்குக் காட்டுகிறவன் உபயோகிக்கிறது இந்த யுக்தியே. ஆதலால் இரண்டு கண்களும் ஒரு பக்கத்தில் அமைந்திருப்பது அவசியமே. சிலந்திப்பூச்சிகளைப் போன்ற சில பிராணிகளுக்கு மாத்திரம் நாலாபக்கமும் பார்க்கும்படியாகக் கண் அமைந்திருக்கிறதே தவிர, மற்றப் பிராணிகளுக்கெல்லாம் கண் ஒரே பக்கத்தில் அமைந்திருப்பினும், தலையைச் சுழற்றுவதால் முதுகுப் பக்கத்திலுள்ளவைகளையும் பார்த்துக் கொள்ள முடியும்.

கண்ணின் முக்கிய பாகங்கள். கண்விழி உருண்டை வடிவமுள்ளது. அதன் முன்பக்கம் வெண்மை நிறமுடையது. அதன் மத்தியில் வீடுகளின் சுவற்றில் வைத்த ஜன்னல்களைப்போல, வெளிச்சம் உட்செல்லக்கூடிய தெளிவான தகட்டையுடைய கறுப்புவிழி என்பது உள்ளது. இதன் உள்ளடங்கியபாகங்கள் பொட்டகிராப் பெட்டியைப் போன்றன. விழிக்குப் பின்புறத்தை உள் அடுத்து, கறுப்பு விழிக்கு எதிர்ப்புறமாக, காகிதம்போன்ற சன்ன ஜவ்வு ஒன்று உள்ளது. அது பார்வைக்கு அத்தியாவசியமானது. அநேகவிதமான நரம்புகளுடன் அடர்ந்து பரவியது. அதற்கு ரெடினா (Retina) என்று பெயர். இந்த நரம்புப் படைக்கு முன்னும் கறுப்புவிழிக்குப் பின்னும் கண்ணாகிய கோளமத்தியில் மையம் பருத்த கான்வெக்ஸ் வடிவமுள்ள கண்ணாடியைப்போன்ற தெளிவான ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய பில்லை யொன்று உண்டு. உட்புகும் கிரணங்களெல்லாம் இதன் வழிச் சென்று, பிறகு குவிந்து, ரெடினாவின் மேல்படும். குவிந்த கிரணங்களால் வெளியிலுள்ள ஒரு வஸ்துவின் பிம்பம் ரெடினாவில் பட்டால் தெளிவாக அவ்வஸ்து கண்ணுக்குத் தோன்றும். குவிதல்

துறைவாகிப் பிம்பம் ரெடினுவுக்கு முன்னுவது பின்னுவது விழுந்த தானுல், தெளிவான பிம்பம் அதன் மேலில்லாததால் கண்ணுக்குத் தோன்றுவதும் தெளிவாக இராதுஎன்பதைப்பற்றிப்பரீக்ஷைசெய்து பார்க்கும்போது,வஸ்துவின் தூரம் லென்ஸிலிருந்து மாறிக்கொண்டே யிருக்க, பிம்பத்தின் தூரமும் வித்தியாசப்படும் என்று முன்னமே சொன்னேம். அது காரணமாக, ரெடினுவும் கண்ணின் லென்ஸும் கோளத்தில் நிலையாக இடம் பெயராமல் இருந்தால், ரெடினுஎன்னும் படுதாவின்மேல் எல்லா வஸ்துக்களின் பிம்பமும் படாததால், கண்



படம்–I கண்கோளம்.

1. வெள்ளை விழி. 4. ஐரிஸ் என்னும் படுதா.
2. கருப்பு விழி. 5. நரம்புத்திரை.
3. லென்ஸ். 6. நரம்புக் கத்தை.

ணுக்கு எல்லாவஸ்துக்களும் நன்கு தெரியா. கிட்டக் கிடப்பதும் தூரக்காண்பதும் இருந்த விடத்திலிருந்தே தெளிவாய்த் தோன் றும்படி, கண்ணின் லென்ஸின் சக்தியும் வித்தியாசப்படும்படி அமைந் திருக்கிறது. கண்ணுடி லென்சுகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நிலையான பிம்ப (கிரணம் குவியும்) தூரமே உண்டு. ஆதலால் ஒரு லென்ஸின் உதவியால் பிம்பம் படுதாவில் விழுந்ததானுல், மற்றொரு லென்ஸை அதே இடத்தில் வைத்தால், அந்த வஸ்துவின் பிம்பம் அந்தப் படுதாவின் மேலே படாமல், முன் பின் தள்ளி விழும்

வேறொரு வஸ்துவின் பிம்பம் படுதாவின் மேல் விழ வேண்டுமானால் அதிக அல்லது குறைந்த சக்தி (பிம்பதூரம்) உள்ள லென்ஸை உபயோகிக்கவேண்டும். நாம் வெவ்வேறு தூரங்களிலுள்ளவைகளைக் காண, அவற்றின் பிம்பம் ரெடினாவில் வேண்டியபோது படும்படி, நமது கண்ணிலுள்ள லென்ஸை மாற்றவேண்டியதுமில்லை; அல்லது நாமே இடம்விட்டு அந்த வஸ்துவின் பக்கம் போனால்தான் அது தோன்றும் என்பதும் இல்லை. எந்த வஸ்துவைக் கவனிக்க எண்ணுகிறோமோ அதன்பிம்பம்ரெடினாவின்மேல்படும்படிகண்ணினதுலென்ஸ் தன் மையப் பருமனை (ஆகையால் அதன் சக்தியை அல்லது பிம்ப தூரத்தை) மாற்றிக்கொள்ளுகிறது. இந்தச் சக்தி சரியான கண்களி லெல்லாம் சுவபாவமாகவே உண்டு. இந்தக் குணம் உயிருள்ள பிராணிகளின் கண்களிலுள்ள லென்ஸ்களுக்கெல்லாம் உண்டு. இதை (accommodation) இணக்கச் சக்தி என்னலாம். இவ்விணக்கம் எல்லாப் பிராணிகளிலும் ஒன்றுபோல் இல்லை. கழுகு போன்ற சில பிராணிகள் அதிக தூரத்திலுள்ளவைகளையும் நுட்பமாகப் பார்த்தறியக்கூடும். இந்த லென்ஸ் தெளிவுமாறி ஒளியூடுருவவிடாதபடி வெண்மைநிறம் ஆவதுமுண்டு. இது ஒருவிதமான வியாதி. இதற்குச் சிகிச்சை கண் லென்ஸை எடுத்தெறிந்து விட்டு, கண்ணுக்கு முன்புறம் கண்ணாடி லென்ஸை எப்போதும் உபயோகப்படுத்துவதேயாம். லென்ஸ் தெளிவாயிருக்க, ரெடினா கெட்டதென்றால், அதற்குச் சிகிச்சையில்லை. அதற்குத்தகுந்த நரம்பு படர்ந்த திரைச்சீலையைச் செய்ய வைத்திய சாஸ்திரம் சித்திபெறவில்லை.

லென்ஸுக்கு ஒருவிதமான அதிர்ச்சியும் உண்டாகாதபடிக்கும், ரெடினா கெடாதபடிக்கும், லென்ஸுக்கு இருபுறமும் கண்கோளத்தின் உட்புற முழுவதும் ஜலத்தைப்போன்ற தெளிவான இரண்டு வித திரவங்கள் நிரம்பியிருக்கின்றன.

நரம்புப்படையான ரெடினா மிகவும் மெலிவானது. அதிக உஷ்ணம் அல்லது மிகப் பிரகாசமான காந்தவிளக்கு, மின்னல், முதலானவற்றின் ஒளிபட்டால், அது கெட்டுப்போம், எரிந்தும்போகலாம்; நரம்புகள் சோர்ந்து மழுங்கிப்போகலாம். சூரியனை நேரேபார்த்தால் அவ்வொளியின் தீக்ஷணியம் பொறாமல், ரெடினா எரிந்துபோக, பார்க்கும் சக்தியை நாம் இழந்துவிடுவோம். சிறு குழந்தைகளுக்கு முன், இக்காரணத்தைப் பற்றியே சிம்ணி விளக்குக்களை வைக்கக் கூடாதென்றும், வாசிக்கும்போது பிரகாசமான தீபங்களின்

வெளிச்சம் கண்ணில் நேரே படக்கூடாதென்றும் சுகாதார சாஸ்திரத்தில் கண்டித்துச் சொல்வது. ஆனால் கண்ணில் செல்லும் வெளிச்சம் குறைவாகவே இருக்க நினைத்து ஒரு சிறு துவாரத்தைக் கண்ணுக்கு முன்னால் வைத்தால், வெளிச்சக்குறைவால், சில காலங்களில் பிம்பம் பிரகாச மில்லாததால், வஸ்துக்கள் கண்ணுக்குத் தென்படாது. வெளிச்சம் அதிகமான போது குறுகியும், குறைந்த போது துவாரம் பெருத்தும் தானாகவே மாறக்கூடிய துவாரத்தை யுடைய ஒரு படுதா, லென்ஸுக்கு முன் இருந்தால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும். இம்மாதிரியான ஐரிஸ் என்னும் வட்டமான துவாரமுள்ள திரை ஒன்று நமது கண்ணில் லென்ஸுக்கு முன்னே இருக்கிறது. இது பற்பல ஜாதியாரில் வெவ்வேறு வர்ணம் உடையதா யிருக்கும். இவ்வர்ணங்களைக் கொண்டு,மனிதர்களை இந்த இந்த ஜாதியாரென்று பெரும்பாலும் ஊகிக்கலாம். இப்படுதாவின் விநோதமான தசைகள் துவாரத்தைச் சுற்றிலும் அமைந்திருப்பதால், வெயில் அதிகமானதும் சுருங்கி, வெளிச்சம் குறையப் பெரிதாகும் சக்தி அந்தத்துவாரத்துக்கு உண்டு. மற்றொருவன் கண்ணை நாம் பார்த்தால், கறுப்பு விழியில் காணும் துவாரம் வீட்டுக்கு வெளியே இருந்து பார்க்கையில் சிறுத்தும், அறைக்குள் சென்று பார்க்கப் பெருத்தும் தோன்றுவதை, சுலபமாக எல்லாரும் கண்டு கொள்ளலாம். பூனையின் கண் பகலில் ஒரு சிறிய பிளவு போலும், இரவில் பிரகாசிக்கும் அகன்ற துவாரத்துடனும் காணுவதும் இக்காரணத்தினாலே தான். மனம் போன போக்கெல்லாம் சென்று, காலாகாலம் பாத்திர அபாத்திர பேத ஞான மின்றி, சிற்றின்பத்தில் பிரவர்த்திக்கிறவர்களுக்கு, கண்ணில் ஐரிஸென்னும் திரையின் தசைகளின் சக்தி தளர்ந்து, துவாரம் பெரிதாகவே காணுமென்று வைத்தியர்கள் சொல்வார்கள். சுமார் 40வயதுகாலம் வரும்போது, அநேகருக்கு வெள்ளெழுத்தென்றும் சாளேச்வரம் என்றும் சொல்லும் கண்ணின் குறை நேரிடும். அப்போது கடிதங்களிலுள்ள எழுத்துக்கள் தெளிவாகத் தோன்றாமல் மங்கலாகவும், சாதாரண வெளிச்சத்தைவிட அதிகப்பிரகாசமான வெளிச்சங்களில் வாசிக்க முடிந்து, மற்றவேளைகளில் படிக்க முடியாமலும், ஆனால் சாதாரணமாய்ப் பிடித்துக்கொள்ளும் தூரத்தை விட கொஞ்சம் அதிக தூரத்தில் வைத்தால் எழுத்துக்கள் கொஞ்சம் தெளிவாகவும் தோன்றும். இது வயதினால் உண்டாகும் குறைகளிலொன்று. இதற்காக, கான்வெக்ஸ் லென்ஸை கண்ணுக்கு முன் உப

யோகிப்பார்கள். வெள்ளெழுத்தின் ஏற்றக்குறைவுக்குத் தக்கபடி மூக்குக்கண்ணாடியும் அதன் பருமனும் வித்தியாசப்படும். வயதுசெல்லச் செல்ல, ஒருவனுக்கே கண்ணாடிகளை மாற்றவேண்டிவரும்.

இக்காலத்தில் அநேக வாலிபர்கள் கண்ணாடிகளை உபயோகப் படுத்துகிறார்களே, அதேன்? இதுவும் சாளேஸ்வரமா? இவைகளை உபயோகிக்கிறவர்கள் பெரும்பான்மையோர் பள்ளிக்கூடத்தில் வாசிப்பவர்களே. கிராமவாசிகளில் இக்குறை அவ்வளவு இல்லை. இவர்கள் சாதாரணமாகப் பார்ப்பதைவிடப் புத்தகங்களை அதிக நெருங்கவைத்துப் படிப்பார்கள். சாதாரணமாகப் புஸ்தகத்தை பிடிக்கும்தூரம் 10-முதல் 12-அங்குலம் வரையில் தான். அதற்கு நீண்டால் வெள்ளெழுத்தென்றும், அல்லது தூரதிருஷ்டி என்றும், குறைந்தால் பக்க திருஷ்டி அல்லது 'ஷார்ட் சைட்' என்றும் சொல்லுவார்கள். தூரதிருஷ்டிக் குற்றத்தை பரிஹரிக்க மையம் பருத்த லென்ஸ்களையும், பக்க திருஷ்டியை நிவர்த்திக்க மையம் (படம் 2-3-ம் பார்க்க). மெலிந்தவைகளையும் உபயோகப்படுத்துவார்கள். சிறுவர்களுக்குக் கண் கெடுவது புஸ்தகங்களைச் சரியாகப் பிடித்து நேரே பார்த்து வாசிக்காததினாலும், சரியான விளக்குகளைத் தக்க இடத்தில் வைத்



படம்–2. கிட்டப்பார்வை தோஷம்.

1. பக்கத்தில் விழும் பிம்பம். (லென்ஸ் மாத்திரம் இருக்கும்போது)
2. ரெடினாவின்மேல் படும் பிம்பம். (கண்ணாடி உபயோகப்படுத்தும்போது)
3. கண் லென்ஸ். 4. மூக்குக்கண்ணாடி லென்ஸ். 5. ரெடினா.

துப் படிக்காததினாலும், தேசம் முழுவதும் பலவீனமாயிருக்கும் காலத்தில் கண்ணுக்கு அதிக வேலை கொடுப்பதினாலும் உண்டாவதென்று சொல்லலாம். கண்கெடாதபடி பின் வரும் ஏற்பாடுகளைக்



படம்—3. தூரப்பார்வை தோஷம்.
1. கண்ணை மாத்திரம் உபயோகிக்கும்போது பிம்பத்தின் இடம்.
2. கான்வெக்ஸ் லென்ஸை உபயோகிக்கும்போது பிம்பத்தின் இடம்.
3. லென்ஸ் கண்ணில் உள்ளது. 4. கண்ணாடி லென்ஸ்.
5. ரெடினு.

கவனிக்கவேண்டியது உபாத்தியாயர்களும் தாய் தந்தையர்களும் தங்கள் குழந்தைகள் பின் கூறிய முறைகளைச் சரியாகக் கவனித்து வருகிறார்களா என்பதைப் பார்க்கவேண்டும்; குற்றம் குறை ஏதேனும் கொஞ்சம் தோன்றினால், அதை அசட்டைசெய்யாமல், உடனே வைத்தியர்களுக்குத் தெரிவித்து, தகுந்த கண்ணாடிகளை உபயோகிக்கச் செய்யவேண்டியது. மேலும் சமயம் வாய்த்தபோது கெட்ட வாடிக்கைகளின் தீமைகளை எடுத்துரைக்கவேண்டும்.

கவனிக்கவேண்டிய முறைகளாவன:—மங்கலான வெளிச்சத்தில் படிக்கக்கூடாது. ஆகையால் அந்திசந்தி வேளைகளில் படிக்கக் கூடாது. புஸ்தகம் அசைந்துகொண்டிருக்கையில் வாசிக்கக்கூடாது. ஆகையால் நடந்து கொண்டும் வண்டியில் போய்க்கொண்டும் படிக்கக் கூடாது. படிப்பதற்கும் புத்தகத்தை சுமார் 10 அங்குல தூரத்தில் பிடித்து உபயோகிக்கவேண்டும். இரண்டு கண்களும் ஒரே தூரத்தில் இருக்கும்படி புஸ்தகத்தை பிடிக்கவேண்டும். ஒரு பக்கமாகச் சாய்ந்து கொண்டு படுத்துக் கொண்டு வாசிக்கக்கூடாது; செய்தால் ஒரு கண் மாதிரி மற்றக் கண் இராது; சிறு எழுத்துக்களை இரவில் படிக்கக் கூடாது. வேண்டுமென்றால் அதற்குத் தகுந்த அதிகப் பிரகாசமான வெளிச்சம் வேண்டும். விளக்கின் வெளிச்சம் கண்ணில் நேரே படும்படி விளக்கை வைத்திருக்கக்கூடாது. வர்ணக் கண்ணாடிகளை (சிம்னிகளை)யுடைய விளக்குகளை வாசிக்க உபயோகிக்கக்கூடாது. புத்தகங்களைப் படிப்பவர்கள் அடிக்கடி பசுமையான தழைகளையும் மரங்களை

யும் பார்த்து வருவது நல்லது. இரவில் உபயோகிக்கும் விளக்குகளை வாசிப்பவர் கண்ணுக்குப் பின்புறமும் இடது பக்கமும் வைத்திருக்க வேண்டும். சிலருக்கு, தூரப்பார்வைக்கு ஒரு முகுரமும், வாசிப்பதற்கு மற்றொரு கண்ணாடியும் உபயோகிக்கும்படி கண்வைத்தியர்கள் விதிப்பதுண்டு. அப்பேர்ப்பட்ட கண்களில் உள்ள லென்ஸின் இணக்கச்சக்தி மிகக் கொஞ்சதூரத்துக்கும், அதிக தூரத்துக்கும் அமையாமல், கொஞ்ச தூரத்திலுள்ளவைகளைத்தான் பார்க்க முடியும். இது பலவீனத்தினால் வயது சென்ற காலங்களில் வரும். கண்ணில் உண்டாகும் குறைகளைக் காலா காலத்தில் கவனியாமல் விட்டுவிடுவதால் அநேக சிறுவர்களுக்கு கண் அதிக ஊனமாகிவிடுகிறது. இதைச் சமயத்திலே கண்டுகொள்ளச் சில குறிகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமே. புத்தகத்தை 10 அல்லது 12 அங்குலத்துக்குக் குறைந்த அல்லது அதிகரித்த தூரத்தில் பிடித்துக்கொண்டு வாசித்தல், தலையைச் சாய்த்துக்கொண்டு வாசித்தல், தலைவலியென்று அடிக்கடி புகார் செய்தல், கண்ணீர் அதிகமாக வடிதல், முதலானவைகள் முதல் குறிப்புக்களாகும். சிறுவர்கள் தங்கள் தேகத்திலுள்ள கெடுதல்களை அப்போதுக்கப்போது தாய் தந்தையர்களிடத்தில் சொல்லிக்கொள்வதும் இல்லை, இக்குறைகள் கொஞ்சம் கொஞ்சமாகவே தேகத்தில் தோன்றுவதால், இவைகளைக் குறைகளென்று அவர்கள் கண்டுகொள்வதும் இல்லை. ஆதலால் வீட்டிலுள்ள பெரியோர்கள், சிறுவர்கள் கண்ணை அடிக்கடி கவனித்து வரவேண்டியது. ரஸ்தாவில் செல்லும்போது பலமான காற்றடிக்க, தூசி மணல் முதலானவை கண்ணில் படுவதும், ரெயிலில் பிரயாணம் செய்யும் போது கரித்துண்டுகள் கண்ணில் விழுவதும், இதனால் அதிக தொந்தரவுகள் விளைவதும் உண்டு. இமையின் உள்புறத்தில் திரவம் ஒன்று மெதுவாக வெளிவந்து கண்ணின் வெள்ளை கறுப்பு விழிகள் இவை தேய்ப்பதால் கெட்டுப் போகாமல் வைத்துக்கொள்ளும். இதுவே தூசி முதலியவைகளைத் துடைத்து மூக்கின் பக்கமாக மெதுவாகத் தள்ளி விடும். இப்பேர்ப்பட்ட சமயங்களில், அந்தத்திரவம் தானே அதிகமாகச் சுரக்கும். நாம் கண்ணை அழுத்தித் தேய்ப்பதால் தூசியும் கரித்தூளும் விழியின் மேல்தோலைக் கிழித்து, கண்ணைக் கெடுத்து விடும். தூசியைத்துடைக்க வேண்டி நேரிட்டால், மிருதுவான வெள்ளைத் துணியை நல்ல ஜலத்தில் நனைத்துப் பிழிந்து, மெல்ல விழியின்மேல் துடைக்க வேண்டும். புழுதிபடிந்த அழுக்கு வஸ்திரங்களை உபயோகிக்கக் கூடாது.

(இன்னும் வரும்.)

தமிழ்ச்செல்வம்.

(394-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

25. யுத்த தருமம்.

" ஆவும், ஆன் இயல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென்புலம் வாழ்நர்க்(கு) அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்,
எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்."

—புறநானூறு.

இவை பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய புறப்பாட்டின் முதல் ஐந்தடிகளாம். இவற்றின் பொருள், 'நாம் எமது அம்புகளை விரைய விடப்போகிறோம்; ஆதலினால், அதற்கு முன், ஆவும், பசுப்போன்ற பார்ப்பனரும், மகளிரும், நோயுடையீரும், நும் குடியில் இறந்தோர்க்குச் செய்தற்கரிய பிண்டோதகக்கிரியையைப் பண்ணும் பொன்போலும் பிள்ளைகளைப் பெறாதீரும், நுமக்குச் சேமமாகும் இடத்தைச் சேருங்கள்' என்பதாம். இவ்வாறு பண்டைக் காலத்துத் தமிழரசர் புரிந்த அறப்போர், தற்காலத்தே மேனாட்டில் நிகழும் போருடன் ஒப்பிட்டு நோக்குதற்குரியது.

26. பொறுமை.

" மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியால் வென்று விடல்."—திருக்குறள்.

இதன் பொருள், 'மனச்செருக்கால் தமக்குத் தீயவற்றைச் செய்தாரை, தாம், தமது பொறுமையினால் வென்று விடுக' என்பது. 'தாமும் அவரிடத்துத் தீயவற்றைச் செய்து தோலாது, பொறுமையினால் அவரினும் மேம்பட்டு வெல்க.' இதுவே மகாத்மாகாந்தி கூறும் தருமமென்பதை நோக்குக.

27. இராமனது அழகு.

" பெண்ணில் நோக்கும் சுவையில், பிறர் பிறர்க்கு
எண்ணி நோக்கி இயம்பரும் இன்பத்தை,

பண்ணின் நோக்கும் பராவு அமுதை, பசும்
கண்ணின் நோக்கினர் உள்ளங் களிக்கின்றார்."—

கம்பராமாயணம்,

இராமனைக் கண்ட முனிவர்கள் அடைந்த உளமகிழ்ச்சியை வருணிக்கும் இச்செய்யுளில், இராமனது அழகை, அநுபவித்தவன் பிறனுக்குச் சொல்லமுடியாத போக வின்பத்துக்கும், இன்னிசை இன்பத்துக்கும் கம்பர் ஒப்பிட்டிருப்பது சாலஅழகிது; ஊன்றி நோக்க நோக்க மகிழ்ச்சியையும் வியப்பையும் விளைவிப்பது. 'கவிச் சக்ரவர்த்தி' என்ற பட்டம் இவருக்கன்றோ பொருந்தும்.

அ. மா.

மதிப்புரை.

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்":—திருக்குறள்.

மோஹனதாஸ் காந்தி:—(56 பக்கங்கள். விலை 5 அணா. ஜி. எ. வைத்யராமன் & கம்பெனி-மதராஸ்) தமது அரிய பெரிய குணவிசேஷங்களால் "மஹாத்மா" என்ற பட்டத்தைப் பெற்று விளங்கும் மஹானது திவ்ய சரித்திரம் இது. சுலபமான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

வ்யவஸாயமஞ்சரி:—(118 பக்கங்கள் விலை 12 அணா-ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி-மதராஸ்) வ்யவஸாயத்தைப்பற்றிய 160 உபயோகமுள்ள முறைகளையும் குறிப்புக்களையும் எடுத்துக் கூறுவது இந்நூல். கிருஷிகர்களுக்கும் தோட்டங்கள் உள்ளவர்களுக்கும் மிகப் பிரயோசனமானது.

வால்நீண்ட வரிப்புலியார்.*

முன்பொருகாலத்தில் புலியினங்கள் சேர்ந்து வங்காள தேசத்திலுள்ள சுந்தரவனமென்ற பேர்போன அடவியில் ஒரு மகாநாடு கூடின. நடுக்காட்டில் ஒரு குன்றின்மேல், இப்பெரிய வன விலங்குகள் தம் பற்களின் ஒளி அவ்வடவியின் மந்தார இருளிற் பளபளவெனப் பிரகாசிக்க, அணிமேலணியாய் உட்கார்ந்தன. எல்லாப்புலிகளும் ஒரே மனதாய் அமிதோதரர் என்ற வயது முதிர்ந்த புலியை அக்கிராசனம் வகிக்கத் தேர்ந்தெடுத்தன. கனம்பொருந்திய அமிதோதரரும் கர கோஷ ஆரவார மத்தியில் காம்பீர்ய பாவத்துடன் ஆசனமேற்றுப் பின் வருமாறு பேசலானார்.

"இம்மகா சபையின் அக்கிராசனம் பெறுவதற்கு நான் எத்தவம் புரிந்துள்ளேனோ? அதற்கு என்னைத் தேர்ந்தெடுத்ததற்காக யாவருக்கும் நன்றி கூறுகின்றேன். நமது ஜாதியின் வாழ்நாளில் இது வோர் பெரும் புண்ணியதினம். ஏனெனில் ஸமூஹ முன்னேற்றத்திற்குரிய முக்கிய ஸாதனங்களைப்பற்றி யாலோசனைசெய்வதற்காக, பல்லாண்டு திகழுற்று வாழும் வனதேவதைகளெனப்படும் மாம்சபோஜிகளான நமது பழம்பெருஞ்சாதியின் கியாதிபெற்ற பிரதிநிதிகளெல்லோரும் இன்றிங்குக் கூடியிருக்கிறார்கள்' அந்தோ! அசூயையும் அஹங்காரமும் படைத்த மற்ற ஜந்துக்கள் நம்மைப்பற்றி இல்லாத கதையெல்லாங் கற்பித்திருக்கின்றன. நமக்குள் ஒற்றுமையில்லையாம். ஒருவருக்கொருவர் கலந்து கொள்ளாமல், காட்டில் அவரவர் பாகத்திலேயே பிரிந்திருக்கின்றோமாம். ஒத்துழைக்குந் தன்மைநமக்குக்கிடையாதாம். இது வெறும் பிசகென்று ரூபிப்பது, இணையில்லாத இம்மகா நாட்டின் முக்கிய கருத்துக்களில் ஒன்று. நாம் நாகரிகத்தில் முன்னடையும் வரிசைக் கிரமத்தைக் கவனிக்குங்கால், உலகத்திற் பிரக்யாதிபெற்ற ஜாதிகளுள் நமதும் சீக்கிரத்தில் ஒன்றாகிவிடுமென உறுதியாய்க்கருதுவதற்குத் தகுந்த காரணமிருக்கின்றது. இப்பொழுது நடையுறுவது

---

* பாபுபங்கிம்சந்திர சற்றர்ஜி என்பவர் இயற்றிய "விருஹல்லாங்கூல வியாக்கிராசாரியார்" என்னும் சிறுகதையை, ம-ள-ள-ஸ்ரீ N. இராமஸ்வாமி ஐயரவர்கள் மொழிபெயர்த்தமைத்தது.

போன்ற தக்க ஒத்துழைப்பினால், நம் முன்னோரியற்றி வந்தபடி இதர பிராணிகளை இரையாகுந் தொழிலை இடையூறேது மின்றிச் செழிப்பாய் நடத்திவரவேண்டுமென்பது என் பெரும்விருப்பம். (எல்லோரும் வாலைத்தட்டிக் கோஷம் செய்தல்) என் சகோதரர்களே, இம்மகாநாட்டின் முதற்கருத்தையறிவிக்கின்றேன்:-சென்ற சிலகாலமாக நமக்குள் அறப்பயிற்சி குறைந்து வருகின்றது. இது மிக்க வருத்தத்தைத் தரத்தக்கது. இஃதிங்ஙனமல்லவென்று யாவராலும் சொல்லமுடியாது. ஆயினும் இதன் பரிகாரம் எளிதே. நமக்குள் வித்தியாப்பியாசம் வேண்டுமென்று ஓர் உண்மையான அவாப்பிறந்திருக்கின்றது. இக்காலத்திலோ நானாவித ஜந்துக்களும் கல்வி கற்றிருக்கின்றன. நாமும் ஏன் அவ்வாறு செய்யக்கூடாது. நம் ஜாதியரின் கல்வியில்லாமையையும் ஆவசியங்களையும் ஆராய்ந்து அறிவதற்காகவே இம்மகாநாடு கூடியிருக்கின்றது. இச் சில வார்த்தைகளுடன் நடவடிக்கைகளையாரம்பிக்கின்றேன். பின்வரும் பிரேரணைகளை ஆராய்ந்து நிறைவேற்றும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன்.” இச்சிறிய பிரசங்கத்தின்மீது தமக்குள்ள மதிப்பை அங்கு கூடியுள்ளோர் கர்ஜனை ரூபமாய்க் காண்பித்தனர். அநேக தீர்மானங்கள் வாதத்திற்கு வந்து, நீண்ட பிரசங்கங்களுக்குப்பின் ஒரே மனதாய் நிறைவேற்றப்பட்டன. பேச்சுக்களில் இலக்கணப் பிசகாவது அலங்காரக் குறைவாவது இருக்கவில்லையாயினும், சப்தம் மட்டும் பயங்கரமாகவேயிருந்தது. சப்தத்தின் தொனியால் அக்காடுகள் கூட நடுக்கமடைந்தன. பிரேரணைகள் முடிந்த பின் அக்கிராசனாதிபதி எழுந்து “நண்பர்காள்! இவ்வனத்தில் விருஹல்லாங்கூல வியாக்கிராசார்யர் * என்ற ஒரு கலைஞர் வாசம்செய்கின்றாரென்பது அனேகமாய் நீங்கள் யாவரு மறிந்த விஷயம். அவ்வித்தியோத்பன்னர் இன்றையதினம், ‘மானிட ஜாதியின் இயற்கைக் குணங்கள்’ என்ற ஒரு வியாசத்தை வாசிப்பதாகத் தயை கூர்ந்து ஒப்புக் கொண்டிருக்கிறார்” என்று கூறிற்று.

‘மானிடன்’ என்ற பதத்தைக்கேட்ட மாத்திரத்தில், அங்கும் பிரசன்னமாயிருந்த சிறுவர்களுக்கெல்லாம் பசி தோன்றியது. ஆயினும் விருந்துக்குற்ற வேற்பாடுகளைக் காணாமையினால் இயற்கையாக உண்டான ஆசையை, ஸமயத்திலடக்கிக்கொண்டார்கள். அக்கிராசனரின் வேண்டுகோளுக்கிணங்கி உபன்னியாசக ரெழுந்து

* ‘நீண்ட வாலுடைய புலி’ என்று கருத்து.

யாவர்க்கும் கர்ஜனுவந்தனம் கூறி, பிரயாணியின் மனத்தில் பயமூட்டத்தக்க தொனியில் கீழ் வரும் பிரசங்கத்தைச் செய்தார்:—

"ஸோதர ஸோதரிகாள்!

"மனிதரை ஒரு முறையில் துவிபாத ஜந்துக்களென்னலாம். ஆயினும் சிறகரில்லாததினுல் அவர்களை பக்ஷி ஜாதிகளுடன் சேர்க்க முடியாது. சதுஷ்பாத மிருகங்களுக்குரிய குறிகள் அனேகம் அவர்களுக்கிருக்கின்றன. அவர்களுடைய தேகவமைப்பை ஒருவாறு யோஜிக்குங்கால், அவர்களைச் சதுஷ்பாதிகளுடன் சேர்ப்பதே உசிதமாகுமெனத் தோன்றும். சதுஷ்பாதிகளுக்குள்ள வாய்மையும் பராக்கிரமும் அவர்களுக்கில்லை யென்பது உண்மையே. ஆயினும் இந்த வொரு காரணம் பற்றி அவர்களைப் பறவைகளுடனும் மற்றுமுள்ள கேவலம் துவிபாதிகளுடனும் சேர்ப்பது நன்றாயிராது.

"சதுஷ்பாத மிருகங்களில் அவர்களை வெகுவாய்க் குரங்கிற்கு ஒப்பிடலாம். ஜன்மாந்தரவடைவில், ஜந்துக்களுக்குத் தவறிப்போன அங்கங்கள் வளரவும் அதற்குற்ற வலிமை யுண்டாகவுங் கூடுமென்று சாஸ்திர வித்பன்னர்கள் கூறியுள்ளார். ஆகையால் நாளாவட்டத்தில் மனிதர்களும் வால் வளர்ந்து, வானரங்களுக்கு ஒப்பாவாரென நாம் நம்புதல் தகும்.

"மனிதர் ரக்த புஷ்டியைத் தரும் ருசிகரயான இனிய ஆகாரமாவாரென்பது நீங்கள் யாவரும் அறிந்த விஷயமே." (இவ்வார்த்தையைக் கேட்டவுடனே சபையோர்களெல்லோரும் உதட்டை நக்கிக் கொண்டார்கள்) "சிறந்த நம் ஜாதியாருக்கு அவர்கள் எளிதில் அகப்படுகின்றன ரென்பதும் நீங்களறிந்த விஷயம். மானினத்தைப் போல் ஓடித் தப்பித்துக்கொள்ளுந் தன்மை அவர்களுக்கில்லை. நமது வனங்களில் வாழும் காட்டெருமைகளைப்போல் கொம்புகளாவது, அதிகப் பலமாவது கிடையாது. கருணைக் கடலாகிய ஜகதீசன், அவர்களைப் புலிகளின் உபயோகத்திற்காகவே சிருஷ்டித்திருக்கின்றாரென்பதை எவரும் சந்தேகிப்பதற் கிடமேயில்லை. ஆகையால்தான் தப்பித்துக்கொள்ளவோ அல்லது எதிர்த்துத் தம்மை ரக்ஷித்துக் கொள்ளவோ வேண்டுங் குணங்களின்றி மனிதர் படைக்கப்பட்டனர். உயிர் வாழ்விற்கு ஆவசியமாகிய இயற்கைக் குணங்கள் இல்லாத இப் பலவீனமான பிராணிகள் உலகிலிருப்பதன் காரணம் இஃதொன்றைத்தவிர வேறிருக்க முடியுமென ஊகிப்பதரிது. வீண் வாதமின்றி

அவர்கள் உணவிற்கு நல்ல வஸ்துவென ஒப்புக்கொள்வோம். அனேக காரணங்களை யுத்தேசித்து, நாமவர்களிடத்து அதிகப் பிரியம் வைத்திருக்கின்றோம், அவற்றுள் முக்கியமாய் நரமாம்சத்தின் வளமையை யுத்தேசித்து அவ்வாறு செய்கின்றோம். ஆயினும், உங்களுக்கு மிக வியப்பைத் தரத்தக்கது ஒன்றுளது. அது யாதெனில், இப்பிராணிகளும் நம்மிடத்தில் அன்பு பாராட்டுகின்றன. அதை இவ்விடம் பிரசன்னமாயிருப்பவரில் எவரேனும் சந்தேகிப்பாராகில், எனக்கு நேர்ந்த ஒரு சம்பவத்தினால் அதை ரூபிக்கின்றேன். இச்சபையிற் கூடியிருப்பவர்களைக் காட்டினும் யான் அதிகமாய் ஸஞ்சாரம் செய்து அறிவுற்றிருக்கின்றேனென யான் அகந்தை பாராட்டாமற் கூறலாம். எனது தேச ஸஞ்சாரத்தில், ஒருநாள், இவ்வனங்களின் வடபாகத்தை யடைந்தேன். அப்பொழுது பசுக்கள், மனிதர்கள், இன்னுமிவைபோன்ற சுரக்ஷண சக்தியில்லாத தீங்கற்ற ஜீவப்பிராணிகள் வசிக்கும் தேசத்திற்குப் போனேன். அங்குள்ள மனிதர் இரண்டு வர்ணத்தைச் சார்ந்தவர்; அதாவது கறுப்பும் வெள்ளையும். ஒருநாள் 'உத்தியோக' நிமித்தம் வெளியிற் சென்றேன்''

உடனே மகாதம்ஷ்டிரன் என்ற புலி குறுக்கிட்டு 'உத்தியோகம்' என்ற சொல்லின் கருத்து என்னவென்று நான் கேட்கலாமோ'' என்று வினவ, உபந்யாசகர் பதிற் சொன்னதாவது:—

''சுருக்கிச்சொல்லின்'உத்தியோகம்' என்றால் உணவு தேடுதல். நாகரிகம் வாய்ந்த ஜாதியரெல்லாம் இக்காலத்தில இந்தப் பதத்தைத்தான் உபயோகித்து வருகின்றனர். ஆகினும், உலகவியாபகமாகிய இத்தொழிலை எப்பொழுதும் இப்பதத்தினால் உரைப்பது தவறாகும். பெரிய மனிதர்கள் விஷயத்தில் இது நன்கே பொருந்தும். கீழ்த்தர ஆட்கள் ஆகாரார்த்தமியற்றும் தொழிலிற்குக் களவு, வீட்டுவேலை, இழிதொழில், யாசகம் என்பார்கள். பொய்யர் செய்யும் உத்தியோகத்திற்குத் திருட்டென்பார்கள். பலாத்காரமாய்த் திருடுபவர் 'கொள்ளைக்காரர்' ஆவார். ஆனால் கொள்ளைக்காரர் என்று கண்டவாறு சொல்லக்கூடாது. அதற்குப் பதிலாக 'பராக்கிரமசாலிகள்' என்ற பதத்தால் அழைக்கும் சமயங்கள் சிலவுள. சிக்ஷைக்குட்படக்கூடிய பறி முதல் செய்கைகளுக்கு மாத்திரந்தான் 'கொள்ளை' என்னலாம். மற்றவெல்லாம் மேற்கூறிய 'பராக்கிரமம்' என்ற பதத்திற்குட்பட்டவை. சபைகளிலும் சமூகத்திலும் இவையெல்லாம் நீங்கள் நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை வேண்டிக்

கொள்கின்றேன். இல்லாவிடின் உங்களை அநாகரிகரென்பார்கள். ஆனால், என்மட்டிலும், யான் ஒரு தீர்மானத்திற்கு வந்துள்ளேன். அதாவது, அனாவசியமான வித்தியாசங்களின்றி 'உதரபூஜை' என்ற ஒரே வார்த்தையில் இவையெல்லா மடங்கியிருக்கின்றன வென்பதே.

"இது நிற்க, மனிதர்கள் நம்மிடத்தில் மிகுந்த பக்தி பாராட்டு கின்றனர் என்றேனல்லவா. முன் சொன்னவாறு அவர்கள் வஸதி களின் மத்தியில் நடமாடிக்கொண்டிருந்தேன். இந்த ஸௌந்தரவனத் தின்கண், 'கியானிங் துறைமுகக் கம்பெனி' * ஒன்று சில வருஷங்க ளுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட விஷயம் நீங்கள் கேள்வியுற்றிருக் கலாம்."

மகாதம்ஷ்டிரர் திரும்பவுங் குறுக்கிட்டு 'கியானிங்துறைமுகக் கம்பெனி' என்பது எம்மாதிரியான மிருகமென்று அறியவிரும்பு வதாகக் கூறினர். வால்நீண்ட வரிப்புலியார் பதிற்சொன்னதாவது:—

"அதைப்பற்றி யவ்வளவு தெளிவான ஞானம் எனக்குண் டென்று நான் உண்மையிற் சொல்லமுடியாது. அதன் ரூபத்தைப் பற்றியாவது, எந்த வர்க்கத்தைச் சேர்ந்ததென்றாவது என்னாலறிய முடியவில்லை. ஆனால் அது மனிதரால் சிருஷ்டிக்கப் பட்டதென்றும், அதன் ஆகாரம் மனித ஹிருதய ரக்தமென்றும், இப்போஷணையால் நன்றாய்க் கொழுத்து வளர்ந்திருந்த தென்றும் மாத்திரம் அறிய முடிந்தது. இத்தருணத்தில் நான் ஒன்று சொல்லவேண்டியிருக் கிறது. மானிட ஜாதியர் கொஞ்சங்கூட முன்பின் யோஜியாதவர். பரஸ்பரம் நாசம் செய்துகொள்ளும் வழிதேடுவதிலேயே ஓயாமற் பொழுதைச் செலவிடுபவர். அவர்கள் உபயோகப்படுத்தும் ஆயுதங் களே இதற்கு அறிகுறிகளாயிருக்கின்றன. ஆயிரக்கணக்காய் ஒரு மைதானத்திற் கூடி இவ்வாயுதங்களைக்கொண்டு ஒருவரையொருவர் வதம் செய்து கொள்கின்றன ரென்று நான் கேள்வியுற்றுளேன். இந் தக் 'கியானிங் துறைமுகக் கம்பெனி'யானது பிறரை அழிப்பதற்காகச் சிலமனிதரால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ராக்ஷஸ ரூபமான கருவியென் பது என் அபிப்பிராயம்.

---

* 'மதல' என்ற ஆறு 'ஹூக்லியை'ப் பார்க்கினும் அதிக சௌ கரியங்கள் கப்பலோட்டுவதற்குக் கொடுக்கக்கூடுமென்று கருதி, அதன் மேல் ஒரு துறைமுகங் கட்டுவதற்காக 'கியானிங் துறைமுகக் கம்பெனி' என்று பெயரிட்ட வியாபாரச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. முடிவில் சித்தி பெருமையால் அதிற் பங்கு சேர்ந்தவர்கள் மிக்க நஷ்டமடைந்தார்கள்.

"ஆனல், இது என்னியாசத்திற் சம்பந்தப்பட்டதல்ல- எனக்கிருக்கும் சமயமோ மிகக்குறைவு. அருமையான சங்கதிகள் பல இன்னும் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால் இனிமேற் குறுக்கிடாமலிருக்கும்படி வேண்டுகின்றேன். நாகரிகம் வாய்ந்தசபைகளிற் குறுக்கிட்டுப் பேசுவது சரியல்லவென்பதை நமதக்கிராசனரே சொல்வார்." (அக்கிராசனத்திலிருந்து 'ஆம்' என்ற தலை அசைப்பு வந்தது)

"ஸோதர ஸோதரிகாள்; இந்தக் 'கியாணிங்துறைமுகக் கம்பெனி'யின் வாசஸ்தலமாகிய 'மதல்' என்ற விடத்திற்குச் சென்றேன். அவ்விடத்தில் பலத்த மூங்கிலினல் செய்யப்பட்ட விசித்திரமான கட்டிடத்துக்குள் ஒரு கொழுத்த ஆட்டுக்குட்டியைக் கண்டேன். கதவு திறந்திருந்தது. ஆசையூட்டுமாறு வைத்திருந்த இவ்வுணவை ருசி பார்க்கலாமென்று உட்புகுந்தேன். அஃது ஒரு மாயக்கட்டிடமாயிருந்தது. ஏனெனில், நானுட்புகுந்த அளவில், கதவு தானே மூடிக்கொண்டுவிட்டது. திடீரென்று அனேக மனிதர்கள் பிரசன்னமாயினர். அவர்கள் நடுவே நான் சேர்ந்தமையினல் அளவு கடந்த ஸந்தோஷமடைந்தனர். கூக்குரலிட்டுச் சிரித்தும், மற்றும் அநேக குறிகளாலும் தமது ஆனந்தத்தைக் காண்பித்தனர். என் பலத்தையும் அழகையுங் கண்டு புகழ்ந்தனர். என் பற்களையும், நகங்களையும், விசேஷமாய் என் வாலையும் பார்த்து ஆனந்த பரவசராயினர். சிலர் என்னை 'மச்சான்' என்ற அன்பான பேரால் அழைத்தனர்.

"இவ்வாறு சிலநேரம் ஆரவாரம் செய்து, பின்னர், நான் தற்காலமிறங்கியிருந்த வீட்டுடன்—இவ்வீட்டை அவர்கள் 'பொறியென்பார்—மிக பயபக்தியாய் என்னைத் தூக்கி ஒரு வண்டியின்மீது வைத்தனர். பால் நிறமான இரண்டு கொழுத்த காளைமாடுகள் பூட்டிய அவ்வண்டியானது மெதுவாய் ஊர்கோலம் புறப்பட்டது. அவ்விரு மாடுகளைப் பார்த்த மாத்திரத்தில் எனக்கு நாக்கில் நீரூறப் பசி தோன்றியது. ஆயினும் தற்சமயம் வெளிப்படும் வழி தோன்ருமையால், அப் மாயப் பொறியினுள் என்னைச் சிறைப்பிடித்தோர் எனக்காக வைத்திருந்த ஆட்டுக்குட்டியைச் சிறிது சிறிது புஜித்து ஆறுதலடைந்தேன். முடிவில் அந்நகர் வாசியான ஒரு வெள்ளைமனிதர் வீடு சேர்ந்தோம். அவ்வெள்ளையரும் உடன் வெளியே வந்து, எனக்குத் தக்க உபசாரங்கூறி, நல்ல பலமான இரும்புக் கம்பிகளால் அலங்கரிக்கப்பட்ட வஸ்தியும் அளித்தார். அவ்விடத்தில் தவருமல் தினந்

தோறும் எனக்குப் புது மாம்சமாவது உயிராடாவது நிவேத்தியம் வைத்தனர். என்னுடைய தரிசனத்தினாற் புண்ணியஞ் சம்பாதிக்கலாமென்று பற்பல ஜாதி மனிதரும் அங்கே வந்து என்னைக் கண்டார்கள். ரம்மியமான அந்த ஸ்தலத்தில் வெகு காலம் சௌக்கியமாய் வாசம் செய்தேன். அநேக சௌகரியங்களிருந்ததுபற்றி அநேக ஸந்தோஷமுற்றிருந்தேன். அவ்வாறு சிலகாலம் கழிந்ததும், சுதேச நினைவு பிறந்தது. இவ்வழகான சுந்தரவனந் தன்னை நினைந்தேன் நினைந்தேன், மனங்கரைந்தேன். அன்னே சுந்தரவனத்தாயே, நின்னை மறப்பது மியலுமோ? நின் அழகான வனங்களை நினைந்து நினைந்து அன்னாகாரத்தை வெறுத்தேன். பார்ப்பவரெல்லாம் பயமுற்று நடுங்குமாறு வாய்விட்டழுதேன், வாலை வீசியறைந்தேன். என்னையீன்ற நன்மணி நாடுதனைப் பிரிந்திருந்தகாலம் முழுதிலும் ஒரு நாளாகிலும் வயிறு நிறைய உண்டிலேன். ஆடுகளை வேண்டிலேன். நல்ல பசியின்றி யுண்டிலேன். உறக்கத்தில் ஆகாரத்தை நினைந்திலேன். நான் பட்ட துக்கத்திற்கு அளவேயில்லை. ஸத்தியம் செய்கின்றேன் எலும்பையுந் தோலையும் என்னாகாரத்தை விட்டு ஒதுக்கினேன். சிற்சிலவேளையிற்றான் ஒன்று அல்லது இரண்டு நிறை அதிகமாய்ப் புஜித்துள்ளேன். இது ஸத்தியம்.''

இந்த ஞாபகங்கள் வரவே சிறிதுநேரம் உபந்நியாஸகர் மௌனமாயிருந்தார். அவர் கண்ணீர் விட்டதாக, சபையிற் சிலர் சொன்னார்கள். மற்றுஞ் சிலர், சிலதுளிகள் அக்காய்ந்த மணற்றரையில் விழக் கண்டதாகக் கூறினர். ஆனால், வேறு சிலர், அவை, சிறைவாசத்தில் பிரதிதினமும் தவறாமல் கிடைத்துவந்த ருசியான போஜனத்தை நினைத்ததினால், நாக்கிலிருந்து ஒழுகிய ஜலத்துளிகளாயிருக்கலாமென்று சந்தேகிக்கலாயினர். பிறகு உபந்நியாசகர் தம் நினைவுகொந்து மேற்கூறலானார்,

"இந்த ஸோகஜீவன கிருஹத்திலிருந்து வெளிவந்த விவரங்களைப் பற்றி வளைய வளைய உரைக்க வேண்டுவதில்லை. ஒரு நாள் என் சேவகன் என்னறையைச் சுத்திசெய்தபின்னர், கதவைத் திறந்து வைத்தேகினன். என் மனநிலையை யறிந்தோ, அல்லது, அஜாக்கிரதையாலோ அறியேன். நான் அத்தருணத்தையும், அத்துடனே, வழியேபோன சற்று அதிகமாய் மெலிந்த ஒரு தோட்டக்காரனையும் கைப்பற்றிக்கொண்டு, நமது இனிய நாடு சேர்ந்தேன்.

"மானிட ஜாதியின் குணகுணங்களையும் ஆசாரங்களையும் நன்றாயாராய்ந்தறிவதற்கு வேண்டும் அவகாசங்கள் ஏராளமாயெனக்கு இருந்தன வென்பதைக் காண்பிப்பதற்காகவே, இவ்வளவு விரிவா யென்னனுபவங்களை யுரைக்கலானேன். நான் நேரில் பார்த்தவையன்றி மற்றெதையும் உங்களுக்குச் சொல்லப்புகேன். சிலரைபபோல் சிறிதும் அச்சமின்றிப் பொய்க்கதை கட்டுவது என் வழக்கமல்ல. மனிதரின் ஆசாராதி நடவடிக்கைகளைப்பற்றி நமக்குள் நிகழ்ந்து வரும் கதைகளில் அனேகம் முற்றிலும் பிசகென்று நான் தீர்மானமாய்ச் சொல்வேன். உதாரணமாக, மனிதர் பலஹீனமான ஜீவன்களாயிருந்தும், தம்முடைய வாசத்திற்காகப் பெரிய அரண்மனைகளும் வீடுகளுங் கட்டிக்கொள்கின்றனரென்று இதுகாறும் நம்பியிருக்கின்றோம். நான் வெகுகாலம் அவர் நடுவில் வசித்திருந்தும், ஒருமுறையாகிலும் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதைப் பார்த்ததேயில்லை. அவர்களுக்கு இக்குகைபோன்ற வஸதிகளை நிர்மாணம் செய்யும் சக்தியிருக்கின்றதென்பதற்குச் சாக்ஷியமொன்றுங் கிடையாது. அவர்கள் வஸதிகளெல்லாம் ஜகதீசனால் சிருஷ்டிக்கப்பட்ட மலைகளென்றும், அம்மலைகளில் எண்ணற்ற குகைகளிருக்கக் கண்டு, அறிஞர்களான சில மனிதர் அவற்றைத் தம் வாசஸ்தலமாக்கிக் கொண்டனரென்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

"மானிட ஜாதியர் சர்வபோஜிகள். அதாவது, மாமிசங்களும் காய்கனிகளும் இலை கிழங்குகளும் தின்பவர். அவர்கள் பெரிய மரங்களைத் தின்னார். ஆனால், சிறிய செடிகளை வேரடங்க முழுவதும் புசிப்பர். இச்செடிகளில் மிக்கவிருப்பமுள்ளவர். இது பற்றியே வேலிகளால் பந்தோபஸ்து செய்யப்பட்ட 'வயல்கள்' 'தோட்டங்கள்' எனப்படும் இடங்களில் அவற்றையன்புடன் வளர்க்கின்றனர். ஒருவன் 'வயலில்' மற்றொருவன் மேயலாகாது.

"அவர்கள் பழங்கள், கிழங்குகள், கொடிகள், வேர்கள் போன்றவையெல்லாம் தின்பவர் என்பது யாவருஞ் சம்மதித்த விஷயம். ஆனால் புல் முதலானவற்றைத் தின்கிறார்களோ வென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது, அதில் எனக்கே சிறிது சந்தேகமுண்டு. ஏனெனில் வெள்ளைக்காரர்களும் கறுப்பு மனிதரில் தனவந்தர்களும், தம் வீட்டுத் தோட்டங்களில் ஜாக்கிரதையாய்ப் பசும்புல் வளர்க்கின்றனர். இஃது உணவிக்காகவேதானிருக்கலாம். 'நாடெல்லாங் கெட்டுப்போய்

விட்டது. குதிரைகளும் பெரியமனிதர்களும் சோம்பலாய்ப் புல்லைத் * தின்று திரிகின்றனர்' என்று ஒரு கறுப்பு மனிதன் ஒரு நாள் சொல்லக்கேட்டிருக்கிறேன். ஆகையால் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் புல்லையும் உண்பவரென்று ஒருவாறு உறுதியாய்ச் சொல்லலாம்.

"மனிதருக்குக் கோபம் வந்தால், 'நான் என்ன புல் தின்பவன் என்று நினைத்தையோ' என்பது வழக்கம். தமது ஜீவனோபாயத்தை மறைத்துப் பேசுவது இம்மானிட வர்க்கத்திற்கே இயல்பு. ஆகையால் இச்சொல்லினால் உரோஷந் தைப்பவரெல்லாம் புல் தின்பவரென்றே நிச்சயிக்கலாம்.

"மனிதர், மிருகங்களை ஆராதிப்பவர். அனர்ஹனென் என்பால் அவர்கள் காட்டிய அளவற்ற பக்தியைப் பற்றி உங்களுக்கு முன்பே சொல்லியிருக்கிறேன். அவர்கள் குதிரைகளையும் ஆராதிக்கின்றனர். அவைகளுக்கு வஸதிகள் கட்டிவைத்து, நாள்தோறும் வேளாவேளையில் ஆகாரந் தருகின்றனர். அவைகளுடம்பைத் தேய்த்துப் பேணுகின்றனர். அவைகளுக்கு உடைகளணிகின்றனர். குதிரை, தம்மினும் உயர்தர வர்க்கத்தைச் சேர்ந்ததென்ற உண்மையைத் தாமறிந்துள்ளாரென்பதற்கு இவையெல்லாம் அறிகுறியாகும்.

"இஃதிவ்வாறிருக்க, அவர்கள் ஆடுமாடுகளையுந் தீனிகொடுத்து வளர்க்கின்றனர். பசுக்களிடத்தில் அவர்கள் நடத்தை மிகவினோதமானது. பசுவின் பாலைக் குடிக்கின்றனர். இதை என் கண்ணால் பார்த்திருக்கின்றேன். முன்பு அவர்கள் கன்றுகளாயிருந்திருத்தல் வேண்டுமென்று நமது பழையசாஸ்திரக்ஞர்கள் கூறுகின்றனர். அவ்வளவு தூரம் போக நான் தயாராயில்லை. ஆனால்அவர்கள் பசுவின் பாலைக்குடிப்பது அவர்களுடைய பசுத்தன்மையான புத்திக்குக் காரணமென்னலாம். மாம்சாகாரம் எளிதிற் கிடைப்பதற்காகவே, அவர்கள் பசுக்களையும் மற்றும் ஆடுமாடுகளையும் வளர்க்கின்றனர். இது நேர்த்தியான உபாயம். நாமும் அவ்வாறே மனிதருக்கென்று தொழுக்கள் கட்டி, நரமாம்சத்திற்காக அவர்களை வளர்த்துச் செழிப்பிக்குங் காலத்தை எதிர்பார்க்கின்றேன்.

"குதிரைகளிடத்தும் ஆடுமாடுகளிடத்தும் அவர்களுக்குள்ள அன்பையும் ஆதரவையும் பற்றிச் சொன்னேன். இத்துடன் நிற்கா

* வங்காள தேசத்தில், தம் தேசத்தின் நன்மையை நாடித்தம் கடமையைச் சரிவரச் செய்யாமல் மிருகங்களைப் போல், உயிர்வாழ்பவரை நோக்கிச் சொல்லும் ஏச்சு, 'நீ என்ன புல்லையா தின்கிறாய்?' என்பது.

மல், யானை, ஒட்டகை, கழுதை, நாய், பூனை இவைகளையும் வளர்க்கின்றனர். இன்னும் பறவைகளையுங்கூட வளர்க்கின்றனர். ஆகையால், இதர ஜீவப் பிராணிகளுக்கெல்லாம் ஊழியஞ் செய்ய மனிதர்கள் அடிமைப்பட்டுப் பிறந்தவர்களென்றே தீர்மானிக்கலாம். அவர்களுடைய வஸதிகளின் மத்தியில் அனேக குரங்குகளைப் பார்த்திருக்கின்றேன், இவை இரண்டுவிதமானவை. வாலுள்ளதும் இல்லாததும். வாலுள்ளவை யனேகமாகக் கூரைகளிற்றான் வசிக்கின்றன. தரையிலும் சில பார்த்திருக்கின்றேன். ஆனால் பெரும்பான்மையும் உச்சஸ்தலங்களையே நாடுகின்றன. இவ்வாறு செய்வது ஒருக்கால் ஜாதிக்கர்வத்தாலுண்டாகுந் தவறான கொள்கையாயிருக்கலாமென்று நினைக்கிறேன்.

"அவர்களுடைய ஒழுக்க முறைகள் மிக விநோதமானவை இராஜீய வமைப்பும் ஆச்சரியத்தைக் கிளப்பும். இவை சற்று விரிவாய்ச் சொல்லவேண்டியவை."

இத்தருணத்தில் கனம் அக்கிராசனர், தூரத்தில் ஒரு மான் குட்டியைக் கண்ணுற்று, திடீரென்று ஆசனத்தைவிட்டு ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, அதைத் துரத்திச் சென்றார். (இவருடைய தூரதிருஷ்டியை யுத்தேசித்தே இவருக்கு அக்கிராசன மளிக்கப்பட்டதென்று, இந்தப் படிப்பவருக்கு நான் இங்கே சொல்லவேண்டும்.) அக்கிராசனாதிபதி தமது உபன்னியாசத்திற் கவனம் வைக்காததைக் கண்ட வியாக்கிராசார்யர் சற்று மனம் நொந்து, முகஞ் சிணுங்கினார். இதைக் கவனித்த அதிபுத்திசாலியான ஒரு பிரமுகர் எழுந்து,

"ஐயா, வருத்தப்படவேண்டாம். மிகவும் அவசரமான 'உத்தியோக' நிமித்தம் நமது அக்கிராசனர் போகவேண்டி வந்தது. மான் மந்தை யொன்று அடுத்துவரும்வாசம் நானு முணருகின்றேன்" என்றார்.

இவ்வார்த்தைகளைச் செவியுற்ற சபையோர்களெல்லோரும் வாலைக் கிளப்பிக்கொண்டு, தத்தம் 'உத்தியோகத்தை' நாடிச் சென்றார்கள். சபையுங்கலைந்தது. வியாக்கிராசார்யரும் பின் பற்றினார். இங்ஙனம் முதல் நாள் நடவடிக்கைகள் நினையாதபடி முடிவுக்கு வந்தன. மறுதினம் சபை கூடியது, எல்லோரும் திருப்தியாயுதர பூஜை செய்துகொண்ட பிறகு தான். அப்பொழுது உபன்னியாசகர் எஞ்சியிருந்த தம் வியாசத்தை இடையூறின்றி முடித்தார். மற்றோரதிகாரத்தில் அதனை விவரமாய்க் குறிப்பதே உசிதமாகுமெனக்கருதி, இத்துடன் இதை நிறுத்திக் கொள்கிறோம். (இன்னும் வரும்)

சந்தாதார்களுக்கு அறிக்கை.

இந்தச் சஞ்சிகையுடன் முதலாவது வருஷத்துக்குரிய ஆறு பகுதிகளும் முற்றுப்பெறுகின்றன. நமது ஆதி யுத்தேசப்படிக்கும் வாக்குப்படிக்கும் மொத்தம் 384 பக்கங்களே ஆக வேண்டுமெனினும், அநுபந்தங்கள் உள்பட இந்த முதலாவது தொகுதி 520 பக்கங்களுக்கு மேலாயிருப்பதை நமது நேயர்கள் அறிவார்கள். காகித விலையும் சித்திரப்படங்களைச் செய்விக்கும் கூலியும் அபரிமிதமாயிருந்தும், சந்தா மிகக் குறைவாயிருந்தும், பொது நன்மையையே கருதி பத்திரிகையை இவ்வாறு பெருக்கியும் சிறப்பித்தும் வெளியிட்டிருக்கிறோம். நமது நேயர்கள் இவற்றையெல்லாம் ஆலோசித்து முன்னினும் அதிகமாக நமது முயற்சியை ஆதரிப்பரென்று நம்புகிறோம். இந்தச் சஞ்சிகையை வரப்பெற்றவுடன் அடுத்த வருஷத்துக்குரிய சந்தாவை மணியார்டர் செய்தனுப்பும்படி வேண்டுகிறோம். அங்ஙனம் செய்யாதவர்களுக்கு அடுத்த சஞ்சிகை (II-1) ஒரு வருஷச் சந்தாத் தொகைக்கு V. P. P. மூலமாயனுப்பப்படும். தயை செய்து பெற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

T. V. கோபாலசாமி முதலியார்,

கௌரவ காரியதரிசி,

தமிழர் கல்விச் சங்கம்.